தமிழில் நோக்கு நூல்கள்

மா. பார்வதி அம்மாள்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் 613 010

தமிழில் நோக்கு நூல்கள்

முனைவர் மா. பார்வதி அம்மாள்
உதவிப் பேராசிரியர் (பணி நிறைவு)
அகராதியியல் துறை
தமிழ்ப்பல்கலைக்கழகம்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 010

ISBN : 978-81-7090-452-6

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு எண் : 409

நூல் : தமிழில் நோக்கு நூல்கள்

ஆசிரியர் : முனைவர் மா. பார்வதி அம்மாள்

மொழி : தமிழ்

பொருள் : அகராதி

பதிப்பு : திருவள்ளுவராண்டு 2046, ஆவணி
(செப்டம்பர் 2015)

பக்கம் : 88 + 8

அளவு : டெம்மி 1/8

தாள் : டிஎன்பிஎல் மேப்லித்தோ 16 கிலோ

படிகள் : 1000

விலை : உரூ. 110.00

அச்சு : தமிழ்ப் பல்கலைக்கழக
மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர்.

முனைவர் க. பாஸ்கரன
துணைவேந்தர்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 010

அணிந்துரை

''தமிழில் நோக்கு நூல்கள்'' என வெளிவரும் இந்நூல் ஆய்வாளர்களுக்கும், தமிழ் மொழியினை முறையாகப் பயில விரும்புவோர்க்கும் சிறந்த கையேடாக அமைந்துள்ளது. தமிழ் மொழியின் ஆழ, அகலங்களை வெளிக்கொணரவும், புதிய கோணத்தில் ஆய்வதற்கும் நோக்கு நூல்கள் எனும் கருவி நூல்கள் அவசியமானதாகும். தாம் எடுத்துக் கொண்ட கருதுகோளை மெய்ப்பிப்பதற்கும், கோட்பாடுகளைப் புரிந்து கொள்வதற்கும் ஓர் ஆய்வாளருக்குக் கலங்கரை விளக்கமாக அமைவன கருவி நூல்களே என்றால் அது மிகையில்லை.

கலைக்களஞ்சியங்கள், அகராதிகள், சொல்லடைவு, சொற்பட்டியல், தொடர் அடைவு, பொருள் அடைவு, சொற்களஞ்சியங்கள் என ஏழு வகையாக அமையும் நோக்கு நூல்கள் குறித்து மிகச்சிறப்பாகத் தொகுத்துள்ள முனைவர் மா. பார்வதியம்மாள் அவர்கள் பாராட்டிற்குரியவர்.

இந்நூலில் ஆசிரியர் தொல்காப்பிய உரியியலுக்கும், நிகண்டுகளுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை நுண்ணிதின் ஆராய்ந்திருப்பதும், அகராதிகளின் பல்வேறு வகைகளைப் பட்டியலிட்டும் அதற்குரிய தெளிவான விளக்கத்தை ஆங்காங்கே அமைத்திருப்பதும் கற்போர் மனதில் எளிமையாகப் புரியும் வண்ணம் அமைந்துள்ளன. மேலும், அகராதிக்கும் சொல்லடைவுக்குமான வேறுபாடுகளை மிகத்தெளி

வாக விளக்கியிருப்பதும் இந்நூலாசிரியரின் அகராதிப் புலமையைக் காட்டுவதாக அமைந்துள்ளது.

நூலின் ஆங்காங்கே கோட்டு வரைபடம் மூலம் நிகண்டுகள், அகராதிகள், சொல்லடைவுகள், சொற்களஞ்சியங்கள், பொருட்களஞ்சியங்கள் ஆகியவற்றை விளக்கியிருப்பது அறிமுக நிலையில் உள்ளவர்களும் புரிந்துகொள்ளும் வண்ணம் அமைந்துள்ளது. இறவாத புது நூல்கள் தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும் என்பார் பாரதியார். அவ்வாறு புது நூல்களை இயற்றுவதற்கு நோக்கு நூல்களின் தேவை அளவிடற்கரியது. புதுப்பொங்கலில் பழைய உப்பு சுவை தருவதுபோல புதுமையான கருத்துகள் அடங்கிய தரமான தமிழ் நூல்கள் வெளிவருவதற்கு நோக்கு நூல்கள் இன்றியமையாதன என்பது இந்நூல் வழி உணர முடிகிறது.

தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள ஏராளமான கலைக்களஞ்சியங்களின் தேவையை, சிறப்பை, வளமையை முனைவர் மா. பார்வதியம்மாள் அவர்கள் யாத்துள்ள 'தமிழில் நோக்கு நூல்கள்' பறைசாற்றும் என்பதில் ஐயமில்லை. இதற்கென இந்நூலாசிரியரைப் பாராட்டுவதில் மகிழ்கிறேன்.

ஆய்வாளர்கள், ஆசிரியப் பெருமக்கள், மாணவர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பு மக்களும் படித்துப் பயன் பெறும் வகையில் அரும்பெரும் செய்திகளை உள்ளடக்கிய இந்நூலை தமிழ்கூறும் நல்லுலகத்திற்கு மகிழ்ச்சியுடன் வழங்குவதில் தமிழ்ப் பல்கலைக்கழகம் பெருமை யடைகிறது. இந்நூலை வாங்கிப் பயன்பெறுமாறு வேண்டுகிறேன்.

க.பாஸ்கரன்

10.09.2015
தஞ்சாவூர்.

முன்னுரை

இக்கால கல்வி அறிவியல் அடிப்படையில் அமைந்த கல்வி. கல்விமுறை அறிமுகமான காலத்தில் இருந்து தமிழில் ஏராளமான பாடநூல்களும், நோக்கு நூல்களும் எழுதப்பட்டு வருகின்றன. ஒரு மாணவன் ஒரு பாடநூலைத் தெளிவாகக் கற்றுக் கொள்வதற்கும், ஓர் ஆசிரியரின் ஒரு மாணவனுக்குத் தான் கற்பிக்கின்ற பாடத்தைத் தெளிவாகக் கற்றுக் கொடுப்பதற்கும் அந்தப் பாடநூல் பற்றிய தெளிவான அறிவு வேண்டும். அந்தப் பாடநூலில் இருவருக்கும் (கற்பவர், கற்றுக்கொடுப்பவர்) எந்த ஐயப்பாடும் இல்லாத நிலை வேண்டும். அதற்கு நோக்குநூல் அல்லது பார்வை நூலின் தேவை ஏற்படுகின்றது. நோக்கு நூலின் உதவி இன்றி எந்தப் பாட நூலையும் தெளிவாகக் கற்றுக்கொள்ள இயலாது என்னும் நிலையிலேயே இக்கால கல்வியின் நிலை காணப்படுகின்றது. கல்வியின் தரம் உயர உயர பார்வை நூல்களின் தேவை அதிகப்படுவதைக் காணலாம்.

நோக்கீட்டு மரபை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படுபவை நோக்கு நூல்கள் ஆகும். எனவே, அவை,

1. எளிய பயன்பாட்டு நோக்கு
2. வரையறுத்த நெறிமுறை

ஆகிய இரண்டின் அடிப்படையில் சொற்களைத் திரட்டித் தருகின்றன. பல்வேறு அடிப்படையில் உருவாகும் நோக்கு நூல்களைக் காலம், மொழி, சொல், சொற்களின் பொருள் வரையறை, இயல்பு, பயன்பாட்டாளரின் நோக்கம், பதிவுகளின் வரையறை போன்ற பல்வேறு அடிப்படையில் வகைப்படுத்தலாம். இந்நோக்கு நூல்கள் பொதுவாக ஏழு வகையாகப் பாகுபாடு செய்யப்படுகின்றன. அகராதி, கலைக்களஞ்சியம், சொல்லடைவு, பொருளடைவு, சொற்பட்டியல், சொற்களஞ்சியம் என்பனவாகும்.

நோக்கீட்டு அடிப்படையில் முழுமையான அகர நிரலுடன் தொகுக்கப்பட்டவை அகராதிகள். மொழியின் வளர்ச்சியினையும், பொருளின் பல்வேறு நிலைகளையும் அறிந்து தெளிவு பெறுவதற்கும் அகராதிகள் பயன்படுகின்றன. மொழியின் சொற்காப்பகங்களாகவும் அகராதி விளங்குகின்றது.

கலைக்களஞ்சியம் கட்டுரைகளின் தொகுப்பாய் உள்ளமையால் நோக்கீட்டு நூலாய் மட்டுமே அன்றிப் படிப்பதற்கான தகவல் களஞ்சியமாகவும் விளங்குகின்றது.

சொற்களின் சூழல் மற்றும் சொல் வரும் இடங்கள் கொடுக்கப்படுவதால் தொடரடைவு, சொல்லடைவு வழியாக சொற்கள் குறித்த செய்திகள் அனைத்தும் அறிந்து கொள்ள முடிகின்றன. ஒருமொழி குறித்த முழுமையான ஆய்வும் இவற்றின் மூலம் செய்ய முடிகின்றது.

சொற்களைச் சொல்லுறவு அடிப்படையில் சொற்களம் மற்றும் சொற்குவியலாகப் பிரித்துத் தருவது சொற்களஞ்சியம் ஆகும். இதுவரை உள்ள நோக்கு நூல்கள் போலன்றி சொற்களஞ்சியத்தில் கருத்திலிருந்து சொல்லுக்குப் போகும் நிலையைக் காணலாம். படைப்பாளனுக்கு இச்சொற்களஞ்சியம் பெரிதும் பயன்படுகின்றது.

நோக்கீட்டு நூல் வரிசையில் முதன்மை நிலையில் உள்ள அகராதி கலைக்களஞ்சியம், சொல்லடைவு, சொற்களஞ்சியம் எனும் நான்கும் மட்டுமே இவண் விளக்கம் செய்யப்பட்டுள்ளன.

தமிழ்ப் பல்கலைக்கழக அகராதியியல் துறையில் குறுங்கால ஆய்வுத் திட்டத்தில் ஆய்வு செய்ய அனுமதி அளித்த தமிழ்ப் பல்கலைக்கழக முன்னைத் துணைவேந்தர் முனைவர் ம. இராசேந்திரன் அவர்களுக்கும், இந்நூல் வெளி

வர உறுதுணையாக உள்ள மாண்பமை துணைவேந்தர் முனைவர் **க. பாஸ்கரன்** அவர்களுக்கும் பதிவாளர் முனைவர் **சே. கணேஷ்ராம்** அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆய்வேடு சிறப்புற நடந்தேற வாய்ப்பளித்தும் ஆய் வுக்குத் தேவையான உதவிகளையும் வழங்கிய அகராதியியல் முன்னைத் துறைத்தலைவர் முனைவர் எச். சித்திரபுத்திரன் அவர்களுக்கும் என் நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

இந்நூலைச் சிறப்புற அச்சிட்டு உதவிய தமிழ்ப் பல் கலைக்கழகப் பதிப்புத்துறை துணை இயக்குநர் முனைவர் **ஞா. பழனிவேலு** அவர்களுக்கும் பதிப்புத்துறையில் பணி புரியும் அனைத்துப் பணியாளர்களுக்கும் நன்றியைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

இந்த ஆய்வு சிறப்புற நடைபெற ஒத்துழைத்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் எனது நன்றியைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

-மா. பார்வதி அம்மாள்

பொருளடக்கம்

1.	தமிழ்க் கலைக்களஞ்சியம்	*1*
2.	தமிழ் அகராதி	*19*
3.	தமிழ்ச் சொல்லடைவுகள்	*59*
4.	தமிழ்ச் சொற்களஞ்சியம்	*79*
	துணைநூற்பட்டியல்	*85*
	கலைச்சொற்கள்	*87*

தமிழ்க் கலைக்களஞ்சியம்

இலக்கணம், இலக்கியம், நாடகம், புதினம், கவிதை, பொதுச் செய்திகள் போன்றவற்றைப் படிக்கும்பொழுது ஏற்படும் சிக்கலைத் தீர்ப்பதற்கும் பொது அறிவை வளர்ப்பதற்கும் பயன்படும் கருவி நூல்கள் நோக்கு நூல்கள் ஆகும். இந்நோக்கு நூல்களின் மூலம் ஒருவருக்கு ஏற்படும் ஐயங்களை உடனுக்குடன் தீர்த்துக் கொள்ளலாம். மேலும், ஒருவர் முதலில் அறிந்துகொண்ட செய்திகளைவிடக் கூடுதலான செய்திகளை இந்நோக்கு நூல்களின் வழிப் பெற்றுக்கொள்ளலாம். பொதுவாக, நோக்கு நூல்கள் ஏழு வகைகளாகப் பிரிக்கப்படும்.

1. கலைக்களஞ்சியம்
2. அகராதி
3. சொல்லடைவு
4. சொற்பட்டியல்
5. தொடர் அடைவு
6. பொருள் அடைவு
7. சொற்களஞ்சியம்

மேற்கூறிய நோக்கு நூல்கள் சில ஒற்றுமைகளையும் பல வேற்றுமைகளையும் கொண்டுள்ளன. அகர வரிசை என்பது முதல் ஒற்றுமையாகும். ஆனால், அமைப்பிலும் பயன்பாட்டிலும் அவற்றிற்கிடையே வேறுபாடுகள் உண்டு. நோக்குநூல் வரிசையில் முதலில் இடம் பெற்றிருப்பது கலைக்களஞ்சியம் ஆகும். பல் துறை சார்ந்த அறிவியல் மற்றும் கலை தொடர்பான செய்திகளை

விரிவாகத் தொகுத்துக் கூறும் கூறும் நூல் கலைக்களஞ்சியம் எனப்படும்.

ஒரு மொழியின் சொற்களை அகரவரிசைப்படுத்திப் பொருள் தரும் நூல் அகராதி எனப்படும். மொழியின் சொற்கள் மட்டும்தான் இதில் இடம் பெறும். சொல்லடைவு என்பது சொற்களின் தொகுப்பு. ஒரு குறிப்பிட்ட ஆசிரியருடைய பணியையோ அல்லது அவர் தொகுத்த நூல்களிலுள்ள சொற்களின் தொகுப்பையோ அகரவரிசைப்படுத்தித் தருதல் ஒரு துறை அல்லது ஒரு நூலில் இடம்பெற்றுள்ள முக்கியமான சொற்களின் தொகுப்பு சொற்பட்டியல் ஆகும். இதில் சொல்லும் அதன் பொருளும் மட்டும் பட்டியலிட்டுத் தரப்பட்டிருக்கும். ஒரு குறிப்பிட்ட துறை நூலில் இடம் பெற்றுள்ள சொல், பொருள் மட்டுமன்றி அந்தச் சொல் வரும் சூழலும் தரப்பட்டிருப்பது தொடரடைவு (Word in context) எனப்படும். ஒரு குறிப்பிட்ட துறை சார்ந்த சொற்கள் அவற்றின் பொருள், சொல் வரும் சூழல்கள் தரப்பட்டிருப்பது பொருள் அடைவு எனப்படும். சொற்களின் தொகுப்பு சொற்களஞ்சியம் எனப்படும். அதாவது, கருத்திலிருந்து பொருளுக்குப் போதல் என்பதாகும்.

கலைக்களஞ்சியம்

கலைக்களஞ்சியம் என்பது 'என்சைக்லோபீடியா' எனும் கிரேக்கச் சொல்லின் தமிழ்ச் சொல்லாகும். 'என்சைக்லோ' என்றால் ஜெனரல் என்றும் 'பீடியா' என்றால் எஜிகேஷன் என்றும் பொருள். எனவே, 'என்சைக்லோபீடியா' என்றால் பொதுவான கல்வி அல்லது அறிவு பற்றிய நூல் என்று பொருள். நெல்லைத் திரட்டி வைக்கின்ற இடம் நெற்களஞ்சியம் என்று அழைக்கப்படுவது போன்று கலை மற்றும் அறிவியல் தொடர்பான செய்திகளைத் தொகுத்துத் தருகின்ற நூல் கலைக்களஞ்சியம் எனப்படுகின்றது.

கலைக்களஞ்சியம் என்பதற்குப் பல்வேறு அறிஞர்கள் பல்வேறு வகையில் கருத்துக்களை அளித்துள்ளனர்.

கலைக்களஞ்சியம் என்பது பலதிறப்பட்ட செய்திகளின் தொகுப்பு. அதில் ஒருவித செறிவும் தெளிவும் ஒரு கூட்டு முயற்சியும் காணப்படும் (எச்.ஜி. வெல்ஸ்).

கலைக்களஞ்சியம் பல அறிவுத்துறைகள் பற்றிய அல்லது ஒரு குறிப்பிட்ட பொருள் பற்றிய தகவல்களைக் கட்டுரை வடிவில் அகர வரிசையில் தரும் நூல் அல்லது நூல் தொகுதி (ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதி).

கலைக்களஞ்சியம் என்பது மனித அறிவின் எல்லாத் துறைகளையும் பற்றியதாய் இருப்பதுடன் பல தொகுதிகளைக் கொண்டதுமான மிகப்பெரும் பணி. அடிப்படையில் உலகப் பொருளோடு தொடர்புடைய சிறப்பு நிலை அகராதிகளும் கலைக்களஞ்சியத் தன்மை உடையனவாக உள்ளன (சுகுஸ்தா).

அறிவு சார்ந்த பல்துறைச் செய்திகளை மிக விரிவாகச் சொல்லும் ஒரு நூல். அடுக்கப்பட்ட தனித்தனிக் கட்டுரைகள் கொண்ட நூல். அன்றியும் ஒரு குறிப்பிட்ட அறிவுத்துறையை மட்டும் விளக்கும் நூல் என்று கூறுகின்றது வெப்ஸ்ட்டர்ஸ் அகராதி.

ஏதேனும் ஒரு செய்தியைப் பற்றித் தேவையான தகவல்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமாயின் அத்தகவல்களை ஒரே தொகுப்பில் பெற்றுக்கொள்ள ஏதுவாய் இருப்பதே கலைக் களஞ்சியம். எனவே, அதனைப் பல்பொருள் விளக்கம் என்று கூறலாம் (சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி).

பல்துறைகளின் கருத்துக்களைப் பல தலைப்புகளில் எழுதி அவற்றை அகரவரிசையில் அமைத்துத் தரும் கருவி நூல் அல்லது நூல் தொகுதி கலைக்களஞ்சியம் (கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி).

கலைக்களஞ்சியக் கூறுகள்

மேற்காணும் கருத்துக்களிலிருந்து கலைக்களஞ்சியம் என்பதற்குக் கீழ்க்கண்டவாறு விளக்கம் அளிக்கலாம்.

1. கலைக்களஞ்சியம், அகராதி மற்றும் பிற நோக்கு நூல்களிலிருந்து வேறுபட்டது.

2. குறிப்பிட்ட ஒரு துறை அல்லது அனைத்துத் துறைகள் பற்றி அமைவது.

3. கட்டுரை வடிவில் அமைவது.

4. அறிவுத்துறையின் எல்லாப் பிரிவுகளையும் உள்ளடக்கியது.

5. உலகச் செய்திகளும் உலகப் பொருள்களும் இடம் பெற்றிருப்பது.

6. செய்திகளைத் தொகுப்பாகக் கூறுவதன் மூலம் பரந்து பட்டது.

7. ஒரு பொருள் குறித்த அனைத்து ஐயங்களுக்கும் விடை அளிப்பது.

8. கருத்து அல்லது கொள்கையின் விளக்கமாய் அமைவது.

9. பல தொகுதிகளில் வெளிவருவது.

கலைக்களஞ்சியமும் அகராதியும்

நோக்கு நூல் வரிசையில் அகராதிகளும் கலைக்களஞ்சியங்களும் பல நிலைகளில் ஒன்றுபட்டுக் காணப்படுகின்றன. கலைக்களஞ்சியங்களில் அகராதிக் கூறுகளும், அகராதியில் கலைக்களஞ்சிய விளக்கமும் இடம்பெற்றிருக்கும் வாய்ப்புண்டு. கலைக்களஞ்சிய அகராதி என வழங்கப்படும் நோக்கு நூலும் வழக்கத்திலுள்ளது. முன்னர்க் கூறியது போலவே கலைக்களஞ்சியமும் அகராதியும் அகர வரிசை அமைப்பில் ஒன்றாக அமைந்திருந்தாலும், அமைப்பு, பயன்பாடு, உத்திகள் போன்றவற்றில் இரண்டிற்கும் இடையே அதிக வேறுபாடுகள் காணப்படுகின்றன.

கலைக்களஞ்சியம் என்பது பரந்துபட்டது; உலகளாவியது. அகராதி மொழித் தொடர்பானது. அகராதியில் மொழியிலுள்ள சொற்கள் திரட்டப்பட்டுப் பொருள் கூறப்பட்டிருக்கும்.

சிறப்புப் பெயர்கள், வரலாற்றுச் செய்திகள், தாவர விலங்குப் பெயர்களின் விளக்கங்கள் போன்ற பல செய்திகள் கலைக்களஞ்சியத்தில் விரிவாக இடம்பெற்றிருக்கும். அகராதிப் பொருள் விளக்கம் அவ்வாறன்றித் தரவு அடிப்படையில் மட்டுமே இடம் பெற்றிருக்கும்.

கலைக்களஞ்சியத்தின் மூலம் பொது அறிவு பெறுவதற்கு வாய்ப்பு அதிகம். அகராதி மொழியறிவை வளர்ப்பதை மட்டுமே அடிப்படைப் பணியாகக் கொண்டது. கற்றல், கற்பித்தல் ஆகிய இரண்டிற்கும் பயன்படும் தன்மையது.

கலைக்களஞ்சியத்தின் அகராதிப் பொருள் உத்திகள் அதிகம் இடம் பெற்றிருக்காது. அகராதியில் குறுக்கு நோக்கீடு, குறிப்பான், விளக்கக் குறிப்புகள், மேற்கோள், எடுத்துக்காட்டுகள் போன்ற பல பொருள் உத்திகள் இடம்பெற்றிருக்கும்.

கலைக்களஞ்சியக் கட்டுரைகளில் இறுதியில் கட்டுரை யாளர் பெயர், துணைநூல் பட்டியல் போன்ற பல செய்திகள் இடம் பெற்றிருக்கும். அகராதித் தலைச்சொல் பதிவில் இவ்வகைச் செய்திகளுக்கு இடமில்லை. எனினும் முகப்புப் பகுதியில் பதிப் பாசிரியர், துணைப்பதிப்பாசிரியர் மற்றும் பணியாளர் பெயர்கள் இடம் பெற்றிருக்கும்.

பெரும்பாலும் கலைக்களஞ்சியத்தில் விளக்கப்படங்கள் தரப்பட்டிருக்கும். அகராதியில் தேவையான இடங்களில் மட்டும் படங்கள் தரப்பெறும்; அதுவும் அகராதியின் வகை மற்றும் நோக்கத்தைப் பொறுத்துதான் பாடங்களும் அமையும்.

கலைக்களஞ்சியப் பதிவில், தலைச்சொல் பற்றிய எல்லாச் செய்திகளும் தொகுப்பாக இடம்பெறும். மாறாக, அகராதியில் தலைச்சொல்லின் பொருள் விளக்கம் மட்டும் தரப்பட்டிருக்கும்.

பொதுநிலை

பழங்காலத்தில் இலக்கியப் பெயர்கள், கதைகள், பொது வரலாறு, சமுதாயப் பழக்கவழக்கங்கள், அறிவியல் செய்திகள் போன்றவற்றை ஆசிரியர்கள் வாயிலாக மட்டுமே மாணவர்கள்

தெரிந்து கொள்ள முடிந்தது. உலகில் பல்வேறு பகுதிகளில் நிலவிய இக்கல்விமுறை மாறுதலுக்கு உட்பட்டு எளிய முறையில் செய்திகளை அறிந்துகொள்ள கலைக்களஞ்சியம் போன்ற நோக்கு நூல்கள் உதவின. கலைக்களஞ்சியம் பல்வேறு நிலைகளில் மாற்றங்கள் அடைந்தே வெளிவந்துள்ளது என்பது இவண் குறிப்பிடத்தக்கது. சமுதாயம், கலை, தொழில்நுட்பம், சமயம், வரலாறு, அறிவுத்துறைகள் இவற்றை உள்ளடக்கிய என்சைக்ளோபீடியா பிரிட்டானிகாவின் முதல் பதிப்பு 1767-72இல் மூன்று தொகுதிகளில் வெளியானது. இதனைத் தொடர்ந்து மாற்றங்கள் ஏராளம் இன்றிப் பல பதிப்புகள் வெளிவந்துள்ளன. கட்டுரைகள் ஒழுங்கமைப்புடனும் அதிகாரப்பூர்வமான குறிப்புகளுடனும் விரிவாகவும், அதே சமயம் சுருக்கமும் செறிவும் உடையனவாகவும் அனைத்து நாட்டிற்கும் ஏற்புடையனவாகவும் அமைய 14-ஆம் பதிப்பு 1929ல் வெளியானது. இதன் பின்னர்க் கலைக்களஞ்சியம் எனும் சொல்லுக்கு முற்றிலும் பொருத்தமான முறையில் 1938-இல் 24 தொகுதிகளில் பிட்டானிக்கா கலைக்களஞ்சியம் வெளியானது. அறிவுத்துறைகளுக்கு உரிய விளக்கங்களும் தேசியப் படங்களும் விரிவான அட்டவணைகளும் தரப்பட்டன. மேலும், நூலடைவு, விளக்கப்படங்கள், வரைபடங்கள், சுருக்கக்குறிப்பு, அயல்மொழித் தொடர்பு பதிவேட்டுக் குறிப்புகள் போன்ற எல்லாவற்றையும் கொண்ட கலைக்களஞ்சியமாக பிரிட்டானிகா திகழ்ந்தது. பல பல்கலைக்கழகங்களைச் சார்ந்த கல்வியாளர்களைப் பதிப்புக்குழுவாகக் கொண்டு (கேம்பிரிட்ஜ், டோக்கியோ, லண்டன், சிக்காகோ...) ஒரு சிறந்த பிரிட்டானிகா கலைக்களஞ்சியம் 1943-73இல் 30 தொகுதிகளில் வெளிவந்தது. முன்னர் வெளியான களஞ்சியங்களிலிருந்து கூடுதல் செய்திகளோடு சிறந்த வெளியீடாக இது அமைந்தது. இதனைத் தொடர்ந்து அமெரிக்கானாவும் பல சிறப்புக் கலைக்களஞ்சியங்களும் பல்வேறு நிலைகளில் வெளிவந்துள்ளன.

ஆங்கிலம் போன்றே வடமொழியிலும் களஞ்சியங்கள் மிகப் பழங்காலத்திலேயே தோற்றம் பெற்றன. கி.பி.1131-இல் பூலோக மல்ல சோமேசுவரன் என்பவரால், 'அபிலக்ஷிதார்த்த சிந்தாமணி' (அதாவது, விழையும் பொருளை எல்லாம் வழங்கும் சிந்தாமணி) என்னும் தொகுப்பு வெளியிடப்பட்டது.இதனைத் தொடர்ந்து வெளிவந்த கலைக்களஞ்சியங்கள் அகராதிக் கூறுகள்

கொண்டே வெளியாயின. சிறந்த ஒரு கலைக்களஞ்சியம்19-ஆம் நூற்றாண்டில் தாராநாத தர்க்கவாசஸ்பதி என்பவரால் தொகுத்தளிக்கப்பட்டது. இதன் பெயர் 'வாசஸ்பத்தியம்.' இதில் சொல்லுக்கு நேரடிப் பொருளும், தேவைப்பட்ட இடங்களில் விரிவான பொருளும் காணப்படுகின்றன.

டாக்டர் சிவராம் கரந்த் 1936-இல் கன்னட மொழியில் 'பாலபிரபஞ்சா' எனும் பெயரில் ஒரு கலைக் களஞ்சியத்தைத் தொகுத்தார். இக்கலைக் களஞ்சியம் மூன்று தொகுதிகளாக வெளிவந்தது. பின்னர் 'விஞ்ஞான பிரபஞ்சா' என்னும் பெயரில் 4 தொகுதிகள்(1956, 1960, 1962, 1964) வெளிவந்தன. 1969-இல் மைசூர் பல்கலைக்கழகத்தின் சார்பில் 'கன்னட விசுவகோஷா' என்ற பெயரில் முதல் தொகுதி 1969-இல் வெளியானது. இது முற்றிலும் என்சைக்ளோபீடியா பிரிட்டானிகாவைத் தழுவி அமைந்திருந்தது. இதற்குப் பதிப்பாசிரியராய் இருந்தவர் ஜவரே ஜாராகௌடா. முதல் தொகுதி வெளிவந்த பின்னர் மொழி, கலை, பண்பாடு, சமயம் பற்றி 16 தொகுதிகளும் தொகுப்பதற்குத் திட்டமிடப்பட்டு ஏறத்தாழ 8 தொகுதிகள் வெளிவந்துள்ளன. ஒவ்வொரு தொகுதி யும் 950 பக்கங்களைக் கொண்டு, இடையிடையே பல வண்ணப் படங்களும், விளக்கப் படங்களும் அமைந்து விளங்குகின்றது. இதே பதிப்பாசிரியரைக் கொண்டு சிறுவர் கலைக்களஞ்சியம் 10 தொகுதிகளில் வெளியானது. ஒவ்வொரு தொகுதியும் 500 பக்கங் கள் உடையனவாய் பலவண்ண மாற்று அச்சடிப்பு முறையில் வெளிவந்தது.

மலையாள மொழியில் 1899-இல் பைலோபால் என்பவர் புராண இதிகாசங்களில் காணப்படும் பொருள்களுக்காகப் 'புராண கதா நிகண்டு' எனும் தொகுப்பையும், பின்னர் அத்துடன் இலக் கியம், மக்கள் பழக்க வழக்கங்கள், சமுதாயக் கதைகள் முதலான வற்றைச் சேர்த்து1927-இல் 'சாகித்ய நிகண்டு' எனும் பெயரில் ஒரு கலைக்களஞ்சியத்தையும் வெளியிட்டார். 1958-இல் அமாத்யூ எம். பூழிவேலி என்பவர் 'விஞ்ஞானம்' எனும் பெயரில் குழந்தைகள் கலைக்களஞ்சியம் ஒன்றை எட்டு தொகுதிகளில் வெளியிட்டார். இது 800 பக்கங்களைக் கொண்டது. பி.டி. பாஸ்கர பணிக்கரைத் தலைமைப் பதிப்பாசிரியராகக் கொண்டு 1952-இல் 'விஸ்வ விஞ்

ஞான கோஷம்' எனும் பெயரில் 10 தொகுதிகளில் ஒரு கலைக் களஞ்சியம் வெளியானது.

தமிழ்க் கலைக்களஞ்சிய வரலாறு

18-ஆம் நூற்றாண்டில் ஐரோப்பியர் வருகைக்குப் பின்னர் தமிழ் அகராதித் தொகுப்பில் ஒரு சிறப்பான நிலை காணப் பட்டதைப் போன்று கலைக்களஞ்சியத் தொகுப்பிலும் ஒரு வளர்ச்சி நிலை காணப்படுகிறது. எட்வர்டு பால்பர் (Edward Palbar) என்பவர் 'என்சைக்ளோபீடியா ஆஃப் இந்தியா' என்ற 1000 பக்கங் களைக் கொண்ட கலைக்களஞ்சியத்தைத் தொகுத்தளித்தார். இக் கலைக் களஞ்சியம் சென்னையிலிருந்து வெளியானது. இதன் முதல் பதிப்பு 1856லும் இரண்டாம் பதிப்பு 1862லும் வெளியாகி யுள்ளது. இக்கலைக்களஞ்சியத்தில் பல கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. இதில் அன்னபூர்ணாதேவி, பூகம்பம், மடவேமீன் (மடவை மீன்), திப்பிலி, எமன் தர்மராஜா, திராவிடர் யார் போன்ற கட்டுரைகள் குறிப்பிடத்தக்கன. 1902-இல் முத்துத்தம்பிப் பிள்ளை என்பவர் 'அபிதான கோஷம்' எனும் கலைக்களஞ்சியத்தைத் தொகுத்தளித் தார். இக்கலைக் களஞ்சியத்தில் வடமொழி மற்றும் தமிழ்ச் சொற் கள் பதிவுகளாக இடம் பெற்றுள்ளன. 'அ' முதல் 'வைஷ்ணவம்' ஈறாகச் சொற்கள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. மேலும் இலக்கணம், இலக்கியம், இதிகாசம், புராணம் போன்றவையும், புலவர், அரசர், கந்தர்வர் ஆகியோர் பற்றிய செய்திகளும் காணப் படுகின்றன. வடமொழி எழுத்துக்களான ஜ, ஷ, ஸ, ஹ, ஸ்ரீ போன்றவற்றைக் கொண்டு தொடங்கும் சொற்கள் பின்னால் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. (காட்டாக ஸ்மிருதி, ஸ்வதை, ஹம்சன், ஹிரணியபுரம், ஹேசி, ஹேமன் போன்றன) இக்கோசத்தின் பின்னிணைப்பாக ஆறுமுக நாவலர், சரவணப் பெருமாளையர், மீனாட்சி சுந்தரம்பிள்ளை, வில்லிப்புத்தூர் பற்றிய செய்திகள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. இக்கோசம் கலைக் களஞ்சியத்தின் முதல் முயற்சியாக இருப்பதால் இதில் அகராதிக் கூறுகளும் கலந்ததாய் அமைந்துள்ளது.

1908-இல் தமிழ் மற்றும் வடமொழி நூல்களில் இடம் பெற்றுள்ள சிறப்புப் பெயர்களுக்கு விளக்கம் தரும் நோக்கத்துடன் 'சிறப்புப் பெயரகராதி' எனும் களஞ்சியம் இரத்தினவேல் முதலி யாரால் வெளியிடப்பட்டது.

தமிழில் வெளிவந்த களஞ்சியங்களின் முன்னோடியாக அமைந்தது 'அபிதான சிந்தாமணி' ஆகும். இது ஆ.சிங்காரவேலு முதலியாரால் 1910-இல் வெளியிடப்பட்டது. இக்கலைக் களஞ்சியத்தில் இலக்கணம், இலக்கியம், புராணம், காப்பியம், இதிகாசம், வேதப்பொருள் விளக்கம், மகாபுராணக் கதைகள், தலபுராணக் கதைகள், தரும சாத்திரங்கள் பற்றிய விளக்கம், வைத்தியம், சோதிடம், பண்டிதர், அரசர் போன்றவர்களின் வரலாறு முதலிய பல செய்திகள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. தலைச்சொல் பெரும்பாலும் கட்டுரை போன்று சில பக்கங்களைக் கொண்டுள்ளது. இக்களஞ்சியத்தில் அகத்திய முனிவர் முதல் வெளவால் வரையுள்ள பெயர்கள் விளக்கப்பட்டுள்ளன. பிற்சேர்க்கையாகச் சைவத் திருப்பதிகள், அரச மரபுகள் முதலியன பற்றிய செய்திகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

அபிதான கோசம், அபிதான சிந்தாமணி ஆகிய இரு களஞ்சியங்களும் தனிமனித முயற்சியால் உருவானவை. மேலும் இக்களஞ்சியங்களில் தலைச்சொல் ஒரு மொழி அகராதிப் பதிவமைப்பைப் போன்று மிகச் சிறிய விளக்கங்களுடன் அல்லது ஒரு பொருட் பன்மொழிகளுடன் காணப்படுகின்றன. 'அபிதானம்' எனும் வடசொல்லுக்குப் 'பெயர்' என்று பொருள். 'கோசம்' என்றால் பொக்கிஷம், பொக்கிஷசாலை, அகராதி முதலிய புத்தகம் என்று பொருள். சிந்தாமணி என்றால் விரும்பியன எல்லாம் கொடுக்கவல்லத் தெய்வமணி என்று பொருள். மேற்கூறியவற்றிலிருந்து இரண்டு கலைக்களஞ்சியங்களும் விரும்பிய பெயர்கள் அமைந்த பொக்கிஷம் எனப் பொருள் பெறுகின்றன. இக்கலைக்களஞ்சியங்கள் இரண்டிலும் பெயர்ச்சொற்கள் மட்டுமே பதிவுகளாக அமைந்துள்ளன.

சாம்பசிவம் பிள்ளை என்பவர் தமிழ் ஆங்கில கலைக் களஞ்சிய அகராதி என்ற பெயரில் பல தொகுதிகளில் மிக விரிவான கலைக் களஞ்சியம் ஒன்றைத் தொகுத்தளித்துள்ளார். மருத்துவம், இரசாயனம், தாவரவியல் துறைகள் தொடர்பான சொற்கள் இதில் இடம்பெற்றுள்ளன. இக்களஞ்சியம் ஐந்து தொகுதிகளாக வெளிவந்துள்ளது. இதற்கு அகராதி என்று பெயர் சூட்டப்பட்டிருப்பினும் நூலின் பெரும்பாலான பதிவுகள் கலைக்

களஞ்சியம் போன்று விரிவான விளக்கங்களுடன் காணப்படு கின்றன.

தமிழில் கலைக்களஞ்சிய நெறிமுறைகளை உள்ளடக்கிய கலைக்களஞ்சியம் 1948-இல் சென்னை மாநிலக் கல்வி அமைச்சராய் இருந்த அவினாசிலிங்கம் செட்டியார் முயற்சியால் உருவானது. திரிகூடசுந்தரம் தலைமைப் பதிப்பாசிரியராய் இருந்தார். பின்னர் பெரியசாமி தூரனால் இப்பணி தொடர்ந்து செய்து முடிக்கப்பட்டது. இக்கலைக்களஞ்சியம் பத்து தொகுதி களில் வெளியாகியுள்ளது. உரிய கட்டுரைகளை முடிவு செய்து, தலைச்சொல்லைத் தெரிவு செய்து, அறிஞர்களிடம் கட்டுரை களைப் பெற்று உருவாக்குதல் எனும் அடிப்படையில் இக்களஞ் சியம் உருவாகியுள்ளது. முதல் தொகுதி 1954-லும், 10-ஆம் தொகுதி 1968-லும் வெளிவந்தன. பின்னர்ப் பெரியசாமிதூரனைப் பதிப் பாசிரியராகக் கொண்டு 1968-76 இல் குழந்தைகள் கலைக் களஞ்சியம் ஒன்று வெளியானது. 1974-இல் பாபநாசம் என்பவரால் நாடகக் களஞ்சியமும், 1974இல் மோகன் என்பவரால் டாக்டர் மு.வ. கலைக்களஞ்சியமும், 1976-77இல் அப்துல் ரஹீம் என்பவ ரால் இஸ்லாமியக் கலைக்களஞ்சியமும், 1977-இல் பெரியார் கலைக்களஞ்சியமும் வெளிவந்தன. வ.ஐ.சுப்பிரமணியத்தைப் பதிப்பாசிரியராகக் கொண்ட திராவிடன் கலைக்களஞ்சியம் ஐஎஸ்டிஎல் நிறுவனத்தாரால் வெளியிடப்பட்டுள்ளது. இக்களஞ் சியத்தில் இதுவரை மூன்று தொகுதிகள் வெளிவந்துள்ளன. மேலும், இதே நிறுவனத்தார் என்சைக்ளோபீடியா ஆஃப் திரா விடன் டிரைப்ஸ் எனும் களஞ்சியத்தின் மூன்று தொகுதிகளைத் தொகுத்தளித்துள்ளனர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தாரால் 1974-89இல் தமிழ்ப் புலவர் வரலாற்றுக் களஞ்சியம் மூன்று தொகுதிகளில் வெளியிடப்பட்டது. 1976-இல் மாக்மில்லன் சிறுமியர் களஞ்சியமும், 1982ல் வேளாண்மைக் களஞ்சியமும், 1991-இல் இளைஞர் இஸ்லாமியக் கலைக் களஞ்சியமும் வெளி வந்துள்ளன. 1992-இல் வீ.பா.க. சுந்தரம் உருவாக்கிய தமிழிசைக் களஞ்சியத்தின் முதலாம் தொகுதி பாரதிதாசன் பல்கலைக் கழகத் தால் வெளியிடப்பட்டது. 1983-இல் தமிழ்ப் பல்கலைக்கழகம் அறிவியல், வாழ்வியல் இரண்டிற்கும் தனித்தனியாகக் களஞ்சியம் வெளியிடும் முயற்சியை மேற்கொண்டது. அறிவியலுக்காக 20 தொகுதிகளும், வாழ்வியலுக்காக 15 தொகுதிகளும் வெளியிடுவது

என முடிவு செய்யப்பட்டது. ஆனால், இதுவரை வாழ்வியல் களஞ்சியம் 13 தொகுதிகளும், அறிவியல் களஞ்சியம் 10 தொகுதிகளும் வெளிவந்துள்ளன.

கலைக்களஞ்சிய வகை

உள்ளடக்க அடிப்படையில் கலைக்களஞ்சியங்களை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்.

1. பொதுக் கலைக்களஞ்சியம்
2. சிறப்புக் கலைக்களஞ்சியம்

பொதுக் கலைக்களஞ்சியங்களை அவற்றில் இடம் பெறும் செய்திகளின் அடிப்படையில் மேலும் இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்.

1. வாழ்வியல் களஞ்சியம்
2. அறிவியல் களஞ்சியம்

வாழ்வியல் களஞ்சியம்

என்சைக்ளோபீடியா ஆஃப் ஹியூமனிட்டீஸ் என்ற ஆங்கிலச் சொல்லின் மொழிபெயர்ப்பாக வாழ்வியல் களஞ்சியம் எனும் சொல் தமிழில் படைக்கப்பட்டுள்ளது. வாழ்வியலைப் பொறுத்தமட்டில் உலகப் பொருட்கள், இலக்கியம், இலக்கண, இலக்கிய ஆசிரியர்கள், கலைச்சொற்கள், இடப்பெயர்கள், பண்பாட்டுச் சொற்கள், மன்னர்கள், அரசுகள், வரலாறு, கல்வெட்டு, தொல்லியல் ஆய்வுகள் தொடர்பான பல்வேறு சொற்கள் பதிவுச் சொற்களுக்கு அடிப்படையாகின்றன. பிறமொழி எழுத்துக்கள் சொல்லின் முதலில் வந்தால் தமிழ் இலக்கண மரபுப்படி சொல்லின் முதலிலும் ஈற்றிலும் தமிழ் எழுத்துக்கள் தரப்பட்டுள்ளன.

எ.டு. ரூபா-உரூபா
டென்மார்க்-டென்மார்க்கு

வடமொழிச் சொற்களின் தமிழாக்கங்கள் தலைச்சொல் பதிவுகளாக இடம்பெற்றுள்ளன.

இத்தொகுப்புகளில் இடம்பெற்ற தமிழ்க்கலைச் சொற்களுக்குரிய ஆங்கிலக் கலைச்சொற்கள் தொகுதியின் இறுதியில் தரப்பட்டுள்ளன.

எ.டு.	தொன்மம்	-	myth
	மூளைமானி	-	encephalograph

இதனைப்போன்றே ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களும் தரப்பட்டிருக்கும்.

எ.டு.	Piracy	-	கடற்கொள்ளை
	Stock market	-	இருப்பு அங்காடி

ஒரே தலைச்சொல்லுக்கு இரண்டு மூன்று வேறுபட்ட பொருள்கள் இருந்தால் தலைச்சொல் பதிவில் எண் தரப்பட்டிருக்கும்.

எ.டு.	அந்துவன்[1]	-	சங்க காலச் சேர மன்னர்களுள் ஒருவன் இவன். அந்துவஞ்சேரல் இரும்பொறை என அழைக்கப்படுவான்
	அந்துவன்[2]	-	கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவர்.

மிகவும் தேவையான இடங்களில் படங்கள் தரப்பட்டுள்ளன. அட்டவணைகள், வரைபடங்கள் போன்றனவும் தேவைப் படின் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு கட்டுரையின் இறுதியிலும் துணைநூற்பட்டியல் தரப்பட்டுள்ளது.

அறிவியல் களஞ்சியம்

அறிவியல் சார்ந்த துறைகளான கடலியல், கணிப்பொறி, வேதியியல், இயற்பியல், பொறியியல், கப்பல் கட்டுதல், அறிவியல், தொழில் நுட்பம், தொழில் நுட்பக் கருவிகள் போன்றன விரிவான விளக்கங்களோடு கலைக்களஞ்சியப் பதிவுகளாகத் தரப்பெற்றுள்ளன. ஆங்கிலத்தில் அமைந்த மெக்ராஹில் அறிவியல் தொகுக்கப்பட்டுள்ளன. மேலும், செய்திகளைத் திரட்ட என்சைக்ளோபீடியா பிரிட்டானிகா பிற சிறப்புத் துறைக் களஞ்சி

யங்கள், பல்வேறு மேற்கோள் நூல்கள், மூல பாடநூல்கள் ஆகியவை பயன்படுத்தப்பட்டுள்ளன.

வாழ்வியல் களஞ்சியத்தில் காணப்படுவது போன்று தொகுதியின் பின்னிணைப்பாக அறிவியல் கலைச் சொற்கள் - தமிழ் - ஆங்கிலம் - தமிழ் எனும் இரண்டு பின்னிணைப்புகள் தரப்பட்டுள்ளன.

எ.டு.	தானியங்கி	-	Automation
	Shock	-	அதிர்ச்சி

மேலும் 'பொருள் கூட்டு' எனும் பின்னிணைப்பும் இடம் பெற்றுள்ளது. இதில் சொல் இடம் பெறும் பக்க எண் தரப்பட்டுள்ளது.

எ.டு.	அணு	-	417
	அலகு அணி	-	400

படங்கள், வரைபடங்கள், அட்டவணைகள் போன்றவை ஏராளம் காணப்படுகின்றன.

செய்திகள் விளக்கமாகவும், சிறப்பாகவும் தரப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, சுறாமீன் பற்றிக் கூறும்போது அதன் உடல் அமைப்பு, வகை என்பன விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன. சுறாமீன் வகைகளாக 20 மீன்களின் படங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. சுறாமீன் பற்றிய எல்லாச் செய்திகளையும் இந்த ஒரு தலைச்சொல் பதிவின் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது.

கட்டுரைகளின் முடிவில் துணைநூற்பட்டியல் தரப்பட்டுள்ளது.

சிறப்புக் கலைக்களஞ்சியம்

சிறப்புக் கலைக்களஞ்சியம் அதன் அமைப்பு மற்றும் வகை அடிப்படையில் இரண்டு வகைகளாகக் காணப்படுகின்றன.

1.பண்பாடு(வயது அடிப்படையில்)
2.பிரிவு
அ. துறை
ஆ. ஆசிரியர்
இ. இலக்கிய வகை

படிப்போரின் வயதைப் பொறுத்துத் தொகுக்கப்படும் கலைக்களஞ்சியம் குழந்தைகள் கலைக்கள்ஞ்சியம் ஆகும். குழந்தைகளின் வயது, ஆர்வம், தேவை, மொழித்திறன் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு பொதுக் கலைக்களஞ்சியத்தைச் சுருக்கமாகவும், எளிய நடையிலும் தருவதே இதன் நோக்கமாகக் கூறலாம்.

பொதுமை, எளிமை, செய்திகளைப் படங்களுடன் விளக்குதல், சுருக்கம் ஆகிய பண்புகள் குழந்தைகள் கலைக் களஞ்சியத்தின் சிறப்புக் கூறுகளாக உள்ளன. இவை அனைத்தையும் உள்ளடக்கிய நிலையில் தூரனின் குழந்தைகள் கலைக்களஞ்சியம் சிறந்து விளங்குகின்றது.

எடுத்துக்காட்டாக அகராதி எனும் சொல்லைக் குழந்தைகள் கலைக்களஞ்சியம், சொல்லுக்குப் பொருள் கூறும் ஒரு கருவி என்று மட்டும் கூறுகிறது. இதன் மூலம் எந்தக் கடினமான சொற்களுக்கும் பொருள் காணமுடியும் என்ற விளக்கத்தை மட்டும் தருகின்றது. ஆனால், பொதுக் கலைக்களஞ்சியத்தில் அகராதி என்றால் என்ன, அதன் தோற்றம் (தொல்காப்பியம், நிகண்டு) அதன் வகை, வளர்ச்சி நிலை போன்றவை விரிவாக விளக்கம் செய்யப்பட்டுள்ளன.

சிறப்புக் கலைக்களஞ்சியங்கள் வரிசையில் குறிப்பிட்ட துறை பற்றியோ, ஆசிரியர் பற்றியோ, இலக்கியங்கள் பற்றியோ கலைக்களஞ்சியங்கள் தொகுக்கப்படலாம். எடுத்துக்காட்டாக, நாம் முன்னர்க் கண்ட தமிழிசைக் களஞ்சியம் (இசைத்துறைச் செய்திகள்), நாடகக் களஞ்சியம் (நாடகத் துறை செய்திகள்), மு.வ. கலைக்களஞ்சியம் (மு.வ.வின் படைப்பு பற்றியது)போன்றவை இந்தப் பிரிவில் அடங்கும்.

உருவாக்கம்

கலைக்களஞ்சியம் செய்திகளின் தொகுப்பு மட்டுமின்றிப் படிப்போருக்குச் செய்திகளின் விளக்கத்தைக் கூறுவதுடன், படிப்போரின் அறிவைக் கூர்மைப்படுத்தும் தன்மையது. கலைக் களஞ்சிய உருவாக்கம் என்பது மிகவும் சிக்கல் வாய்ந்தது. கலைக் களஞ்சிய உருவாக்கம் மூன்று பெரும் பிரிவுகளை உள்ளடக்கியது.

1. பொதுநிலை
2. உள்ளடக்கம்
3. பதிப்பு முறை

பொதுநிலையில் பல உட்பிரிவுகள் உண்டு. கலைக்களஞ் சியம் யாருக்காகத் தொகுக்கப்படுகின்றது? குழந்தைகளுக்காகவா அல்லது கல்வியாளருக்காகவா அல்லது பொதுமக்களுக்காகவா என்பதை முதலில் முடிவு செய்து கொள்ள வேண்டும். பின்னர்க் கலைக்களஞ்சியம் எந்த வகையைச் சார்ந்தது. பொதுவாக, எல்லாத் துறைச் செய்திகளையும் உள்ளடக்கிய பொதுக்கலைக் களஞ்சியமா அல்லது ஒரு துறைக்கு மட்டும் உரிய சிறப்புக் கலைக் களஞ்சியமா என்பது வரையறுக்கப்பட வேண்டும். மேலும், கலைக்களஞ்சியம் உருவாக்குவதற்குக் கொடுக்கப்பட்ட கால எல்லை, நிதி நிலை ஆகியவை கருத்தில் கொண்டு கலைக்களஞ் சிய உருவாக்க நெறிமுறைகளை வகுத்துக் கொள்ள வேண்டும்.

படிப்போரது தன்மை, தேவை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பொது அறிவு மற்றும் துறை அறிவு படிப்பவர்களுக்கு வளர்ச்சி பெறும் வகையில் உருவாக்கம் அமைய வேண்டும். பல் வேறு வகையான ஒப்பீட்டு நூல்களின் உதவியோடு படிப் போர்க்குத் தேவையான கட்டுரை மட்டுமே அறிமுகப்படுத்தப் பட வேண்டும். பதிப்புக்குழுவைப் பொறுத்தே கலைக் களஞ் சியப்பணி வெற்றி பெறும். உருவாக்கத்தில் மையமாக அமைவது கட்டுரை. எனவே, கட்டுரை என்பதில் அதிக கவனம் செலுத்தப் படல் வேண்டும்.

உள்ளடக்கம் எனும் இரண்டாவது பிரிவில் பதிவமைப்பு பற்றிய செய்திகள், மொழிநடை, உத்திகள் என்பவை அடங்கும். உள்ளடக்கம் என்பது பழைய கலைக்களஞ்சியங்களின் சிறப்பைப்

புதிய கலைக்களஞ்சியம் உள்ளடக்கி வருவதோடு, பழைய களஞ் சியங்களின் விடுபாடுகளையும் சேர்த்து அமைய வேண்டும். செய்திகள் தெளிவாகவும் உள் ஒழுங்கமைப்பு, தொடர் ஒழுங் கமைப்பு உடையதாகவும், கூறியது கூறல் இல்லாமலும், தலைச்சொல்லின் பொருள் தொடர்போடும், ஒரு குறிப்பிட்ட எல்லையோடும் அமைந்து இருக்க வேண்டும். மொழிநடையும் கலைக்களஞ்சிய வகையைப் பொறுத்து, செய்திகளின் தெளிவை ஒட்டியும், படிப்போரின் திறனை ஒட்டியும் அமையும்.

கலைக்களஞ்சியம் தயாரிப்பதற்கு அறிவுத்துறையை வகைப்படுத்திப் பின்னர் அத்துறைகளை ஒழுங்குமுறை செய்து ஒவ்வொரு துறையிலும் பல்வேறு பிரிவுகளில் தரவுகள் தொகுக் கப்பட வேண்டும். திட்டங்கள், செயல்பாடுகள் முதலியவற்றைச் சிந்தித்து பொருட்குறிப்பு அட்டவணையையும், அப்பொருள் குறித்துக் கட்டுரைகள் எழுதும் ஆசிரியர் பெயர்ப்பட்டியல் முதலி யவைகளையும் அகரவரிசைப்படுத்திக் கொள்ள வேண்டும். தேவைப்படும் இடங்களில் அகராதி போன்று பொருள் கூறும் உத்திகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். படங்கள், வரை படங்கள், அட்டவணைகள் போன்றவை தேவை ஏற்படின் கொடுக்கப்பட வேண்டும்.

பதிப்பு முறை எனும் இறுதிப்பிரிவில் கட்டுரைகள் பெற்ற பின்னர், அக்கட்டுரையை மதிப்பீடு செய்யவும்,அப்பொருளினை ஆய்வு செய்யவும் அறிஞர் குழுவிற்கு அனுப்பப் பெறும். அறிஞர் குழு ஒப்புதல் பெற்று வந்த பின்னர் அக்கட்டுரைகள் அச்சுக்குத் தர ஆயத்தம் செய்யப் பெறும். கட்டுரைகளைத் தலைமைப் பதிப் பாசிரியர் பார்த்த பிறகு அந்த அந்தப் பொருள்துறை ஆசிரியர்கள் கட்டுரைகளின் இடையே விளக்கப்படங்கள் எந்த எந்த இடங் களில் அமைக்கப்பட வேண்டும் என்று குறிப்பர். அச்சுக்கோத்த பின்னர்ப் பிழை திருத்தம் நடைபெறும். பிழைதிருத்தும் பதிப் பாசிரியர் கட்டுரைகள் அகரவரிசைப்படுத்தப்பட்டுள்ளதா, தலைப்பு, துணைத்தலைப்பு போன்றன சரியாக உள்ளனவா, கட்டுரைகளின் முடிவில் கட்டுரையாளர்களின் பெயர்த் தலைப்பு எழுத்துப் பிழை இல்லாமல் இருக்கிறதா என்பதைப் பார்ப்பார். இவ்வாறு ஒவ்வொரு பதிவும் அமைக்கப்பெறும்.

கலைக்களஞ்சியத்தில் இடம்பெறும் ஒவ்வொரு சொல்லும் மிக நீண்ட பதிவாய் அமைய வாய்ப்பில்லை. ஒவ்வொரு சொல்லுக்கும் உள்ள சமூகச் செல்வாக்கும் வரலாறும் பொருட் சிறப்புமே பதிவின் இயல்பைத் தீர்மானிக்க வேண்டும். பதிவை எழுதுவோர் இயல்பிற்கும் தரவிரும்பும் தகவல்களுக்கும் ஏற்ற வகையில் பதிவின்நீட்சி அமையவேண்டும். பதிவின் இறுதியில் கட்டுரையாளர் பெயர் தரப்பட்டிருக்கும். ஆசிரியரின் முழுப் பெயரும் முகவரியும் அந்த அந்தத் தொகுதியின் முன்பக்கத்தில் இடம்பெற வேண்டும்.ஒவ்வொரு கட்டுரையும் அடிப்படைத் தகவல் தொகுப்பாய் அமைவதால் பதிவில் வேறு பிற தகவல் களைப் பெறுவதற்கும் விரிவாய் அறிவதற்கும் துணையாகின்ற வகையில் கட்டுரையின் இறுதியில் துணைநூல் பட்டியல் தரப் பெறும். தகவல் தொகுப்பிற்குத் துணையான நூல்களும் இதில் இடம்பெறும். கலைக்களஞ்சியத் தொகுதிகளின் இறுதியில் பொருளடக்கம் இடம்பெறும்.

கலைக்களஞ்சியப் பணி சிக்கல் உடையது என்றாலும் அதன் பயன்பாடு உலகளாவியது. கலைக்களஞ்சியத்தின் வழி, எந்தச் செய்தியையும் முழுமையாக அறிந்துகொள்ள முடிகின்றது. உலகளாவிய செய்திகளை அறிந்து நம் பொது அறிவினை வளர்த்துக்கொள்ள முடிகின்றது. கலைக்களஞ்சியம் தற்போது உள்ள செய்தி மட்டுமின்றி முன்னைய செய்திகளையும் தொகுத்து அளிக்கின்றது.


கலைக்களஞ்சியம்
பொது
சிறப்பு
வாழ்வியல் களஞ்சியம்
அறிவியல் களஞ்சியம்
பிரிவு
பயன்பாடு (வயது)
துறை
இலக்கியம்
ஆசிரியர்

தமிழ் அகராதி

முன்னுரை

ஒரு நாட்டின் வளர்ச்சி அந்நாட்டு மக்களின் சமூகப் பொருளாதார வளர்ச்சியின் அடிப்படையில் அமைந்துள்ளதைப் போல ஒரு மொழியின் வளர்ச்சியும் அம்மொழியைப் பேசுகின்ற மக்களின் வாழ்க்கை, நாகரீகம் என்பனவற்றின் வளர்ச்சியினைப் பொறுத்தே அமைகின்றது. மொழி காலந்தோறும் வளர்ந்து வருகின்ற காரணத்தால் அதன் அக மற்றும் புற அமைப்புகளில் பல மாற்றங்கள் ஏற்படுகின்றன. ஒருமொழி சிறப்படைவதற்கு அம் மொழியில் அமைந்துள்ள சொற்களின் வளமே காரணமாக அமை கின்றது. தமிழ்மொழி நீண்ட நெடிய இலக்கிய வரலாற்றைக் கொண்டதாகும். அது தனிப்பாடல்கள், காப்பியங்கள், சிற்றிலக் கியங்கள் எனப் பல்வேறு இலக்கிய வடிவங்களில் வளர்ச்சி யடைந்து வந்துள்ளது. தமிழ் மொழியின் சொல்வளம் அளவிட முடியாத வளத்தினையும், சிறப்பினையும் கொண்டது. சொற் களின் அளவு பெருகப் பெருக அச்சொற்கள் கொண்டுள்ள பொருள் கள் மறைகின்றன. எனவே, சொற்களுக்குப் பொருள் கூறும் பணி முக்கியமான பணியாக அமைந்துள்ளது.

தமிழ் மொழியில் சொற்களுக்குப் பொருள் கூறும் பணி தொல்காப்பியக் காலம் முதலே நடைபெற்று வந்துள்ளது. தொல் காப்பியம் நூற்பா நடையில் அமைந்த ஓர் இலக்கண நூலாகும். தொல்காப்பியத்தில் கடினமான சொற்களுக்குப் பொருள்கூறும் உரியியல் எனும் பகுதி காணப்படுகிறது. அதனையடுத்துச் சில நூற்றாண்டுகளுக்குப் பின்னர்த் தொல்காப்பியத்தை அடியொற்றிச்

சொற்களைத் தொகுத்துப் பல்வேறு வகைகளில் சொற்பொருள் கூறும் நிகண்டுகள் தோற்றம் பெறலாயின. நிகண்டுகள் பெருகி வரும் சொற்கூட்டத்தினைப் பல்வேறு வகைகளில் பாகுபடுத்திப் பொருள் கூறியுள்ளன. நிகண்டுகளில் சொற்களின் பொருள்களைக் கூறும் நிலையைத்தான் காணமுடிகின்றதே தவிர சொற்களை எளிதாகக் காணும் நோக்கீட்டு நெறிமுறைகளோ அகர வரிசை முறையோ காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. கி.பி. 15 ஆம் நூற்றாண்டு வரையிலும் இத்தகு நிலையே தொடர்ந்து இருந்து வந்துள்ளது. பிற்காலத்தில் சொற்களின் பொருளை எளிதாகத் தெரிந்து கொள்வதற்குரிய அகராதிகள் தோற்றம் பெற்றன. அகராதிகளிலும் அகரநிரல் அடிப்படையில் எளிதாக எந்தச் சொல்லுக்கும் பொருள் காணும் வகையில் சிறப்பான அகராதிகள், பிற்காலத்தில் தோற்றம் பெறலாயின.

தமிழ் அகராதிகளின் மரபினைக் கீழ்வரும் மூன்று பெரும் பிரிவுகளில் அடக்கலாம்.



1. தொல்காப்பிய மரபு

தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என்பன வற்றை விரிவுபட விளக்கிக் கூறுகின்றது. தமிழில் தோன்றிய இலக்கண நூல்களில் மிகவும் பழமையானதாகக் கருதப்படும் தொல்காப்பியம் அதன் காலத்திற்கு முந்தைய மொழி அமைப்பை எடுத்துக் கூறுவதோடு மட்டுமின்றி அதன் கால மொழிநிலை குறித்தும் இலக்கணம் வழங்குகின்றது. இவ்விலக்கணத்துள் சொற்களுக்குப் பொருள் கூறும் அகராதிக் கூறுகள் பரவலாகக் காணக் கிடக்கின்றன.

தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று பெரும் பிரிவுகளைக் கொண்டது. முதல் பிரிவாகிய எழுத்

ததிகாரத்தில் (வகை, வடிவம், பிறப்பு, புணர்ச்சி) எழுத்துக் களின் இலக்கணமும், இரண்டாவது பிரிவாகிய சொல்லதிகாரத்தில் பெயர், வினை, இடை, உரிச்சொற்களின் இலக்கணமும், மூன் றாவது பிரிவாகிய பொருளதிகாரத்தில் (அகம், புறம், செய்யுள், மரபு) வாழ்வியற் பொருளிலக்கணமும், செய்யுளிலக்கணமும், அணியிலக்கணமும் கூறப்பட்டுள்ளன. ஒவ்வொரு அதிகாரமும் 9 இயல்களைக் கொண்டு விளங்குகிறது.

சொல்லதிகார உரியியலில் 120 கடினமான சொற்களுக் குப் பொருள் கூறப்பட்டுள்ளன. மேலும் இவ்வதிகார இடை யியலில் 44 இடைச்சொற்களின் பொருள்கள் தரப்பட்டுள்ளன. தொல் காப்பிய உரியியல் சொற்களுக்குப் பொருள்கூறும் அகராதி அமைப்பைப் பெற்றுள்ளதால் உரியியலைத் தமிழின் முதல் அகராதி என்பர். தொல்காப்பியத்தில் அகராதியியல் மரபு குறித்த பல செய்திகள் பரவலாகக் காணக் கிடக்கின்றன. தொல்காப்பி யத்தில் காணப்படும் அகராதிக் கூறுகளைக் கீழ்வரும் மூன்று பிரிவு களில் அடக்கலாம். அவை,

1. சொல் நிலை
2. பொருள் நிலை
3. மரபு நிலை என்பனவாகும்.

சொல்நிலை

தொல்காப்பியத்தின் இடையியல், உரியியல், மரபியல் எனும் மூன்று இயல்களில் சொற்பொருள் குறித்த செய்திகள் பரவலாகக் காணப்படுகின்றன. செய்யுள்களில் இடம்பெறும் உரிச்சொற்களுக்குரிய (கடினமான சொற்களுக்கு) பொருளைக் கூறுவது தொல்காப்பிய உரியியலின் நோக்கமாகும். மேலும், அவ்விலக்கணத்தில் சொல் நிலையில் காணக்கிடக்கும் பல்வேறு அகராதியியல் செய்திகளைப் பின்வருமாறு தொகுத்து வழங்க லாம்.

சொல்நிலை
- 1. ஒலிப்பு முறை
- 2. சொல் மூலம்
- 3. புதிய சொற்கள்

ஓர் அகராதிக்கு அகரநிரல் முதுகெலும்பு போன்றது. தொல்காப்பிய முதற் நூற்பா

எழுத்தெனப் படுவ
அகரமுதல் னகர இறுவாய் *(தொல். எழுத்து. 1)*

எனத் தமிழின் நெடுங்கணக்கு முறையையும், உயிர் மயங்கியலில் உயிர் எழுத்துக்களை அகரம் முதல் ஔகாரம் ஈறாக வரிசைப் படுத்திக் கூறுவதையும் கொண்டு தொல்காப்பியம் தமிழ் எழுத் துக்களின் அகர வரிசையைக் கருத்திற்கொண்டுள்ளது என்பதை அறிய இயலுகின்றது. எனவே சொற்களை அகர நிரல்படுத்து வதற்குரிய மூலக்கருத்து தொல்காப்பியத்தில் இருந்ததாகக் கொள்ளலாம்.

ஒலிப்பு முறை

தெளிவான ஒலிப்பு முறை இல்லை எனின் சொற்களின் பொருள் வேறுபடும். ஒருவர் பேசுவதைத் தவறின்றி எளிதாகப் புரிந்து கொள்வதற்கு முறையான ஒலிப்பு முறை தேவைப்படு கின்றது. அகராதிகளில் இவ்வொலிப்பு முறை அவசியமான ஒன்றாகின்றது. ஆங்கில அகராதிகளில் காட்டப்படும் ஒலிப்பு முறையைப் போன்று தமிழ் அகராதிகளிலும் ஒலிப்பு முறையைச் சரியாகக் காட்டுவதற்குத் தொல்காப்பியப் பிறப்பியல் துணை புரிகின்றது.

சொல் மூலம்

சொற்களின் வேர்ச்சொல் மற்றும் சொல் மூலங்களைக் காட்டுவது பெரிய அகராதிகளில் இடம் பெறுகின்றது. தொல்காப் பியத்தில் சொல் மூலம் குறித்த செய்திகள் நேரடியாக இடம் பெறவில்லை. எனினும், செய்யுள் ஈட்டச் சொல்லை வகைப் படுத்துவதன் மூலம் சொற்களின் மூலத்தைத் தொல்காப்பியர் கருத்தில் கொண்டுள்ளார் என்பது தெரிய வருகின்றது.

இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல்லென்
றனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே

(தொல்.சொல். 880)

என்று சொற்களைத் தொல்காப்பியர் வகைப்படுத்துகின்றார். தேவநேயப்பாவாணர் சொற்களின் மூலம் குறித்துப் பிற்காலத்தில் சிறப்பாக ஆராய்ந்துள்ளது இவண் குறிப்பிடத்தக்கது.

புதிய சொற்கள்

மொழியில் வழங்கப்பெறும் புதிய சொல் மற்றும் பொருளை அகராதிகள் பதிவு செய்கின்றன. தொல்காப்பியரும் மொழியில் இடம்பெறும் புதிய சொற்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கருத்தை,

கிளந்த அல்ல வேறு பிற தோன்றினும்
கிளந்த வற்றியலான் உணர்ந்தனர் கொளலே
(தொல்.சொல்.602)

கூறிய கிளவிப் பொருணிலை அல்ல
வேறுபிற தோன்றினும் அவற்றோடு கொளலே
(தொல்.சொல்.273)

கடிசொல் இல்லைக் காலத்துப் படினே
(தொல்.சொல்.935)

போன்ற நூற்பாக்கள் மூலம் வெளிப்படையாக உணர்த்துகின்றார் நன்னூலார்.

பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையிலான *(நன்னூல்.462)*

என்று பழையனவற்றை அதாவது, வழக்கில் இல்லாதவற்றைக் களைவதற்கும் புதியவற்றை ஏற்றுக்கொள்வதற்கும் அனுமதி அளிக்கின்றார்.

சொல் நிலையில் சொல்மூலம், ஒலிப்புமுறை, புதிய சொற்கள் போன்றவை குறித்துத் தொல்காப்பியத்தில் வெளிப் படையான செய்திகள் கூறப்படவில்லை. எனினும், அச்செய்திகள் குறித்த கருத்து வெளிப்பாடு மறைமுகமாக இருப்பதை அறிய லாம்.

பொருள் நிலை

எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே

(தொல்.சொல்.640)

என்பது தொல்காப்பிய நூற்பா. எல்லாச் சொற்களும் ஏதேனும் ஒரு பொருளைக் குறித்து வருகின்றன. பொருள் இல்லாத எந்தச் சொல்லும் இல்லையென்பதை இது விளக்குகின்றது. எல்லாச் சொல்லும் பொருள் குறிப்பன என்றால் அசைநிலை, இசைநிறை, சொல்லடுக்கு என்பன பொருள் குறித்தது அல்ல என்றால் அவை தனியே பொருள் உணர்த்தாது. ஆனால், அவை சார்ந்த சொல்லின் பொருளைக் குறிக்கும் என்கிறார் தெய்வச்சிலையார் (மாதையன், *1997, ப.31*). பொருள் நிலையில் தொல்காப்பியத்தில் காணப்படும் அகராதியியல் கூறுகளை இரண்டு பெரும் பிரிவுகளில் அடக்கலாம்.

பொருள் நிலை

1. பொருள் இலக்கணம் | *2.* பொருள் வகை

பொருள் இலக்கணம்

சொற்கள் இரண்டு வகையான பொருள்களைக் கொண்டன.

1. சொற்பொருள்
2. இலக்கணப் பொருள்

இவை இரண்டும் அகராதிகளில் இடம் பெறுகின்றன. தொல்காப்பியர் இதனை,

பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்
சொல்லின் ஆகும் என்மனார் புலவர்

(தொல் .சொல்.64)

என்று குறிப்பிடுகின்றார். பொருண்மை என்பது சொல்லின் சொற்பொருள்; சொன்மை என்பது சொல்லின் இலக்கணப் பொருள்.

1. பொருண்மை
2. சொன்மை

பொருண்மை, சொன்மை ஆகிய இவ்விரு சொற்கூறுகளையும் அறிந்தால்தான் சொற்களையும் அவற்றின் பொருளையும் தெளிவாக உணரமுடியும் என்பது தொல்காப்பியர் கருத்து. தொல்காப்பியம் ஓர் இலக்கண நூலாக இருப்பதால் இதில் பொருண்மை விளக்கத்தைவிடச் சொன்மை விளக்கமே அதிகம் இடம் பெறுகின்றது.



பொருள் வகை

தமிழில் பொருள் என்னும் சொல்லுக்குப் பலபொருள்கள் உள்ளன. மேலே கூறியபடி இச்சொல் வேற்றுமைப் பொருள், எச்சப்பொருள் என்று சொல்லின் இலக்கணப் பொருளையும், பொருண்மை என்னும் சொற்பொருளையும் குறிக்கின்றது. சொற்பொருண்மை அடிப்படையில் பொருள் இரண்டு வகைகளில் அமைந்துள்ளது.

1. சொற்பொருட் கூறுகள்
2. பொருள் உறவுச் சொற்கள்

சொற்பொருட் கூறுகள்

சொல் உணர்த்தும் பொருள் மூன்று வகைகளாகப் பாகுபடுத்தப்படுகின்றது.

1.கருத்துப் பொருள்
2.குறிப்புப் பொருள்
3.பயன்பாட்டு எல்லை

மேற்கூறிய மூன்று பொருட்களில் கருத்துப்பொருளே முக்கியமானதாகும்.

சொல் உணர்த்தும் பொருளைத் தொல்காப்பியர் இரு வகைகளாகப் பிரிக்கின்றார்.

1.வெளிப்படை நிலை
2.குறிப்பு நிலை

தெரிபுவேறு நிலையலும் குறிப்பில் தோன்றலும்
இருபாற் றென்ப பொருண்மை நிலையே
(தொல்.சொல்.642)

வெளிப்படுநிலை என்பது சொல்லின் கருத்துப் பொருளைக் குறிப்பதாகும். குறிப்புநிலை என்பது சொல்லின் பொருளைக் குறிப்பாக உணர்த்துவதாகும். எனவே, சொல் உணர்த்தும் பொருள் கருத்துப்பொருள், குறிப்புப் பொருள் எனும் இரண்டும் ஆகும் என்பது தொல்காப்பியரின் கருத்தாகும். பசு என்னும் சொல் இயல்பாய் ஒரு விலங்கையும், 'அவன் ஒரு பசு' என்னும்போது அவன் சாதுவானவன் என்னும் குறிப்புப் பொருளையும் தரும்.

1. கருத்துப்பொருள்→ ←தெரிபு வேறுநிலை

சொற்பொருள் வகை

2. குறிப்புப் பொருள்→ ←குறிப்பு நிலை

மூன்றாவது பொருளான பயன்பாட்டு எல்லை குறித்தும் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். பயன்பாட்டு எல்லை என்பது

ஒரே பொருளைத் தரக்கூடிய பல சொற்கள் இருப்பினும், பயன் படுத்தப்படும் சூழலுக்குத் தக்கவாறு அச்சொற்களைப் பயன் படுத்தவேண்டும் என்பதாகும். தொல்காப்பியத்தில் கொடை என்னும் ஒரு பொருளைக் குறிக்கும் ஈ, தா, கொடு என்னும் சொற் கள் பயன்படுத்தப்படும் சூழல்கள் சுட்டப் பெறுகின்றன.

ஈ, தா, கொடு வெனக் கிளக்கும் மூன்றும்
இரவின் கிளவி ஆகிடன் உடைய
(தொல்.சொல்.444)

அவற்றுள்

ஈயென் கிளவி இழிந்தோன் கூற்றே
(தொல். சொல்.445)

தாவென் கிளவி ஒப்போன் கூற்றே
(தொல்.சொல்.446)

கொடுஎன் கிளவி உயர்ந்தோன் கூற்றே
(தொல்.சொல்.447)

ஈ,தா,கொடு என்னும் மூன்று சொற்களும் பொருளைப் பிறரிடம் கேட்டுப் பெறப் பயன்படுத்தப்பெறும் சொற்களாகும். எனினும் ஈ என்னும் சொல் இழிந்தவன் உயர்ந்தவனிடத்தும், தா என்பது ஒத்தவர்களிடையேயும், கொடு என்பது உயர்ந்தவன் தாழ்ந்தவனிடத்தும் பயன்படுத்தப்படும் சொற்களாகும். இவ் வாறே செலவு, வரவு, தரவு, கொடு ஆகிய சொற்களின் வழக்கு வரையறையையும் தொல்காப்பியர் *(511, 512, 513)* குறிப்பிட் டுள்ளார். தா,வா என்னும் இரண்டு சொற்களும் தன்மை, முன் னிலையிலும்,சொல்,கொடு என்னும் இரண்டு சொற்களும் படர்க்கையிலும் பயன்படுத்தப்பெறும் எனக் கூறுகின்றார்.

எனவே, அகராதியியலார் கூறும் சொற்பொருள் கூறு களான கருத்துப்பொருள், குறிப்புப்பொருள், பயன்பாட்டு எல்லை ஆகிய மூன்றினைக் குறித்த செய்திகள் தொல்காப் பியத்தில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன. முழுச் சொற்கள் மட்டு

மின்றிக் கட்டுடை வடிவங்களான இலக்கணச் சொற்களுக்கும் பயன்பாட்டு எல்லை சுட்டப்பெறுகின்றது குறிப்பிடத்தக்கது.

பொருள் உறவுச் சொற்கள்

சொற்கள் அவை வழங்கும் சூழலுக்குத் தக்கவாறு பல பொருள் கூறுகளைப் பெறுகின்றன. சொற்கள் பொருள் உறவு அடிப்படையில் நான்கு வகைப்படுகின்றன. அவை:

1. ஒருபொருட் பலசொல்
2. பலபொருட் ஒருசொல்
3. எதிர்ச்சொல்
4. மீச்சொல், கீழ்ச்சொல்

என்பனவாகும்.

தொல்காப்பிய உரியியல் முதல் நூற்பாவில்

உரிச்சொற் கிளவி விரிக்குங் காலை
இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றி
பெயரினும் வினையினும் மெய்தடு மாறி
ஒருசொல் பலபொருட் குரிமை தோன்றினும்
பலசொல் ஒரு பொருட் குரிமை தோன்றினும்

(தொல்.சொல். 297)

என ஒருசொல் பலபொருள், ஒருபொருள் பலசொல் குறித்து கூறியுள்ளார்.

ஒருசொல் பலபொருள் (பொருட்பன்மை)

ஒருசொல் ஒன்றிற்கு மேற்பட்ட பொருள்களைக் கொண்டு இருப்பின் அது பொருட்பன்மை எனப்படும். தொல்காப்பிய உரியியலில் கூறப்பட்டுள்ள 120 கடினச் சொற்களில் பலபொருள் தரவல்ல உரிச்சொற்களும் இடம் பெற்றுள்ளன. சான்றாகக் 'கடி' என்னும் சொல்லைக் குறிப்பிடலாம்.

கடியென் கிளவி
வரைவே கூர்மை காப்பே புதுமை
அச்சம் முன்தேற்றும் ஆயீ ரைந்தும்
மெய்ப்படத் தோன்றும் பொருட்டா கும்மே
(தொல்.சொல். 383)

கடி என்னும் சொல் வரைவு தொடங்கிப் பல பொருள்களைத் தருவதாகத் தொல்காப்பியர் கூறுகின்றார். இதனைப் போன்று தொல்காப்பிய உரியியலில் பலபொருள்களைத் தரும் சொற்கள் பல காணப்படுகின்றன.

ஒருபொருட் பலசொற்கள்

ஒன்றுக்கு மேற்பட்ட வெவ்வேறு சொற்கள் ஒரு பொருளைக் குறிப்பின் அவை ஒருபொருட் பலசொற்கள் எனப் படும். இது ஒருபொருட் பன்மொழி, ஒரு பொருட் பலபெயர், ஒரு பொருட் கிளவி எனப் பல பெயர்களில் வழங்கப் பெறும். இதற்குச் சான்றாகத் தொல்காப்பிய உரியியலில் பல நூற்பாக்கள் காணப்படு கின்றன.

சால உறு தவ மிகுதிப் பொருள் *(தொல்.சொல்.301)*

தடவும் கயவும் நனியும் பெருமை *(தொல்.சொல்.320)*

என்று பல நூற்பாக்கள் ஒரு பொருள் பல சொற்கள் குறித்தவை யாகவே அமைகின்றன.

இவ்வாறு தொல்காப்பிய உரியியலில் ஒருசொல் பல பொருள், ஒருபொருள் பலசொல் என்பன பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. உரியியல் நூற்பா நடையில் அமைந்த ஓர் அகராதியாகவே விளங்குவதைப் பாலசுப்பிரமணியன், நாச்சி முத்து ஆகியோர் குறிப்பிடுகின்றனர் (மாதையன்,1997,ப.30).

எதிர்ச்சொல்

எதிர்மறை என்பது ஒருவகையான எதிர்ப்பொருள் ஆகும். எதிர்மறை குறித்துத் தொல்காப்பியர் பல நூற்பாக்களைத் தந்துள் ளார்.

உயர்திணை x அஃறிணை
ஒருமை x பன்மை
இயற்கை x செயற்கை
ஆண்மை x பெண்மை

போன்று பல எதிர்மறைச் சொற்கள் தொல்காப்பியத்தில் இடம் பெற்றுள்ளன.

பொருள் நிலையில் ஒரு சொல் பலபொருள், ஒரு பொருள் பலசொல், எதிர்ச்சொல் போன்றவை தொல்காப்பியத்தில் விளக்க மாகக் கூறப்பட்டுள்ளன.

மரபுநிலை

மரபு சுட்டுவதும் அகராதியின் பணியாகும். மரபின் முக்கியத்துவம் உணர்ந்து செய்யுள் வழக்குடன் உலக வழக்கிற்கென்று பொதுவாகச் சில மரபுகள் இருப்பதை உணர்ந்து தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் மரபியல் குறித்து ஓர் இயலை அமைத்துள் ளார். மரபு என்பது முறைமை அல்லது வழக்கமுறை என்று கொள்ளலாம். அதாவது, ஒன்றை இப்படித்தான் சொல்வது முறைமை அல்லது வழக்கம் என்று வகுத்துக் கொள்வதாகும். காட்டாக, இளம் யானையை யானைக்குட்டி என்று கூறுவதே மரபு. அதை விடுத்து யானைக் குஞ்சு என்று கூறமுடியாது.

சிறிய விலங்கு

1.	நாய்	குட்டி → மரபு
	யானை	குட்டி → மரபு
2.	கோழி	குஞ்சு → மரபு
	புறா	குஞ்சு → மரபு

தொல்காப்பிய மரபியலில் ஆண்பாற் பெயர்கள், பெண்பாற் பெயர்கள், இளமைப் பெயர்கள் ஆகியவற்றின் மரபுகள் குறிக்கப்படுகின்றன.

எ.கா.

பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற் றிளமை

(தொல்.மரபு.1)

தவழ்பவை தாமே அவற்றோ ரன்ன

(தொல்.மரபு.1)

என்னும் நூற்பாவில் பார்ப்பு, பிள்ளை என்னும் இரண்டு பெயர்களும் பறவை மற்றும் ஊர்வனவற்றின் இளமைப் பெயர்களாகும். இதில் ஒவ்வொரு விலங்கு மற்றும் ஆண், பெண்பாற் பெயர்கள் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன. இளமைப் பெயர்களாக ஒன்பது பெயர்களும், ஆண்மை என்ற பொருளில் 15 பெயர்களும் பெண்பாற் பெயர்களாக 13 பெயர்களும் தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ளன. இதில் ஓர் உயிரினத்திற்குப் பல பெயர்களும் பல உயிரினங்களுக்கு ஒரு பெயரும் சுட்டப்பெற்றுள்ளன.

மூன்று உயிரினங்கள் { முசு, குரங்கு, ஊகம் } - மந்தி (பெண்பால்)

நரி → { குட்டி, குருளை, பிள்ளை } மூன்று (இளமைப்பெயர்கள்)

நரி என்னும் விலங்கின் இளமைப் பெயர்களாகக் குட்டி, குருளை, பிள்ளை என்னும் மூன்று பெயர்களும், மந்தி என்னும் ஒரே பெண்பாற் பெயர் மூசு, குரங்கு, ஊகம் என்னும் மூன்று விலங்குகளுக்கும் தரப்பட்டுள்ளன. பறவை, விலங்கிற்குத் தொல்காப்பியர் கூறிய பல மரபுப் பெயர்கள் இக்கால வழக்கில் பயன்பாட்டில் இல்லை. பல பெயர்கள் தெரியாத பெயர்களாகவே உள்ளன. (ஒருத்தல், மோத்தை, தகர், அப்பர் (ஆண்பால்) (தொல் மரபு. 2)

உயிர்களின் வகைப்பாடாக ஒன்று முதல் ஆறு அறிவு வரையுள்ள உயிர்களின் உணர்வுகளும், ஒவ்வொரு அறிவு உயிர் சார்ந்து

உயிரினங்களும் விளக்கப்பட்டுள்ளன. ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு என்னும் எண்களால் சுட்டப்பெறும் தொகைப் பெயர்கள் மரபியலில் விளக்கப்பட்டுள்ளன.

ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாக்கே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனமே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே
(தொல். மரபு.23)

என்னும் நூற்பாவினால் ஓரறிவு முதல் ஆறறிவு வரையுள்ள தொகைப் பெயர்கள் விளக்கப்பட்டுள்ளன. இது தொல்காப்பியத் திற்குப் பின் எழுந்த நிகண்டுகளின் பல்பொருள் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதிக்கு முன்னோடியாக அமைந்தது எனலாம்.

தொல்காப்பியத்தில் கருப்பொருள்கள் எனக் கூறப்பட்டி ருக்கும் தெய்வம், உணவு, மா, மரம், புள், பறை, யாழ் என ஏழும் அகத்திணையியலில் விளக்கும் நிலம் மற்றும் மக்கள் பற்றிய குறிப்பும், உரியியலில் கூறப்படும் இசையினும், குறிப்பினும், பண்பினும் என்பதும், தொல்காப்பிய வினையியலும் பிற்கால நிகண்டுகளின் பல்வேறு பெயர்த் தொகுதிகள் தோன்றக் காரண மாக இருந்தன எனலாம்.

மேலே கூறப்பட்டவற்றினால் தொல்காப்பியத்தில், அகராதியியல் கூறுகள் பல காணப்பட்டன என்பதுடன், தொல் காப்பியமே பின்வந்த நிகண்டுகளுக்கும் மூலமாக இருந்திருக்க வேண்டும் என்பதும் தெரிகின்றது. மேலும், அகராதி மரபு என்பது தொல்காப்பியத்திலேயே இருந்துள்ளதும் புலனாகின்றது.

நிகண்டு மரபு

தொல்காப்பியத்திற்குப் பின்பு தமிழ் இலக்கியப் பரப்பில் பல மாறுதல்கள் ஏற்பட்டன. இலக்கணத்தின் ஒரு பகுதியாகவே மட்டும் இருந்த சொற்பொருள் கூறும் மரபு தனியொரு பிரிவாக

வளர வேண்டிய கட்டாயச் சூழல் உருவானது. சொல்நிலை மட்டு மின்றிப் பொருள் நிலையிலும் பெருக்கங்கள் ஏற்பட்ட காரணத் தால் சொற்களுக்குப் பொருள் கூறுவதற்கு எனத் தனியொரு நூல் தேவைப்பட்டது. இதன் காரணமாகக் கி.பி. 9ம் நூற்றாண்டு முதல் நிகண்டுகள் தோற்றம் பெறலாயின. நிகண்டு என்று சொல்லப் படுவது 'இச்சொற்கு இதுவே பொருள்' என்று சொல்லுக்கும், பொருளுக்குமுள்ள ஆற்றலாகிய நியமம் அறிவிக்கும் நூலாகும். இது இலக்கணம்போன்றதொரு கருவி நூலாகும். நிகண்டு என் னும் சொல்லுக்குக் கூட்டம் அல்லது தொகுதி என்பது பொரு ளாகும். சொற்கள் தொகுதியாகக் கூட்டமாக அமைக்கப்பட்டுப் பொருள் விளக்கப்படுவதால் நிகண்டு என்னும் பெயரைப் பெற் றது.

வேதச் சொற்களின் பொருளை ஆராயும்முறை நிருத்தம் எனப்படும். இந்நிருத்தத்தின் ஒரு பகுதி நிகண்டு ஆகும். நிருத் தத்தின் முதல் காண்டமாகிய நைகண்டுகம் பூமி,பொன், காற்று முதலிய பொதுப் பெயரின்கீழ் இவை தொடர்பான ஒருபொருள் பல பெயர்களைத் தொகுத்துத் தரும். இரண்டாவது காண்டமாகிய நைகமம் ஒரு பெயர்ப் பலபொருளைக் கூறும் பகுதியாகும். மூன் றாவது காண்டமாகிய தைவதம் வைதிக தேவதைகள் பற்றிய தாகும். வேத அருஞ்சொற்களுக்குப் பொருள் விளக்கும் யாஸ்கரது நிருத்தமே வடமொழி அகராதியியலின் தோற்றுவாய் எனலாம். பின்னர் எழுந்த சொல்லுக்குப் பொருள் கூறும் தனி நூல்கள் நைகண்டுகம் என்பதன் மூலச்சொல்லாகிய நிகண்டு என்னும் பொதுப்பெயரால் வழங்கப்பட்டன. நிகண்டு என்னும் வட மொழிப் பெயர் தமிழ் உலகில் பெருக வழங்கி நிலைபெற்று விட்டது. யாப்பு நெறியில் சொற்பொருள் கூறும் தமிழ் நூல்கள் நிகண்டு என்னும் பொதுப்பெயரால் வழங்கப்படுகின்றன.

(நிகண்டு → ← கூட்டம் அல்லது தொகுதி)

நிகண்டு மரபினில் இடம்பெறும் செய்திகளை இரண்டு பெரும் பிரிவுகளில் அடக்கலாம்.

1. நிகண்டு அமைப்பு
2. நிகண்டு வகை

நிகண்டு அமைப்பு

நிகண்டுகளின் உள்ளடக்க அமைப்பினை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம்

நிகண்டு அமைப்பு
- 1. பொது
- 2. சிறப்பு

எல்லா நிகண்டுகளிலும் பொதுவாகக் காணப்படும் அமைப்பினைப் பொது என்னும் பிரிவிலும் ஒவ்வொரு நிகண்டு களிலும் அந்நிகண்டிற்கே உரியதாகக் காணப்படும் அமைப் பினைச் சிறப்பு எனும் பிரிவிலும் அடக்கலாம்.

நிகண்டுகள் பொதுவாக மூன்று பிரிவுகளைக் கொண்டு விளங்குகின்றன.

1. ஒரு பொருட் பல்பெயர்த்தொகுதி
2. ஒரு சொல் பல்பொருள்தொகுதி
3. பல்பொருள்கூட்டத்து ஒருபெயர்த்தொகுதி (தொகைச் சொற்கள்)

இம்மூன்று பிரிவுகளுக்கும் அடிப்படை தொல்காப்பிய மாகும். தொல்காப்பிய உரியியல், இடையியல், மரபியல் ஆகிய இயல்களில் காணப்படும் சொற்பொருள் விளக்கங்களே இம் மூன்று பிரிவுகளுக்கும் அடிப்படையாகும். இம்மூன்றில் ஒரு பொருட் பல பெயர்த் தொகுதி அகராதி கூறுகளைக் கொண்ட தாகும். நடுவிலுள்ள ஒருசொல் பல பொருள் தொகுதி இன்றைய அகராதிகளைப் போன்றது என்பார் சுந்தர சண்முகனார். பல் பொருள் கூட்டத்து ஒரு பெயர்த்தொகுதி ஆங்கிலத்தில் வழங்கும் சொற்களஞ்சியம் போன்றதாகும்.



நிகண்டு அமைப்பினில் பெரும்பான்மையான நிகண்டு களில் இந்த மூன்று பிரிவுகளும் சில நிகண்டுகளில் ஒன்று இரண்டு குறைந்தும் காணப்படும்.

ஒவ்வொரு நிகண்டிலும் அந்நிகண்டிற்கு என்று அமைந்த தனித்தன்மை வாய்ந்த அமைப்பு முறை சிறப்பு என்னும் பிரி வினில் அடங்கும். பொது அமைப்பு பெரும்பான்மையும் எல்லா நிகண்டுகளிலும் காணப்படும்.

நிகண்டு வகை

தொல்காப்பிய காலத்திற்குப் பின்பு இலக்கியங்களின் தோற்றங்கள் மிகுதியாகக் காணப்பட்டன. வடமொழியின் செல் வாக்கினால் தமிழ் மொழியில் கலப்பு ஏற்பட்டது. சமயத்தினைப் பரப்பும் நோக்கில் ஏராளமான நூல்கள் தோன்றின. மேலும் சொற் களின் தன்மையிலும், வடிவங்களிலும், பொருளிலும் நேர்ந்த மாற்றங்களினால் தமிழ் மொழியில் சொற்றொகை பெருகியது. இச்சொற்றொகைப் பெருக்கத்தின் காரணமாக நிகண்டு போன்ற கருவி நூல்கள் தேவையானவை ஆயின.

தமிழில் நிகண்டுகள் கி.பி. 8 ஆம் நூற்றாண்டிலிருந்து தோற் றம் பெறலாயின.

சேந்தன் திவாகரம்

நிகண்டுகளில் மிகவும் தொன்மையானதும் முதன்மை யானதும் ஆன நிகண்டு திவாகர நிகண்டு ஆகும்.

இந்நிகண்டின் ஆசிரியர் திவாகரர். திவாகரரை ஆதரித்த வள்ளல் சேந்தன் பெயருடன் இணைந்து சேந்தன் திவாகரம் என இந்நிகண்டு வழங்கப்பெறுகிறது. திவாகர நிகண்டின் காலம் கி.பி.9 ஆம் நூற்றாண்டாகும். இந்நிகண்டினை முதன்முதலில் பதிப்பித்து வெளியிட்டவர் தாண்டவராய முதலியார் ஆவார். திவாகர நிகண்டு 12 பிரிவுகளையும் 2518 நூற்பாக்களையும் 9500 சொற்களையும் கொண்டு அமைந்துள்ளது.

ஒருபொருட் பலபெயர்த்தொகுதி

1. தெய்வப் பெயர்த்தொகுதி
2. மக்கட் பெயர்த்தொகுதி
3. விலங்கின் பெயர்த்தொகுதி
4. மரப்பெயர்த் தொகுதி
5. இடப் பெயர்த்தொகுதி
6. பல்பொருட் பெயர்த்தொகுதி
7. செயற்கை வடிவின் பெயர்த்தொகுதி
8. பண்பின் பெயர்த்தொகுதி
9. செயல்பற்றிய பெயர்த்தொகுதி
10. ஒலி பற்றிய பெயர்த்தொகுதி
11. ஒருசொல் பலபொருட் பெயர்த் தொகுதி
12. பல்பொருள் கூட்டத்து ஒருபெயர்த் தொகுதி

மேற்கூறிய 12 தொகுதிகளையும் மூன்று பிரிவுகளில் அடக்கலாம். 11 ஆம் தொகுதி இக்கால அகராதி போன்ற அமைப் பினை உடையது. அகராதிகளில் எழுத்துக்களின் வரிசை முறை யில் சொற்கள் அமைக்கப்பட்டிருப்பதால் எந்தச்சொல்லையும் எளிதில் கண்டுபிடிக்கலாம். அதுபோல் நூற்பா நடையில் அமைந் துள்ள நிகண்டுகளில் எளிதில் பொருள் காண்பதரிது.

பிங்கல நிகண்டு

திவாகர நிகண்டினை அடுத்து 10 ஆம் நூற்றாண்டில் தோன்றியது பிங்கல நிகண்டு. பிங்கலந்தை என்ற பெயராலும் வழங்கப்பெறும். 1890ஆம் ஆண்டு சிவன்பிள்ளை என்பவரால் பதிப்பிக்கப்பெற்றது. இந்நிகண்டில் 15,800 சொற்கள் இடம் பெற்றுள்ளன. பிங்கல நிகண்டில் 10 வகைப்பாடுகள் காணப்படு கின்றன. திவாகரத்தின் ஒவ்வொரு பிரிவும் தொகுதி என அழைக்கப்படுகின்றது.

ஒருபொருட் பல சொல்

1. வான்வகை
2. வானவர் பகை
3. ஐயர் வகை
4. அவனிவகை
5. ஆடவர் வகை
6. அறுபோகவகை
7. பண்பிற் செயலின்பகுதி வகை
8. மாப்பெயர் வகை
9. மரப்பெயர் வகை
10. ஒரு சொல் பலபொருள் வகை

மேற்கூறப்பட்ட பத்து வகைகளுள் முதல் ஒன்பது வகை ஒரு பொருட் பல பெயர்த்தொகுதி, பத்தாவது வகை ஒருசொல் பலபொருள் பெயர்த்தொகுதி ஆகும். மூன்றாவது பிரிவு பிங்கலத் தில் இல்லை. திவாகர நிகண்டில் இடம்பெற்ற சில நூற்பாக்கள் அப்படியே பிங்கலத்தில் இடம்பெற்றுள்ளன. பத்தாவது பெயர்த் தொகுதி அகர வரிசை முறையில் அமைந்துள்ளது. (இது பதிப்பித்த வர் முயன்று செய்த பணியாகும்.)

சூடாமணி நிகண்டு

நிகண்டுகளில் தலைசிறந்தது இந்நிகண்டு ஆகும். இதன் ஆசிரியர் மண்டலபுருடர். இது 12 தொகுதிகளைக் கொண்டுள்ளது. திவாகரம் போன்றே (தெய்வப் பெயர் என்பது தேவப்பெயர்) அமைந்துள்ளது. இதுசொற்பொருளை எளிதில் நினைவில்

வைத்துக் கொள்வதற்கு ஏற்றவாறு விருத்தப்பாவில் அமைந்துள்ளது. இந்நிகண்டில் 1197 நூற்பாக்களில் 11,000 சொற்கள் விளக்கம் பெற்றுள்ளன. திவாகரத்தை ஒத்து அமைந்துள்ளதால் திவாகரத்தில் விரிவான மறுபதிப்பு சூடாமணி நிகண்டு என்று சொல்லலாம். 11 ஆம் தொகுதியாகிய ஒரு சொல் பல்பொருள் பெயர்த் தொகுதி இக்கால அகராதியைப் போன்றது. மேலும் இந் நிகண்டு எதுகை முறையில் அமைந்துள்ளதால் படிப்போர்க்கு எளிமையாக உள்ளது. ககர எதுகை முதலாக னகர எதுகை ஈறாகப் பதினெட்டு வகைகளில் பொருள் விளக்கப்பட்டுள்ளது. ஆறுமுக நாவலர் முதல் பலர் இந்நிகண்டைப் பதிப்பித்துள்ளனர். மேற் கூறப்பட்ட இரண்டு நிகண்டினைவிட இந்நிகண்டு மனப்பாடம் செய்வதற்கு மிகவும் எளிமையாக உள்ளது.

அகராதி நிகண்டு

இதன் ஆசிரியர் புலியூர் சிதம்பர ரேவணசித்தர் ஆவார். இதுவும் சூத்திர நடையில் எழுதப்பெற்ற நிகண்டாகும். இந் நிகண்டு 1594 இல் வெளியானது. முதல் எழுத்து அகர வரிசையில் அமைந்திருந்ததால் இது அகராதி நிகண்டு எனப் பெயர் பெற்றது. தமிழ் அகராதி மரபில் முதல் முதலாக அகர வரிசையை அறிமுகம் செய்த பெருமை இந்நிகண்டைச் சாரும். அகராதி பெயர்த்தொகுதி முதல் அகராதிப் பெயர்த்தொகுதி ஈறாக 10 தொகுதிகளைக் கொண் டது. ஒரு பொருளுடைய சொல் முதல் 46 பொருளுடைய சொல் வரை சொற்கள் தனித்தனியாக ஒவ்வொரு தொகுதியிலும் பிரித்துத் தரப்பட்டுள்ளன. மதுரைத் தமிழ்ச்சங்கம் இந்நிகண்டினைப் பதிப் பித்துள்ளது. நிகண்டின் பொதுப் பிரிவுகளான மூன்று பிரிவுகளில் ஒருசொல் பல்பொருள் பெயர்த்தொகுதி மட்டுமே இதில் இடம் பெற்றுள்ளது. அகராதி நிகண்டில் இடம் பெற்றுள்ள பாயிரப் பாடல் அந்நிகண்டினை அறிவதற்குரிய அகச் சான்றாய் அமைந் துள்ளது.

உரிச்சொல் நிகண்டு

நிகண்டு என்பதைக் குறிக்க உரிச்சொல் என்றே பண்டைக் காலத்தில் கூறப்பட்டது. இதன் ஆசிரியர் காங்கேயர். இந்நிகண் டின் காலம் 17 ஆம் நூற்றாண்டாகும். இந்நிகண்டு 12 தொகுதி களைக் கொண்டது. வெண்பாவால் ஆனது. மொத்தம் 287 வெண்

பாக்களைக் கொண்டது. இது 1840 ஆம் ஆண்டு புதுச்சேரி அரசாங்க அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப் பெற்றது. இந்நிகண்டு பத்து தொகுதிகள் உடையது என்றும், ஒலி பற்றிய பெயர்த் தொகுதியும், பல்பொருள் கூட்டத்து ஒரு பெயர்த் தொர்குதியும் பின்னர்ச் சேர்க்கப் பட்டது என்ற கருத்தும் உண்டு.

கயாதர நிகண்டு

இந்நிகண்டின் ஆசிரியர் கயாதரர். இதன் காலம் 17ஆம் நூற்றாண்டு ஆகும். இந்நிகண்டில் பதினொரு இயல்கள் உள்ளன. தொகுதி, வகை என்பதற்குப் பதிலாக இயல் என்னும் பிரிவு இந்நிகண்டில் உள்ளது. அறுநூற்று அறுபத்தாறு நூற்பாக்களில் 11,350 சொற்கள் இடம் பெற்றுள்ளன.இந்நூற்பாக்கள் கட்டளைக் கலித்துறையைச் சார்ந்தன. எனவே, பாடல்களை எளிதில் மனப்பாடம் செய்யலாம். வரலாற்றுக் குறிப்புகள் பொதிந்த பாடல்கள் ஏராளம் உள்ளன. நூல் முழுமையும் அந்தாதித் தொடையால் பாடல்கள் அமைந்திருப்பது தனிச் சிறப்பாகும். 1930 இல் பேரா. வையாபுரிப் பிள்ளை இந்நூலைப் பதிப்பித்துள்ளார். பல்பொருள் கூட்டத்து ஒரு பெயர்த்தொகுதியாகிய மூன்றாவது பிரிவு இந்நிகண்டில் இல்லை.

பல்பொருள் சூடாமணி நிகண்டு

இதன் ஆசிரியர் ஈசுவரப்பாரதியார். நிகண்டு பொதுப் பிரிவு மூன்றனுள் ஒருசொல் பல்பொருள் பெயர்த்தொகுதி என்னும் மூன்றாம் பிரிவும், பல்பொருள் கூட்டத்து ஒருபெயர்த் தொகுதி என்னும் மூன்றாம் பிரிவும் இந்நிகண்டில் இடம் பெற்றுள்ளன. இந்நிண்டில் மூன்று காண்டங்கள் உள்ளன.

ஒருசொல் பல பொருள் பெயர்த்தொகுதி

1.ஒருசொல் ஒரு பெயர்க்காண்டம்
2.ஒருசொல் பல்பொருட் காண்டம்
3.பல்பொருள் கூட்டத்து ஒருபெயர்க் காண்டம்

அகராதி நிகண்டைப் போலவே இந்நிகண்டிலும் முதலெழுத்து அகரவரிசை செய்யப்பட்டுள்ளது.அகராதி நிகண்டில்

பத்துப் பிரிவுகளில் சொற்கள் பரவலாகவும், ஒரு பெயர் முதல் 46 பெயர் வரை பிரிக்கப்பட்டிருப்பதாலும் சொற்களின் பொருள் காணல் அரிது. இந்நிகண்டில் இரண்டே பிரிவுகள் ஆதலால் பொருள் காணும் சொல்லைத் தேடுவது எளிதாக உள்ளது. இந் நிகண்டின் முதல் காண்டத்தில் 2800 சொற்களும்,இரண்டாவது காண்டத்தில் 1465 சொற்களும் இடம் பெற்றுள்ளன.

வடமலை நிகண்டு

இந்நூலின் ஆசிரியர் பல்பொருள் சூடாமணி நிகண்டு ஆசிரியர் ஈசுவரப் பாரதியார் ஆவார். இந்நிகண்டின் காலம் கி.பி. 17ஆம் நூற்றாண்டு ஆகும். இதில் 10 தொகுதிகள் காணப்படு கின்றன. பல்பொருள் சூடாமணி நிகண்டும் வடமலை நிகண்டும் ஒருநூல் போலவே தோன்றுகின்றன. வடமலை நிகண்டு சற்று விரிவாக அமைந்துள்ளது. இந்நிகண்டு 1983இல் பாலசாரநாதன் உரையுடன் நாகசாமி என்பவரால் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

கைலாச நிகண்டு சூடாமணி

இந்நிகண்டின் ஆசிரியர் கைலாசர். இதன் காலம் கி.பி.17 ஆம் நூற்றாண்டாகும்.இந்நிகண்டு 56 தொகுதிகளுடன் நூற்பா நடையில் அமைந்துள்ளது. முதல் 49 பிரிவுகள் திவாகரத்தில் உள்ள முதல் பத்துத் தொகுதிகளின் வகைகளாகும். இறுதியிலுள்ள 7 பிரிவுகள் திவாகரத்திலுள்ள ஒரெழுத்தொருமொழி என்னும் பிரிவு மட்டும் அகரவரிசையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்நிகண்டு இதுவரை அச்சேறவில்லை.

பாரதி தீபம்

இந்நிகண்டின் ஆசிரியர் திருவேங்கட பாரதி. தீபம் என்றால் விளக்கு என்று பெயர். இந்நிகண்டின்காலம் கி.பி.17 ஆம் நூற்றாண்டாகும்.12 தொகுதிகளைக் கொண்ட இந்நிகண்டு 737 நூற்பாக்களில் 13,000 சொற்களைக் கொண்டுள்ளது. நூற்பாக்கள் கட்டளைக் கலித்துறையால் ஆனவை. இந்நிகண்டு 1980 இல் மு. சண்முகம்பிள்ளை என்பவரால் பதிப்பிக்கப்பட்டுச் சென்னைப் பல்கலைக் கழகத்தால் வெளியிடப்பட்டது.

ஆசிரிய நிகண்டு

இந்நிகண்டினை இயற்றியவர் ஆண்டிப் புலவர் என்பவராவார். இதன் காலம் கி.பி.17 ஆம் நூற்றாண்டாகும். நூற்பாக்கள் மிக நீளமான அடிகொண்ட ஆசிரிய விருத்தத்தால் ஆனது. 11 தொகுதிகளைக் கொண்டது. 263 பாடல்கள் இந்நிகண்டில் இடம் பெற்றுள்ளன. முதல் பத்துத் தொகுதிகளில் 12000 சொற்கள் இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு பாட்லிலும் சொல்லின் பொருள் பக்கத்தில் அப்பொருளின் எண்ணிக்கையைக் காட்டியிருப்பது இந் நிகண்டின் சிறப்பாகும். இது 1975 இல் வீ.சொக்கலிங்கம் என்பவரால் பதிப்பிக்கப்பெற்றது. நிகண்டு பொதுப் பிரிவுகள் மூன்றில் பல் பொருள் கூட்டத்து ஒரு பெயர்த்தொகுதியைத் தவிர ஏனைய இரண்டு பிரிவுகளும் இந்நிகண்டில் இடம் பெற்றுள்ளன.

அரும்பொருள் விளக்க நிகண்டு

இந்நிகண்டின் ஆசிரியர் அருமருந்தைய தேசிகர். சொற்களுக்கு அருமையாகப் பொருள் விளக்கும் நிகண்டு அரும் பொருள் விளக்க நிகண்டு என்றானது. இதன் காலம் கி.பி.17 ஆம் நூற்றாண்டாகும். திவாகரம் மற்றும் சூடாமணி நிகண்டுகளிலுள்ள பதினோராவது தொகுதி ஒன்றைப் பற்றி மட்டுமே இந்நிண்டு விரிவாகக் கூறுகின்றது. 700 நூற்பாக்களில் 3,200 சொற்கள் இந் நிகண்டில் இடம் பெற்றுள்ளன. ககர எதுகை முதலாக னகர எதுகை ஈறாக 18 தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. சூடாமணியிலும் எதுகை அமைப்பு உண்டு. ஆனால் சூடாமணி நிகண்டில் ஓர் எதுகை சொற்களுக்கிடையே வேறு எதுகைச் சொல் கலந்துள்ளது. ஆனால் இந்நிகண்டில் ஓர் இனத்து எதுகைச் சொற்களோடு பிற இனத்து எதுகைச் சொற்கள் கலக்கவில்லை. எனவே, சூடாமணி நிகண்டைக் காட்டிலும் இந்நிகண்டில் எதுகை அமைப்பு சீர் செய்யப்பட்டுள்ளது. பாயிரப்பாடலில் ஆசிரியர் வரலாறு நூல் அமைப்பு போன்றவை விளக்கப்பட்டுள்ளன. சொற்களின் பொருள் சில இடங்களில் எண்ணிக்கை இடப்பட்டுள்ளது.

தொகை நிகண்டு

இதன் ஆசிரியர் சுப்பிரமணிய கவிராயர். இந்நிகண்டின் காலம் 18 ஆம் நூற்றாண்டாகவும் இருக்கலாம். தொகைச் சொற்களை விளக்குவதே இத்தொகை நிகண்டாகும். நிகண்டுப் பிரிவு

களில் மூன்றாம் பிரிவாகிய பல்பொருள் கூட்டத்து ஒருபொருள் பெயர்த்தொகுதி மட்டுமே இதில் விளக்கப்பட்டுள்ளது.

பொருள் தொகை நிகண்டு

இந்நிகண்டின் ஆசிரியர் சுப்பிரமணிய பாரதி(தேசிய கவி அல்லர்). இதன் காலம் கி.பி.18 ஆம் நூற்றாண்டு ஆகும். பல் பொருள் கூட்டத்து ஒரு பெயர்த்தொகுதியின் விரிவான மறு பதிப் பாகும். 1000 பாக்களால் ஆனது இந்நிகண்டு. இந்நிகண்டு 1920 இல் மதுரைத் தமிழ்ச் சங்கத்தாரால் பதிப்பிக்கப் பெற்றது.

பொதிகை நிகண்டு

இந்நிகண்டின் ஆசிரியர் சாமிநாதக் கவிராயர். சாமிநாதம் என்னும் இலக்கண நூலை எழுதிய ஆசிரியரும் இவரேயாவார். இந்நிகண்டின் காலம் கி.பி.18 ஆம் நூற்றாண்டு ஆகும். இந்நூல் முதற்பகுதி, இரண்டாம்பகுதி என்று இரண்டு பகுதிகளைக் கொண்டது. முதற்பகுதி குறுகிய அடிகள் கொண்டு பத்து தொகுதி களை உடையது. முதற் பகுதியில் 15,850 சொற்கள் விளக்கப்பட் டுள்ளன. இரண்டாம் பகுதியில் 2,288 சொற்கள் உள்ளன. வழக்குச் சொற்கள் ஏராளம் இடம் பெற்றுள்ளன. முதல் இரண்டு எழுத்துக் கள் அகர வரிசைப்படுத்தப்பட்டுள்ளது இந்நிகண்டின் சிறப் பாகும். நிகண்டுப் பிரிவுகளில் மூன்றாம் பிரிவாகிய பல்பொருள் கூட்டத்து ஒரு பெயர்த்தொகுதியைத் தவிர ஏனைய இரண்டு பிரிவு களும் இந்நிகண்டில் இடம் பெற்றுள்ளன. இந்நிகண்டு1934 இல் பேரா. வையாபுரிப் பிள்ளையால் பதிப்பிக்கப்பெற்றது.

உசித சூடாமணி நிகண்டு

இதன் ஆசிரியர் சிதம்பரக் கவிராயர் ஆவார். இது 18 ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும். இந்நிகண்டின் முதற்பதிப்பு 1903 இல் கோயம்புத்தூரில் பதிப்பிக்கப் பெற்றது. இந்நிகண்டு 18 தொகுப்பு களைக் கொண்டது. தொகுப்புகளின் பெயர்களைக் கொண்டே அத்தொகுப்புகளில் இடம்பெற்றுள்ள பெயர்களை அறியலாம். (எ.டு) எழுவகைப் பெண் பருவத் தொகுப்பு. நூலின் மொத்தப் பாடல்கள் 197. இந்நிகண்டில் ஒருபொருள் பல்பெயர்த்தொகுப்பு மட்டுமே இடம்பெற்றுள்ளது.

நாமதீப நிகண்டு

இந்நிகண்டின் ஆசிரியர் சிவசுப்பிரமணியக் கவிராயர். காலம் கி.பி.18 ஆம் நூற்றாண்டு ஆகும். இந்நூல் வெண்பா யாப்பினால் ஆனது. இந்நிகண்டு ஒரு பொருள் பல்பெயர்த் தொகுதி என்னும் பிரிவைச் சார்ந்ததாகும். 808 வெண்பாக்களில் 12,000 சொற்கள் இடம் பெற்றுள்ளன. சங்க வழக்காற்றுச் சொற்கள் முதல் 18ஆம் நூற்றாண்டு வழக்காற்றுச் சொற்கள் வரை இந்நிகண்டில் இடம் பெற்றுள்ளன. இந்நிகண்டு நான்கு படலங்களாகப் பிரிக்கப் பட்டு ஒவ்வொரு படலமும் பல வர்க்கங்களாகப் பகுக்கப்பட்டுள் ளன. இந்த வகையில் 4 படலங்கள் 16 வர்க்கங்களாகப் பகுக்கப் பட்டுள்ளன.

1. உயர்திணைப் படலம்	2 வர்க்கம்
2. அஃறிணை உயர்ப்பொருள் படலம்	5 வர்க்கம்
3. அஃறிணை உரியியல் பொருள் படலம்	5 வர்க்கம்
4. குணநாமப்படலம்	4 வர்க்கம்
	16 வர்க்கம்

இந்நிகண்டு 1930 இல் பேரா. வையாபுரிப் பிள்ளை அவர் களால் பதிப்பிக்கப்பெற்றது.

வேதகிரியார் சூடாமணி நிகண்டு

இதன் ஆசிரியர் வேதகிரி முதலியார்.600 விருத்தப் பாக் களைக் கொண்டுள்ளது. சூடாமணி நிகண்டின் பதினோராவது தொகுதியான ஒருசொல் பல்பெயர் பெயர்த் தொகுதியின் விரி வாகும். சூடாமணியில் இல்லாத பல சொற்கள் தொகுக்கப் பெற்று எதுகை முறையில் வடிவமைக்கப் பெற்றுள்ளன. சூடாமணி நிகண்டில் 1,573 சொற்கள் பொருள் விளக்கம் செய்யப்பட்டுள்ளன. இந்நிகண்டில் 2,526 சொற்கள் விளக்கம் செய்யப்பட்டுள்ளன. இது கி.பி.1842 ஆம் ஆண்டு யாழ்ப்பாண சங்கத்தாரால் பதிப்பிக்கப் பெற்றது. இந்நிகண்டின் காலம் கி.பி.19ஆம் நூற்றாண்டாகும்.

கந்த சுவாமியம்

பழைய நிகண்டு சொற்களைத் தொகுத்து நூற்பா நடையில் கந்த சுவாமியம் என்னும் நிகண்டினை சுப்பிரமணிய தேசிகர்

என்பவர் உருவாக்கினார். இந்நிகண்டின் காலம் கி.பி.19ஆம் நூற்றாண்டாகும்.இது 1844 இல் அச்சானது. இரண்டு தொகுதிகள் இந்நிகண்டில் உள்ளன. முதல் தொகுதியில் 1,318 சொற்களும், இரண்டாம் தொகுதியில் 1,425 சொற்களுமாக மொத்தம் 2,743 சொற்கள் இடம் பெற்றுள்ளன. நிகண்டு நூல்கள் எவ்வாறு அமைக்கப்பட வேண்டும் என இருபத்து நான்கு விதிகள் இந்நூலில் கூறப்பட்டுள்ளன.

தொகைப் பெயர் விளக்கம்

இந்நிகண்டின் ஆசிரியர் வேதகிரி முதலியார் என்பவர். இது 19ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. நிகண்டுப் பிரிவில் மூன்றாம் பிரிவாகிய பல்பொருள் கூட்டத்து ஒரு பெயர்த்தொகுதியை விளக்குகின்றது. சொற்கள் அகர வரிசையில் அமைக்கப்பட்டுள்ளன. 1849 ஆம் ஆண்டு இந்நிகண்டு அச்சிடப்பட்டது.

இலக்கியத் திறவுகோல்

இந்நிகண்டின் ஆசிரியர் யார் என்று தெரியவில்லை. இது பல்பெயர் கூட்டத்து ஒரு பெயர்த்தொகுதி பிரிவைச் சார்ந்த நிகண்டாகும். தொகைப் பெயர்களை எண்ணிக்கை அடிப்படையில் பாகுபடுத்தாது அகரவரிசைப்படுத்தி பொருள் விளக்கம் செய்துள்ளது.

நாநார்த்த தீபிகை

நாநார்த்த தீபிகை என்பது சொற்களுக்குப் பல்பொருள் விளக்கம் தரும் நிகண்டு என்று பொருள்படும். இதன் ஆசிரியர் முத்துசாமிப்பிள்ளை. இது கி.பி.19 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இந்நூல் அரும்பொருள் விளக்க நிகண்டைப் போன்று ஒருசொல் பல்பொருட் பெயர் பிரிவைச் சார்ந்தது.1100 விருத்தப் பாக்களால் 5432 சொற்களுக்கு அடைமொழி இன்றிப் பொருள் விளக்கம் செய்யப்பட்டுள்ளது. இந்நிகண்டில் ககர எதுகை முதல் னகர எதுகை ஈறாக 18 வகை பாகுபாடுகள் உள்ளன. முன்னைய நிகண்டுகளில் உள்ள சொற்களோடு பல வடமொழித் திரிபுச் சொற்களும் இதில் இடம் பெற்றுள்ளன. இந்நிகண்டு கி.பி.1936 இல் அனவரத விநாயகம் பிள்ளை என்பவரால் பதிப்பிக்கப் பெற்றுச் சென்னைப் பல்கலைக்கழகம் வாயிலாக வெளியிடப்பட்டது.

சிந்தாமணி நிகண்டு

இதன் ஆசிரியர் வைத்தியலிங்கம் பிள்ளை என்பவராவார். இதுவும் 19 ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும். இந்நிகண்டிலும் ஒரு சொல் பல்பெயர்த்தொகுதி மட்டுமே காணப்படுகின்றது. 400 விருத்தப் பாக்களில் 3000 சொற்களுக்குப் பொருள் தரப்பட்டுள்ளது. மேலும், இதிலும் எதுகை முறை அமைப்பே காணப்படுகின்றது. இந்நிகண்டில் ஒரு சொல்லுக்கு ஒரு பொருளுடைய சொற்கள் மட்டுமே காணப்படுகின்றன. அந்தப் பொருளும் அச்சொல்லின் முக்கியமான பொருளாகவே உள்ளது. எனவே எளிதில் புரிந்துகொள்ள ஏதுவாக அமைந்துள்ளது.

அபிதானத் தனிச்செய்யுள் நிகண்டு

இது கி.பி.19 ஆம் நூற்றாண்டில் தோன்றிய நிகண்டு ஆகும். முதல் தொகுதியான தெய்வப் பெயர்த் தொகுதி மட்டுமே வெளியிடப்பட்டுள்ளது. இதன் ஆசிரியர் கோபாலசாமி நாயக்கர். மேலும், இந்நூல் பல்வகையான பாவகையால் பாடப்பட்டதாகும்.

விரிவு நிகண்டு

இந்நிகண்டின் ஆசிரியர் நா. அருணாச்சல நாவலர். இந்நிகண்டு 19 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. பல சொற்களுக்குப் பொருள் கூறும் விரிவான நிகண்டு என்பது விரிவு நிகண்டு என்ற இதன் பெயரால் அறியலாம். ஒருசொல் பல்பொருள் தொகுதியை மட்டும் விரிவாக விளக்குவதால் பதினோராவது விரிவு நிகண்டு என்றும் வழங்கப் பெறும். 1150 விருத்தப் பாக்களை உடையது. இதுவும் எதுகை முறையில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், இந்நிகண்டில் நெல்லை மாவட்டத்து வழக்குச் சொற்கள் மிகுதியாக உள்ளன.

மேற்கூறப்பட்ட நிகண்டுகளைத் தவிர வேறு பல நிகண்டுகளும் தோற்றம் பெற்றன. வேதகிரியார் எழுதிய இலக்கியக் களஞ்சியம் என்னும் நூலில் குறிப்பிட்ட பொதிய நிகண்டு, ஔவை நிகண்டு, பதினெண் சித்தர்கள் பாடிய மருத்துவ நிகண்டு பதினெட்டு, அகத்தியர் அருளிப் பெற்ற அகத்தியர் நிகண்டு, போகர் என்னும் சித்தரது போகர் நிகண்டு, வானநூல் நிகண்டு, கால

நிகண்டு, காரசு நிகண்டு, புலோலி சதாசிவம் பிள்ளை என்பவரது நேர்ச்சொல் நிகண்டு என பல நிகண்டுகள் வெளிவந்தன.

நிகண்டின் பொதுப்பிரிவுகள் 3

எண்	நிகண்டின் பெயர்	நிகண்டு சிறப்புப் பிரிவு	ஒரு பொருட் பல் பெயர்த் தொகுதி	ஒரு சொல் பல் பொருட் பெயர்த் தொகுதி	பல் பொருள் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதி
1.	சேந்தன் திவாகரம்	12 தொகுதிகள்	✓	✓	✓
2.	பிங்கல நிகண்டு	10 வகைகள்	✓	✓	×
3.	சூடாமணி நிகண்டு	12 தொகுதி	✓	✓	✓
4.	அகராதி நிகண்டு	10 தொகுதிகள்	×	✓	×
5.	உரிச்சொல் நிகண்டு	12 தொகுதிகள்	✓	✓	✓
6.	கயாதர நிகண்டு	11 இயல்கள்	✓	✓	×
7.	பல்பொருள் சூடாமணி நிகண்டு	3 காண்டம்	✓	✓	✓
8.	வடமலை நிகண்டு	10 தொகுதிகள்	✓	✓	✓
9.	கைலாச நிகண்டு சூடாமணி	56 பிரிவுகள்	✓	✓	×

10.	பாரதி தீபம்	12 தொகுதிகள்	✓	✓	✓
11,	ஆசிரிய நிகண்டு	11 தொகுதிகள்	✓	✓	×
12.	அரும் பொருள் விளக்க நிகண்டு	18தொகுதிகள்	×	✓	×
13.	தொகை நிகண்டு		×	×	✓
14.	பொருள் தொகை நிகண்டு		×	×	✓
15.	பொதிகை நிகண்டு		✓	✓	×
16.	உசித சூடாமணி நிகண்டு	18தொகுதி	✓	×	×
17.	நாமதீப நிகண்டு	4பிரிவு	✓	×	×
18.	வேதகிரியார் சூடாமணி		×	✓	×
19.	கந்தசுவாமியம்		✓	✓	×
20.	இலக்கியத் திறவுகோல்		×	×	✓
21.	நாநார்த்த தீபிகை		×	✓	×

22.	சிந்தாமணி நிகண்டு	×	✓	×
23.	விரிவு நிகண்டு	×	✓	×

அகராதி மரபு

நிகண்டுகள் செய்யுள் வடிவில் அமைந்திருந்ததால் ஒரு சொல்லுக்குரிய பொருளை எளிதில் கண்டுபிடிக்க இயலாத நிலை ஏற்பட்டது. சொல் எந்தத் தொகுதியைச் சார்ந்தது என்றும் பின் அந்தத் தொகுதி முழுவதும் படித்தாலன்றிப் பொருள் புரிவது கடினம் என்னும் நிலையும் ஏற்பட்டது. எனவே, ஐயங்களை உடனுக்குடன் தீர்க்க இயலாத நிலை ஏற்பட்டது. இச்சிக்கலிலிருந்து விடுபடுவதற்கும், மனனம் செய்து பொருள் புரிந்து கொள்ளவேண்டிய நிலை மாறுவதற்கும் அகராதிகள் உருவாக்கப்பட்டன. ஐரோப்பியர்களின் வருகையும் தமிழ் அகராதி மரபில் சிறப்பான ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியது. தமிழ் அகராதியின் தோற்றத்திற்கு வித்திட்டவர் வீரமாமுனிவர். எனவே, இவரை தமிழ் அகராதின் தந்தை என்பர். கி.பி.19 ஆம் நூற்றாண்டில் ஏராள மான ஒருமொழி மற்றும் இருமொழி அகராதிகள் தோற்றம் பெற்றன. 20 ஆம் நூற்றாண்டில் பல சிறப்பு அகராதிகள் வெளிவ்ந்தன.

மொழி அகராதிகளை அகராதியில் இடம்பெறும் மொழியின் அடிப்படையில் ஒருமொழி அகராதி, இருமொழி அகராதி, பன்மொழி அகராதி என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

மொழி அகராதி

ஒருமொழி அகராதி	இருமொழி அகராதி	பன்மொழி அகராதி

ஒருமொழி அகராதி

மூலமொழியும் இலக்கு மொழியும் ஒரே மொழியாக அமைந்திருந்தால் அது ஒருமொழி அகராதி எனப்படும். தலைச்சொல்

பகுதியும் பொருட் பகுதியும் ஒரே மொழியில் அமைந்திருந்தால் அது ஒரு மொழியகராதியாகும். ஒருமொழி அகராதி மரபில் பல அகராதிகள் வெளிவந்துள்ளன. அவற்றுள், முதன் முதலில் வெளி வந்த ஒருமொழி அகராதி சதுரகராதி ஆகும்.

சதுரகராதி

1732 இல் வீரமாமுனிவரால் சதுரகராதி வெளியிடப்பட்டது. இவ்வகராதி பெயர், பொருள், தொகை, தொடை என்னும் நான்கு (சதுர்) பிரிவுகளைக் கொண்டுள்ளது.

சதுரகராதி
1. பெயரகராதி → ஒருசொல் பலபொருள்
2. பொருளகராதி → ஒருபொருட் பலசொல்
3. தொகையகராதி → தொகைச் சொற்கள்
4. தொடையகராதி
குறில்கீழ் எதுகை நெடில்கீழ் எதுகை

நான்கு பகுதிகளிலும் தனித்தனி அகரநிரல் பின்பற்றப்பட் டுள்ளது. பெயரகராதியில் ஒருசொல் பலபொருட் சொற்கள் இடம் பெற்றுள்ளன. பொருளகராதியில் ஒரு பொருள் பல சொற்களும் தொகையகராதியில் தொகைச் சொற்களும் இடம் பெற்றுள்ளன. நான்காவது தொடையகராதியில் எதுகைச் சொற்கள் குற் றெழுத்தை முதலிலே உடைய எதுகைச் சொற்கள் குறில்கீழ் எதுகை என்னும் பகுதியிலும், நெட்டெழுத்துக்களை முதலாக உள்ள சொற்கள் நெடில்கீழ் எதுகை என்னும் பகுதியிலும் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. சொற்கள் சதுர அகராதியில் முதல் எழுத்து மட்டுமின்றி இறுதி எழுத்துவரை அகர வரிசைப்படுத்தப் பட்டுள்ளன. ஏறத்தாழ, 12000 சொற்களுக்குப் பொருள் கூறப்பட் டுள்ளன.

மானிப்பாய் அகராதி

சதுரகராதிக்கு அடுத்து வந்த அகராதி யாழ்ப்பாணத்தைச் சார்ந்த மானிப்பாய் அமெரிக்க மிசியோன் அச்சுக் கூடத்தில்

பதிப்பிக்கப் பெற்ற மானிப்பாய் அகராதியாகும். இதன் ஆசிரியர் சந்திரசேகர பண்டிதர். இது சதுரகராதியில் இடம் பெற்ற பெயரக ராதியின் விரிவாகும். இதில் 58,500 சொற்கள் இடம் பெற்றுள்ளன. சதுரகராதியின் நான்கு பிரிவுகளில் தொடையகராதி தவிர மற்ற மூன்று பிரிவுகளும் இதில் இடம் பெற்றுள்ளன.

தமிழ்ப் பேரகராதி

இதன் ஆசிரியர் வித்துவான் கதிரைவேற்பிள்ளை. இதன் காலம் கி.பி.1901. இலக்கியச் சொற்கள் பல இதில் இடம் பெற்றுள் ளன. இவ்வகராதியில் புதிதாக இடம் பெற்றச் சொற்களுக்கு உடுக் குறி இடப்பட்டுள்ளது. இவ்வகராதியில்தான் முதன் முதலாக இலக்கணச் சொற்களில் பெயர்ச்சொல் தவிர சொற்களுக்குக் குறியீடு இடப்பட்டது

Ψ	பெயரெச்சம் +
$	வினையெச்சம்
╪	வினைமுற்று ±
○	ஏவல் வினைமுற்று (+)
दा	வியங்கோள் வினைமுற்று
÷	குறிப்பு வினைமுற்று
⊗	உரிச்சொல்

தமிழ்ச் சொல்லகராதி

இதன் ஆசிரியர் சி.டபிள்யூ.கதிரைவேற்பிள்ளை. இது ஓர் சிறந்த அகராதி. மூன்று தொகுதிகளைக் கொண்டது. முதல் தொகுதி 1904 இலும் 2ம் தொகுதி 1912 இலும், 3ம் தொகுதி 1923 இலும் பதிப்பிக்கப்பெற்றன. இது 'சங்க அகராதி' என்றும் அழைக் கப்படும். இது ஒருபொருட் பலசொற்களைப் பொருள் சொல் லாய்த் தந்த அகராதி மரபிலிருந்து வேறுபட்டு விளக்கச் சொற் பொருள் அளிக்கப்பட்டது.

எ.டு. அச்சாணி - வண்டியிலே உருள்கோத்து மரத்திலே அது கழலாமற் இடையில் செருகும் அணி.

ஒரு சொல்லுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்கள் இருந்தால் 1, 2, 3 என எண்ணிக்கையிட்டுத் தரப்பட்டிருக்கும். மூலம் தரப்பட்டது. வடமொழிச் சொற்களின் மூலச்சொற்கள் தரப் பட்டன. சொல்லின் ஒருமை, பன்மை ஆகிய இரு வடிவங்களும் தரப்பட்டன. பிறமொழிச் சொற்கள் பயன்படும்போது அது என்ன மொழி என்பது பக்கத்திலேயே கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், இந்த அகராதியில் ஏராளமான வடமொழிச் சொற்கள் இடம் பெற்றுள்ளன.

இருபதாம் நூற்றாண்டு அகராதி

இவ்வகராதியின் ஆசிரியர் பி.இராமநாதன். இதன் காலம் கி.பி.1909 ஆகும். இதில் 10,000 சொற்கள் இடம் பெற்றுள்ளன. இவ்வகராதியின் சில இடங்களில் சொல்லால் பொருள் விளக்கு வதோடு அன்றிப் படங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. இது இவ்வகராதிக்கு அமைந்த தனிச்சிறப்பாகும்.

இதன் பின்னர் 1925 இல் ச. பவானந்தம் பிள்ளையின் தற் காலத் தமிழ்ச் சொல்லகராதி, 1935 இல் நெல்லை எஸ்.சங்கரலிங்க முதலியாரின் ஜுபிலி தமிழ் அகராதி போன்று பல ஒருமொழி அகராதிகள் வெளிவந்தன.

பெருஞ்சொல்லகராதி

1984 இல் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தால் பெருஞ் சொல்லகராதித் திட்டம் தொடங்கப்பெற்றது. சங்க காலந்தொட்டு இக்காலம் வரையிலான தரவுகளை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படும் இவ்வகராதியில் 3 தொகுதிகள் வெளிவந் துள்ளன. இருமொழி அகராதியின் பாதிப்பால் இவ்வகராதியின் பதிவமைப்பிலும் பல மாற்றங்கள் நிகழ்ந்தன. வினையடியைத் தலைச்சொல்லாய்த் தருதல், கால நிரலில் மேற்கோள் தருதல்,

ஒப்புச் சொற்களைத் தனித்தனிப் பதிவுகளாகத் தருதல், வினைத் திரிபை அறிதற்கு ஏற்ப வினைப்பதிவில் வினை வாய்ப்பாட்டு எண் தருதல், செயப்படு பொருள் குன்றியவினை, குன்றாவினை பற்றிய குறிப்பு தருதல் போன்ற பல சிறப்புகள் இவ்வகராதியில் இடம் பெற்றுள்ளன.

இவ்வாறு, ஒருமொழி அகராதிகளில் ஆரம்ப காலகட்டத்திலிருந்து தற்காலம் வரை நல்ல வளர்ச்சி நிலைகளைக் காண முடிகின்றது.

ஒருமொழி அகராதி அமைப்பு

எண்.	அகராதி	பெயர்	பொருள்	தொகை	தொடை
1.	சதுரகராதி	✓	✓	✓	✓
2.	மானிப்பாய்	✓	✓	✓	×
3.	என். கதிரைவேற் பிள்ளை	✓	✓	✓	✓
4.	சி. டபிள்யு. கதிரை வேற்பிள்ளை	-	-	-	-
5.	20ஆம் நூற்றாண்டு அகராதி (இராமநாதன்)	✓	✓	✓	✓
6.	மாணவர் தமிழ்	✓	✓	-	-
7.	தற்காலத் தமிழ் அகராதி (பவானந்தம் பிள்ளை)	-	-	-	-
8.	பெருஞ்சொல்லகராதி	-	-	-	-

இருமொழி அகராதி

பதிவுச் சொற்களுக்கு வேறு மொழியில் பொருள் விளக்கம் தரும் அகராதி இருமொழி அகராதி எனப்படும். இவ்வகராதியில் மூலமொழி ஒரு மொழியிலும் இலக்குமொழி பிறிதொரு மொழியிலும் அமைந்திருக்கும். பிறமொழிகளை அறிந்து கொள்வதே இவ்வகராதியின் அடிப்படைநோக்கமாகும். காட்டாக,

தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர் தமிழ் - ஆங்கிலம் இரு மொழி அகராதியினால் தன் எண்ணத்தை வெளியிடத் தேவையான ஆங்கிலச் சொற்றொகுதியைத் தெரிந்து கொள்ள முடியும். தமிழில் உள்ளதை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கவோ ஆங்கிலத்தில் நூலைப் படைக்கவோ முடியும்.

தமிழ் - போர்த்துக்கீசு அகராதி

இருமொழி அகராதியில் முதன் முதலில் வந்த அகராதி புரோயன்சாவின் தமிழ்-போர்ச்சுக்கீசிய அகராதியாகும். இதன் காலம் கி.பி.1679. இது அம்பலக்காடு என்னும் இடத்தில் அச்சிடப் பட்டது. பதிவுச்சொற்கள் 16,548. தமிழ்ச் சொற்களுக்குப் போர்ச்சுக் கீசு இலத்தீன் மொழியில் பொருள் தரப்பட்டுள்ளது. பெயர்ச்சொல் பெயரடியிலும் (அழகி, அல்லி), வினைச்சொல் நிகழ்கால வினை முற்றிலும் (மெல்லுகிறது, அடிக்கிறது) பதிவுகளாக இடம் பெற் றுள்ளன. பெயரெச்சம், வினையெச்சம், பெயரடை, வினையடை யும், பேச்சு வழக்குச் சொற்களும் ஏராளம் இடம் பெற்றுள்ளன. பொருள் கூறும்போது எடுத்துக்காட்டுகளாக ஆசிரியரின் எடுத்துக் காட்டுகளே தரப்பட்டுள்ளன. இவ்வகராதியின் மறுபதிப்பு தனி நாயக அடிகளால் கொண்டு வரப்பட்டது.

தமிழும் இங்கீலிசுமாய் இருக்கிற அகராதி

இதன் ஆசிரியர்கள் ஜான் பிலிப்ஸ் பெப்ரீசியஸ், ஜான் கிறிஸ்டியன் பிரெய்தாப்ட் என்னும் செர்மானியர்கள் இருவருள் முதல்வர் பெயரால் இவ்வகராதி அழைக்கப்படுகிறது. 1779 ஆம் ஆண்டு வெப்பேரியில் அச்சிடப்பட்டது. இது மலபார் ஆங்கில அகராதி எனவும் அழைக்கப்படும். தமிழே மலபார் என்னும் சொல் லால் குறிப்பிடப்பட்டுள்ளது. இலக்கியச் சொற்களுடன் வழக்குச் சொற்களும் மரபுத் தொடர்களுமாக 9000 சொற்கள் இதில் இடம் பெற்றுள்ளன. ஒப்புருச் சொற்களைத் தனிபதிவுகளாகத் தந்த முதல் அகராதி இதுவாகும். ஒப்புரு சொற்களில் 4சொற்களே இடம் பெற் றுள்ளன (மா, மது, மாலை, மனு). பதிவுச் சொற்களின் ஒருமை பன்மை, பால் வேறுபாடு போன்றவையும், தலைச் சொல்லின் எழுத்துப் பெயர்ப்பும் (transliteration) தரப்பட்டுள்ளன.

தமிழ் - ஆங்கில அகராதி

இதன் ஆசிரியர் ஜே.பி. இராட்லர். இதில் தமிழ் எழுத்திற்கு ஆங்கிலத்தில் பொருள் கூறப்பட்டுள்ளது. இது நான்கு தொகுதிகளை உடையது. முதல் தொகுதி *1834*-உம், இரண்டாம் தொகுதி *1836-37*உம், *3* ஆம் தொகுதி *1838* உம் தொகுதி *4* ஆம் தொகுதி *1841*-லும் வெளியானது. வினையை அடுத்து வினையின் சொல் விரிவுகள் பொருட்பகுதியில் தந்த முதல் அகராதியாகும். இலக் கணக் குறிப்பானும் இவ்வகராதியில்தான் முதலில் கொடுக்கப்பட் டது. பொருள் தரும்போது விளக்கமான பொருள் தரப்பட்டிருப் பது குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழ் - ஆங்கில அகராதி

வின்சுலோவின் அகராதி தமிழ் - ஆங்கிலம் (*1863*) ஆங்கிலம் - தமிழ்(*1842*) ஆகிய இரண்டு நிலையிலும் வெளிவந்துள்ளது. இவ்வகராதியில் பல்துறை கலைச்சொற்கள் இடம் பெற்றுள்ளன. வடமொழிச் சொற்கள் தனியே அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வகராதியில் மொத்தம் 67452 சொற்கள் இடம் பெற்றுள்ளன. வினைப்பதிவுகள் நிகழ்கால வினைமுற்றிலிருந்து மாறி வினையடிகள் பதிவுகளாகத் தரப்பட்ட முதல் அகராதி இதுவேயாகும். சொல் விரிவுகளும் தரப்பட்டுள்ளன.

சென்னைப் பல்கலைக்கழக அகராதி (தமிழ் லெக்சிகன்)

மேலே கூறப்பட்ட அகராதிகள் தனிமனித முயற்சியால் உருவானவை. இவ்வகராதி ஒரு குழுவினால் தமிழ்ச் சொல்லுக்கு ஆங்கிலத்தாலும் தமிழாலும் பொருள்கூறும் ஒரு தலைசிறந்த அகராதியாகும். ஒவ்வொரு தலைச்சொல் பக்கத்தில் எழுத்துப் பெயர்ப்பு தரப்பட்டுள்ளது. பின்னிணைப்புடன் சேர்ந்து 7 தொகுதிகள் 1939 இல் வெளிவந்துள்ளன. மொத்தம் 1,17,76 சொற்கள் இடம் பெற்றுள்ளன. ஒப்புருச் சொல் தனி பகுதிகளாகத் தரப்பட்டுள்ளன. மேலும், வினையடிகள் பதிவுகளாகத் தரும்போது -தல், -த்தல் விகுதியும் தரப்பட்டுள்ளது (எ.டு. அசை- தல், அசை-த்தல்). செயப்படு பொருள் குன்றிய மற்றும் குன்றாவினைகள் தரப்பட்டுள்ளன. வட்டார வழக்கு, கொச்சை வழக்கு, சைவ வழக்கு எனப் பலவகை குறிப்பான்கள் தரப்பட்டன. மேற்கோள்கள் தரப்பட்டது. மேற்கோள்கள் காலவரிசையில் கொடுக்கப்பட்டுள்ளன.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலி

இவ்வகராதி 1985 ஆம் ஆண்டு தேவநேயப் பாவாணர் என்பவரால் உருவாக்கப்பட்டது. இவ்வகராதி பிற அகராதிகளைப் போலன்றிச் சொல்லின் மூலம் கூறப்பட்டிருக்கும். மேலும், இவ்வகராதியில் இனச்சொற்கள் தவறாது காட்டப்பட்டிருக்கும். இவ்வகராதியில் இரண்டு தொகுதிகள் வெளிவந்துள்ளன.1993இல் இரா. மதிவாணன் என்பவரால் இரண்டாம் தொகுதி வெளியிடப் பட்டது. இவ்வகராதியில் தேவையான இடங்களில் படங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி

இவ்வகராதியின் முதன்மைப் பதிப்பாசிரியர் பா.ரா.சுப் பிரமணியன். இதன் காலம் கி.பி.1992. இது கணிப்பொறியின் உதவியோடு உருவான சிறந்த அகராதி. ஏராளமான சொற்கள் இடம் பெற்றுள்ளன. விளக்கமான சொற்பொருளோடு வந்த அகராதி. வழக்குச் சொற்கள் மற்றும் இலங்கை வழக்குச் சொற்கள் ஏராளம் இடம் பெற்றுள்ளன.

ஒருமொழி மற்றும் இருமொழி அகராதிகளில் ஏராளமான அகராதிகள் வெளிவந்திருந்தும் சில குறிப்பிட்ட அகராதிகள் மட்டுமே இவண் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

பன்மொழி அகராதி

மூலமொழி ஒன்றாகவும் இலக்குமொழி ஒன்றிற்கு மேற்பட்டதாயும் இருந்ததால் இலக்குமொழியின் எண்ணிக் கைக்கு ஏற்ப மும்மொழி அகராதி (Trilingual Dictionary), நான் மொழி அகராதி என வகைப்படுத்தப்படும். எனினும், பொதுவாய் இவ் வகராதிகள் அனைத்துமே பன்மொழி அகராதி என்றே குறிப் பிடப்பெறும். இவ்வகையில், 1851 ஆம் ஆண்டு 'ஏபாலிகாட் வெக் காவ்லரி இன் தீ இங்கிலிஷ் தெலுங்கு அண்டு தமிழ் லாங்குவேஜ்' என் னும் சொற்றொகுதி வெளிவந்தது. 1742லேயே வீரமானிவர் போர்ச் சுக்கீசு - இலத்தீன் - தமிழ் அகராதியைத் தொகுத்தளித்தார்.

சிறப்பகராதிகள்

பயன்பாட்டுத் தேவைக்கேற்ப மொழிவேறுபாடு,நூல் தரவு,சொல் வேறுபாடு, பொருளுறவு குறிப்பிட்ட பயன்பாடு, சொற்சேர்க்கை அளவு என்னும் பல்வேறு அடிப்படையில் சிறப் பகராதிகள் உருவாக்கப்படுகின்றன. வட்டார வழக்கு, கொச்சை வழக்கு, சொல்லடைவு,தொடரடைவு போன்ற அகராதிகள் இவ் வகையில் அடங்கும். ஒருமொழியின் குறிப்பிட்ட சொற்றொகுதி, காலம் இவற்றின் அடிப்படையில் சிறப்பு அகராதிகள் தொகுக்கப் படுகின்றன. வட்டார வழக்குச் சொற்களை மட்டுமே தரவுகளாகக் கொண்டு உருவாக்கப்படும் வட்டார வழக்கு அகராதிகள், ஒரு குறிப்பிட்ட துறைக்கென்றே வழங்கப்படும் கலைச்சொற்களைத் தொகுத்து உருவாக்கப்படும் கலைச் சொல்லகராதியும் குறிப்பிட்ட சொற்கள் குறித்த அகராதிகளும் சொற்களின் மூலம், இனமொழி ஆகியவற்றை எடுத்துக்கூறும் சொற்பிறப்பு அகராதிகளும் இவ் வகையில் அடங்கும்.

1.தொழில் கலைச் சொல்லகராதி, 2. நாடகக் களஞ்சியம், 3.செந்தமிழ் சொற்பிறப்பு அகரமுதலி.

தொகுப்புரை

தமிழ் அகராதிகளின் வளர்ச்சி நிலையில் மூன்று வகை யான மரபுகளைக் காணமுடிகின்றது.தமிழ் அகராதியியல் மரபு மிக நீண்ட வரலாற்றைக் கொண்டது.

இலக்கண மரபு தொல்காப்பிய உரியியலில் 120 கடினச் சொற்களுக்குப் பொருள் கூறும் நிலையில் ஆரம்பமானது. எனவே தொல்காப்பிய உரியியலே தமிழின் முதல் அகராதி ஆகுகின்றது.

ஒருபொருள், இருபொருள் மற்றும் பலபொருள் சொற் களும், பலபொருள்தன்மை ஒருபொருட் பன்மொழி என்பனவும் உரியியலில் இடம் பெற்றுள்ளன. மேலும் இடையியல், மரபியல் போன்ற இயல்களிலும் அகராதிக் கூறுகள் பரவலாகக் காணக் கிடக்கின்றன.

நிகண்டு மரபு தொல்காப்பிய உரியியலை அடிப்படையாகக் கொண்டு தோன்றியிருந்தாலும் அமைப்பிலும் சொற்பொருளை விளக்கும் முறையிலும் இலக்கணங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டு விளங்குகின்றது. தமிழ் அகராதியியல் மரபில் கி.பி. 18ஆம்நூற்றாண்டு முதல் 19ஆம் நூற்றாண்டு வரை ஏராளமான நிகண்டுகள் தோற்றம் பெற்றன. நிகண்டு மரபில் அகர வரிசை அறிமுகப்படுத்தப்பட்டாலும் முற்றிலும் பின்பற்றப் பெறவில்லை. நிகண்டுகளில் சொற்கள் பொருட்புலம் மற்றும் கருத்து வகைப்பாட்டின் அடிப்படையில் பல தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கும். நிகண்டுகளை ஓரளவு புலமை பெற்றவரே விரைவாகவும் எளிமையாகவும் புரிந்து கொள்ள இயலும். எனவே, அகராதி போன்ற எளிய நோக்கு நூல்களின் தேவை ஏற்பட்டது.

அகராதியியல் பண்புகளையும் அகராதியியல் கூறுகளையும் உள்ளடக்கியது அகராதி மரபாகும். ஐரோப்பியரின் வருகையும், அகராதியியல் வளர்ச்சிக்கு வித்திட்டது. சூத்திர நடையில் இருந்த நிகண்டு அமைப்பு மாறி எளிமையும், உரைநடையும் கொண்ட அகராதிகள் தோற்றம் பெற்றன. நிகண்டுகளை அடியொற்றிப் பொருட்புல பாகுபாடு அடிப்படையில் முதன் முதலில் வந்த அகராதிகள் அமைந்தன.

அகராதிகளில் ஒருமொழி, இருமொழி, பன்மொழி அகராதிகள் என மூன்று வகையான அகராதிகள் உள்ளன. ஒருமொழி அகராதிகளைவிட இருமொழி அகராதிகளில் பல்வேறு பொருள் உத்திகள் கையாளப்பெற்றன. ஒருமொழி மற்றும் இருமொழி அகராதிகளில் காலந்தோறும் வளர்ச்சி நிலைகளைக் காணமுடிந்தது. சிறப்பகராதிகளிலும் பல அகராதிகள் வெளிவந்துள்ளன.

தமிழ்ச் சொல்லடைவுகள்

மொழி காலந்தோறும் மாறிவரும் இயல்பினைக் கொண்டது. மொழியின் வளர்ச்சியில் சொற்களின் பெருக்கமும், பொருள்களின் விரிவும் முக்கியக் கூறுகளாகும்.சமுதாய வளர்ச்சியின் காரணமாய்ப் புதுப்புதுச் சொற்கள் படைக்கப்படுவதனாலும், பழைய சொற்கள் புதுப்பொருள் பெறுவதினாலும் ஒரு மொழியின் சொற்றொகுதியில் மாற்றம் ஏற்படுகின்றது. ஒருவர் கருத்துப் பரிமாற்றத்திற்குச் சொற்களையும் அவற்றின் பொருள்களையும் அறிந்திருத்தல் தேவையாகிறது. காலந்தோறும் மாறிவரும் சொற்றொகுதியையும் சொற்பொருளையும் ஒருவர் நினைவில் வைத்துக் கொள்வது அரியது. சொற்களையும் அவற்றின் பொருள்களையும் எளிதில் பார்த்துத் தெரிந்து கொள்ளவும் மனத்தில் பதித்துக் கொள்ளவும் துணைநிற்பன நோக்கு நூல்களாகும். நோக்கு நூல்கள் பல நிலைகளில் காணக்கிடக்கின்றன.

நோக்குநூல் வளர்ச்சி

சொற்களைத் தொகுக்கும் பணி பழங்காலம் முதல் அஃதாவது, தொல்காப்பிய காலத்திலிருந்தே நடைபெற்று வருகின்றது. தொல்காப்பியத்தை அடுத்து எழுந்த பிங்கலம், திவாகரம், நிகண்டு, சூடாமணி, கயாதரம், உரிச்சொல் போன்ற நிகண்டுகளில் சொற்களைப் பல்வேறு பொருட்புலங்களின்கீழ் விளக்கும். நிகண்டுகளில் பெரும்பாலும் ஒருபொருட் பன்மொழிகளும், பல பொருட் சொற்களும்,தொகைச் சொற்களும் விளக்கம் பெற்றுள்ளன. நிகண்டுகளின் வளர்ச்சியில் சிறப்பிடம் பெறுவது அகராதி நிகண்டாகும். இது கி.பி.1594-இல் இயற்றப்பட்டது. சொற்களின்

முதல் எழுத்துக்கள் மட்டுமே இந்நிகண்டில் அகரவரிசையில் அமைந்துள்ளன. தமிழிலுள்ள சொற்களை அகரவரிசையில் தொகுத்தளித்த முதல் நிகண்டு அகராதி நிகண்டாகும். ஐரோப் பியரின் வருகையால் சொல் தொகுப்பில் மேலும் பல படிநிலை களைக் காண முடிந்தது. சொற்பொருளை எளிமையாகப் புரிந்து கொள்ள முடிந்தது. மேலும், செய்யுள் நடை உரைநடை ஆகியன வும் அருஞ்சொற்கள் மட்டுமன்றி எளிய சொற்கள் முழுவதும் அகர வரிசைப் படுத்தப்பட்டமையும் அகராதி வளர்ச்சியின் முக்கியப் படிநிலைகள் ஆகும். ஒரு சொல்லின் பொருள் மட்டுமன்றிச் சொல்லின் பல்வேறு நிலையிலான விளக்கங்களும் அளிக்கப் படும். குறிகள் வேண்டும் சூழல் காலப்போக்கில் உருவானது. தமிழில் அகராதி நிகண்டு முதல் இக்காலத்தில் வெளிவந்துள்ள க்ரியா அகராதி வரையிலும் அகரவரிசையில் அமைந்த பல அகராதி கள் வெளிவந்துள்ளன. நோக்குநூல்கள் என அழைக்கப்படும் அகராதிகள், கலைக் களஞ்சியங்கள், சொல்லடைவுகள், சொல் தொகுதிகள் என்பன பொதுநிலையில் ஒன்றாகக் காணப்பட்டா லும் அவற்றிற்கிடையே பல வேறுபாடுகள் உண்டு. அகராதிக்கு அடுத்து இடம்பெறுவன சிறப்பு அகராதிகள் என்று அழைக்கப் படும் சொல்லடைவுகளாகும். இச்சொல்லடைவுகளுக்கும் அகராதிகளுக்கும் அமைப்பு நிலையிலும் சொற்களை வழங்கும் முறையிலும் பல வேறுபாடுகள் உண்டு.

அகராதி - சொல்லடைவு வேறுபாடு

அமைப்புநிலையில் சொல்லடைவுகள் அகராதியினைப் போன்று அமைந்திருந்தாலும் அவற்றிற்கிடையே பல வேறுபாடு கள் உண்டு.

- அகராதி என்பது ஒரு மொழியின் சொற்றொகுதியை உள் ளடக்கிய ஒரு தொகுப்பாகும். சொல்லடைவு வரையறுக் கப்பட்ட தரவினைக் கொண்டு அமைவது.

- அகராதியில் அடிப்படை வடிவம் தலைச்சொல்லாக அமை கின்றது. சொல்லடைவில் அடிப்படை வடிவம் தெரிவு செய்யப்படுவதில்லை. நூலில் உள்ள எல்லாச் சொற்களும், சொல் விரிவுகளும், சொற்றொடர் களும் தலைச்சொற்க ளாக அமைகின்றன.

- அகராதியில் (குறிப்பாகப் பொது அகராதிகளில்) தலைச் சொற்களின் வருகை இடங்கள் தரப்படுவதில்லை. சொல் லடைவில் சொற்களின் வருகையிடங்கள் எடுத்துக்காட்டாக பாடல் எண்.வரி ஆகிய செய்திகள் தரப்படுகின்றன.

- அகராதியில் தலைச் சொல்லுக்காகக் கொடுக்கப்படும் இலக் கணப் பொருள் ஒரு வரையறைக்குட்பட்டே அமையும். சொற்களின் எல்லாச் சொல்விரிவுகளும் தலைச்சொற்களாக இடம்பெறுவதால் இலக்கணப் பொருளின் எண்ணிக்கை சொல்லடைவில் அதிகம். (சொல்லடைவில் இலக்கணப் பகுதி என்ற ஒரு தனிப்பிரிவே இலக்கணத்திற்காக அமைந் திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்)

- அகராதியில் சொற்பொருள் விளக்கத்திற்காகக் கலைக்களஞ் சியக் குறிப்புகள் பயன்படுத்தப்பெறும். சொல்லடைவில் கலைக்களஞ்சியக் குறிப்புகள் இடம்பெறா.

- அகராதியில் மொழிநடை பற்றிய தகவல்கள் குறிப்பான் மூலம் தரப்படும். சொல்லடைவில் மொழிநடை பற்றிய குறிப்புகள் இடம்பெறுவதற்குரிய வாய்ப்பில்லை.

- அகராதியில் குறிப்பாகக் கற்போர் அகராதியின் வாயிலாக் ஒரு மொழியைக் கற்றுக்கொள்ள வாய்ப்பு உண்டு. சொல் லடைவின் வாயிலாகச் சொற்களின் இலக்கிய வழக்குகளை யும் பயன்பாட்டையும் மட்டும் தெரிந்துகொள்ள இயலும். சொல்லடைவின் வழி இலக்கியம், நூல் மற்றும் ஆசிரியரின் மொழித்திறனை அறிந்து கொள்ள இயலும்.அகராதியில் இதற்குரிய வாய்ப்பு இல்லை.

மேற்கூறிய பல நிலைகளில் அகராதிகளுக்கும் சொல் லடைவிற்கும் பல வேறுபாடுகள் இருந்தபோதிலும் சொற்களைத் தொகுத்து அகரவரிசையில் வழங்குவது எனும் தன்மையில்தான் அவற்றிற்கிடையே ஒற்றுமை காணப்படுகிறது. தமிழ்ச் சொல் லடைவுகளின் வளர்ச்சிநிலை, அமைப்பு, வகை ஆகியவற்றை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். சங்க இலக்கியச்

சொல்லடைவுகள் இவ்வாய்வுக்குரிய தரவுகளாகக் கொள்ளப்பெற்றுள்ளன.

சொல்லடைவு

சொல்லடைவு அல்லது சொற்றொகை என்பது பெயருக்கு ஏற்பச் சொற்களின் தொகுப்பு என்று மேலோட்டமாகக் கூறலாம். ஓர் இலக்கியத்தில் அல்லது ஒரு காலக்கட்டத்து இலக்கியத்தில் அல்லது ஓர் ஆசிரியரின் படைப்புக்களிலோ சொற்கள் எவ்வாறு எவ்வெப் பொருள்களிலும் விரிவுகளிலும் பயின்று வந்துள்ளன என்று தொகுத்தும், வகுத்தும், பகுத்தும் அகர வரிசையில் வெளி வரும் நோக்குநூலே சொல்லடைவாகும். சொல்லடைவின் மூலம் ஆசிரியரின் மொழி நடையையும் நூலின் மொழிச் சிறப்பையும் சொற்களின் பயன்பாட்டுச் சூழலையும் சொற்களின் மொழியியல் அஃதாவது ஒலியனியல், உருபனியல், தொடரியல் குறித்த செய்தி களையும் விரிவாகவும் தெளிவாகவும் அறிந்துகொள்ள முடியும்.



அமைப்பு

சொல்லடைவின் அமைப்பை ஆழ்ந்து நோக்கின் அது மூன்று பிரிவுகளாக உள்ளதைக் காண இயலும். அவை:

1. இலக்கணப் பகுதி (மொழி விளக்கப்பகுதி)
2. சொற்றொகுதிப் பகுதி (சொற்புலப் பகுதி)
3. சொல்லடைவுப் பகுதி (அகராதிப் பகுதி)

என்பவையாகும். பெரும்பான்மையான சொல்லடைவுகளில் முதலில் இலக்கணப் பகுதியும் அதனை அடுத்துச் சொற்றொகுதி அல்லது சொற்புலப்பகுதியும் இறுதியாகச் சொல்லடைவுப் பகுதி யும் இடம் பெற்றிருக்கும். சொற்புலப் பகுதி ஒருசில சொல் லடைவுகளில் மட்டுமே இடம்பெற்றுள்ளது. எனினும், ஒலியன், உருபன் மற்றும் பிற இலக்கணக் குறிப்புக்களை விளக்கும் நிலை யில் சொற்களை ஆங்காங்கே வரிசைப்படுத்திக் கூறுவதன் மூலம் இப்பகுதி சில சொல்லடைவுகளில் மறைமுகமாக இடம்பெற்றுள் ளது.

1. இலக்கணப்பகுதி

இலக்கணப்பகுதியில் (சொல்லடைவுத் தரவுநூல்) சொற் களின் ஒலியனியல், உருபனியல், தொடரியல் பற்றிய செய்திகள் விரிவாகத் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

ஒலியனியல் பகுதியில் உயிர், மெய், உயிர்மெய் ஆகிய எழுத்துக்களின் முன், இடை, கடை, வருகையிடங்கள், சுட் டெழுத்துக்களின் வகைகள், உருட்டொலி, வருடொலி, மூக் கொலிகளின் வருகை இடங்கள், இரு குறில், இரு நெடில் அல்லது குறில் நெடில் எழுத்துக்களின் இணைவுகள் ஆகிய பல செய்திகள் எடுத்துக்காட்டுகளுடன் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. சொற்களின் புணர்ச்சி அல்லது சந்தி விதிகள் சில சொல்லடைவுகளில் தரப்பட் டுள்ளன. உயிருடன் உயிர், உயிருடன் மெய் எவ்வெச் சொற்களில் புணருகின்றன? புணரும்போது சொற்களில் ஏற்படும் மாற்றங்கள் என்பன விளக்கப்படுகின்றன. காட்டாக, ஐங்குறுநூற்றுச் சொல் லடைவில் மேற்கூறிய விதிகள் சிறப்பாக விளக்கப்பட்டுள்ளன.

உருபனியல் பகுதியில் பெயர், வினை அடிகளும், தன் வினை பிறவினை வேறுபாடும், வினையின் மாற்று வடிவங்களும் விளக்கப் பெற்றிருக்கும். கால இடைநிலைகள் எதிர்மறைகள், இடம் - பால், எண் விகுதிகள், தொழிற்பெயர்கள், ஆக்கப் பெயர் கள், சாரியை, பெயரெச்ச வினையெச்சங்கள், பெயரடை வினை யடைகள், ஒருமை பன்மை விகுதிகள், இடைச்சொல், வேற்றுமை விகுதிகள் போன்ற பல்வேறு இலக்கணக் கூறுகள் எடுத்துக்காட் டுகளுடன் விரிவாகத் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

தொடரியல் பகுதியில் தனிவாக்கியம்,கலவை வாக்கியம் என்பனவும், தொடர் வாக்கியங்களில் எழுவாய் பயனிலைகளின் இயைபு எவ்வாறு அமைந்துள்ளது என்பதும் பெயரெச்ச வினை யெச்சத் தொடர் பற்றியும், உரிச்சொல், பயனிலை போன்றவை களும் ஒரு தொடர் எச்சமாக உள்ளதா, முற்றாக உள்ளதா என்பதும், தொடர்களின் அமைப்பு முறைகளில் விரிவான விளக்கங்களுடன் அமைந்துள்ளன.

இலக்கணப் பகுதி	ஒலியனியல் - எழுத்து அமைப்பு உருபனியல் - தொடர் அமைப்பு தொடரியல் - தொடர் அமைப்பு	மொழி

2. சொற்றொகுதிப் பகுதி (சொற்புலப் பகுதி)

சொல்லடைவில் இரண்டாவது இலக்கணப் பகுதியை அடுத்துக் காணப்படும் பகுதி சொற்களின் தொகுப்பைக் காண முடியும். மரப்பெயர், விலங்குப்பெயர், தாவரப்பெயர், நிறப் பெயர் எனப் பல பிரிவுகளில் சொற்கள் தொகுத்து அகரவரிசைப் படுத்தித் தரப்பட்டிருக்கும். வருகையிடம், இலக்கணக் குறிப்பு எதுவும் இச்சொற்களுக்குத் தரப்படுவதில்லை. இப்பகுதியின்கீழ் குறிப்பிட்ட ஒரு நூலில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்களின் அளவைக் கண்டுகொள்ள முடியும்.

3. சொல்லடைவுப் பகுதி

மூன்று பகுதிகளில் முக்கியமானதும் தலையானதும் ஆன பகுதி இச்சொல்லடைவுப் பகுதியாகும். இப்பகுதியில் சொல், அச்சொல்லின் பொருள், சொற்களின் வருகையிடங்கள் தரப்படும். சொல்லின் இலக்கணக்குறிப்பு சொற்பொருளை அடுத்து இடம் பெற்றிருக்கும். சொல்லடைவுப்பகுதி, முழுவதும் ஆங்கிலத்தில் மட்டும் அமைந்த சொல்லடைவுகளும், ஆங்கிலம், தமிழ் ஆகிய இரண்டு மொழிகளிலும் அமைந்த சொல்லடைவுகளும் உண்டு. காட்டாக,

ஆங்கிலம்: (ஒருமொழி)
alittal - the act of giving 10.61
aakutal - the act of becoming - 36

ஆங்கிலம்-தமிழ்(இருமொழி)
yaamai - tortoise C.B.
யாமை - ஆமை வே.அ. 1.43, 1.44, 1.33.1. (ஐங்.)

ஆங்கிலம், தமிழ் ஆகிய இருமொழிகளிலும் அமைந்த சொல்லமைப்புகள் மேற்காட்டிய எடுத்துக்காட்டுக்களில் காண்பதுபோல் ஆங்கிலத்தில் முதலிலும் பின் தமிழிலும் சொற்கள் தரப் பட்டிருக்கும். சொல்லுக்கு ஒரு பொருள் இருப்பின் மேற்றியது போல் சொல்லை அடுத்தும் ,ஒன்றிற்கு மேற்பட்ட பொருள்கள் இருப்பின் அகராதியில் காணப்படுவது போன்று வரிசையாக எண்ணிட்டும் பொருள்கள் தரப்பட்டிருக்கும். காட்டாக,

1. படின் - if tourched up
பட்டான் வி.எ.57.1
2. paTin - if revealed - V.P.
வெளிப்படின் வி.எ.245.6
3. if done - V.P.
படின் வி.எ.395.8 (குறு)

ஒரே சொல்லுக்கு வேறுவேறு இலக்கணக் குறிப்புகள் இருப்பினும் மேற்கூறிய விளக்க அமைப்பிலே சொல்லடைவுப் பகுதி அமைக்கப் பெற்றிருக்கும்.

சொல்லடைவு - வகை

சொல்லடைவுகளில் இடம்பெறும் மொழித்தரவின் தன்மை, சொற்களை விளக்கும் முறை என்பனவற்றின் அடிப் படையில் சொல்லடைவுகளை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. தரவு
2. மொழி
3. தகவல்

தரவு

தரவுகளின் அடிப்படையில் சொல்லடைவுகளை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. தனி இலக்கியம் தனி நூலுக்கான சொல்லடைவு
2. ஓர் ஆசிரியரின் ஒரு நூலுக்கான சொல்லடைவு
3. ஓர் ஆசிரியரின் பல நூற்களுக்கான சொல்லடைவு
4. பல நூற்கள் அல்லது தொகுப்பு நூற்களுக்கான சொல்லடைவு

தரவுகளை அடிப்படையாகக் கொண்டு ஒரு தனி இலக்கியத்திற்கு அல்லது ஓர் ஆசிரியரின் ஒருநூல் அல்லது பல நூல் களுக்கு அல்லது பல நூல்கள் அல்லது தொகுப்பு நூல்களுக்குச் சொல்லடைவுகள் அமையலாம்.

மொழி முன்னர்க் கூறியபடி மொழியியல் அடிப்படையில் தமிழ் மொழியில் மட்டும் அமைந்த சொல்லடைவுகளும் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளிலும் அமைந்த சொல் லடைவுகளும் வழக்கிலுள்ளன. தமிழில் தனிச் சொல்லடைவுகள் இருமொழியிலும், முழுச் சொல்லடைவு ஒரு மொழியில் அதாவது, தமிழில் மட்டும் அமைந்துள்ளன.

தகவல்

சொல்லடைவுகளில் இடம்பெறும் தகவல்களின் அடிப் படையில் சொல்லடைவுகளை இரண்டு வகைகளில் பிரிக்கலாம்.

1. முழுத்தகவல் சொல்லடைவு
2. பகுதித்தகவல் சொல்லடைவு

சொல்லடைவுகளில் சொல், பொருள், இலக்கணக் குறிப்பு, வருகை இடங்கள் ஆகிய அனைத்துத் தகவல்களும் இடம் பெற்று முழுமையாக அமைந்த சொல்லடைவுகள் முழுத் தகவல் சொல்லடைவுகளாகும். இவற்றில் ஏதேனும் ஒன்று விடுபட்டு, காட்டாக, இலக்கணக் குறிப்பு இன்றி வருகை இடம் மட்டும்

அல்லது வருகை இடம் இன்றி இலக்கணக்குறிப்பு மட்டும் உள்ள சொல்லடைவு பகுதித் தகவல் சொல்லடைவாகும்.

பொதுநிலை (வரலாறு)

பழங்காலத்தில் ஒவ்வொரு நூலின் இறுதியிலும் அந் நூலில் காணப்படும் அருஞ்சொற்கள் அனைத்தும் தொகுத்துக் கொடுக்கப்படும் பழக்கம் இருந்து வந்தது. இம்முறையே பின்னர்ச் சொல்லடைவு தோன்ற வழிகோலியது எனலாம். சொல்லடைவுத் தொகுப்பில் முதல் இடம்பெறுபவர் உ.வே. சாமிநாதையர் என்றால் மிகையாகாது. சாமிநாதையரின் தொகுப்பு நூற்களின் இறுதியில் அந்நூலில் இடம்பெற்றுள்ள சொற்களின் தொகுப்பு ஒன்று இடம்பெற்றிருக்கும். இத்தொகுப்பில் சொல்லின் பொருளும் அச்சொல் இடம் பெற்றிருக்கும் பாடலின் எண்களும் கொடுக்கப் பட்டிருக்கும். சாமிநாதையரைத் தொடர்ந்து பல இலக்கிய உரையாசிரியர்கள் சொல்தொகுப்பு முறையைப் பின்பற்றினர். சாமி வேலாயுதம் பிள்ளை தொகுத்த திருக்குறள் சொல்லடைவில் திருக்குறளிலுள்ள 1330 பாடல்களும் இடம்பெற்றுள்ளன. தனியார் செய்துவந்த பணிக்குப் பல கல்வி நிறுவனங்கள் ஊக்கம் கொடுத்தன.

சொல்லடைவுப் பணியில் சிறந்து விளங்குவது கேரளப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையாகும். இத்துறையில் சங்க கால இலக்கியத்திற்கும், இடைக்கால, இக்கால இலக்கியங்களுக்கும் சொல்லடைவுப் பணி மேற்கொள்ளப் பெற்றது. இலக்கியங்களில் சிலப்பதிகாரம், கம்பராமாயணம், பெரியபுராணம், வில்லிபாரதம், முத்தொள்ளாயிரம், குற்றாலக் குறவஞ்சி, முக்கூடற்பள்ளு போன்றவற்றிற்கும், இலக்கணங்களில் தொல்காப்பியம், வீரசோழியம், நன்னூல், இறையனார் களவியல் போன்ற நூல்களுக்கும், சிவஞானபோதம், மீனாட்சி பிள்ளைத்தமிழ், மூவர் தேவாரம், பரமார்த்த குருகதை, நீதிநெறி விளக்கம், நாச்சியார் திருமொழி, பெரியமடல், சிறியமடல் போன்ற நூல்களுக்கும் சொல்லடைவுப் பணி மேற்கொள்ளப் பெற்றுள்ளது.

மேற்கூறிய சொல்லடைவுகளில் சங்க இலக்கியச் சொல்லடைவுகளின் அமைப்பு, வகை, வளர்ச்சி ஆகியனவற்றை ஆய்வது முக்கிய நோக்கமாகும்.

சங்க இலக்கியச் சொல்லடைவு

சங்க இலக்கியங்களுக்கு என்று வெளிவந்த சொல்லடைவு களை இரண்டு வகைகளில் பிரிக்கலாம்.

1. முழுச் சொல்லடைவு
2. தனிச் சொல்லடைவு

1. முழுச் சொல்லடைவு

சங்க இலக்கியம் ஆகிய எட்டுத்தொகை, பத்துப்பாட்டு முழுமையையும் ஒரே சொல்லடைவாகத் தொகுப்பது முழுச் சொல்லடைவு ஆகும்.

சங்க இலக்கியச் சொற்கள் முழுவதற்குமான சொல் லடைவு விளக்கம் இன்றி மர்ரே எஸ்.ராஜம் என்பவரால் பாட்டும் தொகையும் என்னும் தலைப்பில் வெளியிடப்பட்டது. இச்சொல் லடைவில் சங்க நூல்களில் வழக்கிலுள்ள சொற்கள், சொற்றொடர் கள் போன்றன தொகுத்துப் பாடல் எண்ணுடன் வழங்கப்பட் டுள்ளன. இவ்வகையில் சொல்லுக்குப் பொருள் எளிய சொற் களாக இல்லாமல் உரையாசிரியர்கள் பயன்படுத்திய பொரு ளாகவே அமைந்திருப்பதால் பொருளைப் புரிந்து கொள்வது அரியதாக உள்ளது. மேலும், சொல் மட்டுமன்றித் தொடர்களும் தலைச்சொற்களாக இடம்பெற்றுள்ளன.

இருங்கழி	-	கரியகழி
உயவை	-	காக்கணம்
புல்லிகை	-	கன்னசாமரை (பாட்டும் தொகையும்)

சொற்களின் வருகை இடங்கள், இலக்கணக்குறிப்பு போன்றனவும் இச்சொல்லடைவில் குறிப்பிடப்படவில்லை.

புதுவைச் சொல்லடைவிற்கு அடுத்தபடியாகச் ஜெர்மனி யைச் சார்ந்த தாமஸ் லெமன், தாமஸ் மால்டன் ஆகிய இருவரும் 1992-இல் ஒரு சொல்லடைவினை வெளியிட்டனர்.

பாட்டும் தொகையும் என்பதன் இறுதியில் பல தொகுப்புக்களும் இடம்பெற்றுள்ளன. காட்டாக, சங்கப் பாடல்களைப் பாடிய புலவர் பெருமக்கள் அகராதியும், பாடப் பெற்றவர், குறித்த மன்னர்கள் அகராதியும், வரலாற்றுக் குறிப்புக்களும் சங்க காலப் பழக்க வழக்கங்களும், சங்க இலக்கிய நூல் தொடர்பான கட்டுரைத் தொகுப்புக்கள் போன்றனவும் இடம்பெற்றுள்ளன. சங்க இலக்கிய மொழியோடு தொடர்புடைய செய்திகளாக இவை அமையவில்லை.

பாட்டும் தொகையும் ஒரு முழுச் சொல்லடைவாக அமையவில்லை. எனினும், சங்க இலக்கியத்தில் சொற்கள் இடம்பெற்றுள்ள தன்மையை இதன்வழி அறிந்துகொள்ள முடிகின்றது. மேலும், இச்சொல்லடைவு சங்க நூல்களுக்கெனத் தனிச் சொல்லடைவுகள் வெளிவர அடிகோலியது எனலாம். இச்சொல்லடைவில் சங்கச் சொற்கள் கோவையாய் அமைந்துள்ளன. விரிவான விளக்கங்களுடன் கூடிய சங்கநூல் அகராதிக்கு இஃது ஒரு முன்னோடியாக அமைதல் காணலாம் என்று இந்நூல் முன்னுரையில் விளக்கம் தரப்பட்டுள்ளது.

1965 இல் தண்டபாணிதேசிகர் சங்க இலக்கியச் சொல்லடைவு ஒன்றினை வெளியிட்டார். இஃது ஓர் அரிய முயற்சி எனினும் இப்பணி நிறைவடையவில்லை. உயிர் எழுத்துக்களுக்கு மட்டுமே சொல்லடைவு அமைக்கப் பெற்றுள்ளது. சொல்லடைவில் சொல், பொருள், வருகை இடங்கள், இலக்கணக்குறிப்பு ஆகியன விளக்கங்களுடன் தெளிவாக இடம்பெற்றுள்ளன. காட்டாக,

ஒழுகின் செயின் (வி.எ.) குறுந். 222
ஒதுங்கிய-நடந்த(பெ.எ.) அகம். 241

ஒரு சொல்லுக்குப் பல பொருள்கள் இருப்பின் அப்பொருள்கள் வருகையிடங்களுடன் அகரவரிசைப்படுத்தப்பட்டிருப்பது இவ்வடைவின் சிறப்பாகும்.

1. உம்பர் - அப்பால் குறுந். 11.188, பரி. 11.70
அகம். 91.113. 209.213
நெடுந்தூரம் - நற்.198

	மேல்	- நற்.62.119
	வடிதிசை	- கலி.108
2.	அமர்ந்து	- செய்து(வி.எ.)மது,366 கலி.71.119 குறுந்.363
	மயங்கி	- பரி.3.54
	மறந்து	- குறி.174
	விரும்பி	- அகம்.147,பரி.109.7

தமிழில் தோன்றிய ஒருமொழி அகராதிகள் பல இவ்வுத்தியைக் கையாண்டுள்ளன என்பது இவண் குறிப்பிடத்தக்கது. எல்லாச் சொற்களுக்கும் இலக்கணக் குறிப்புத் தரப்படாதது ஒரு குறையாக இருப்பினும் இச்சொல்லடைவு வளர்ச்சியின் ஒருபடியாகத் திகழ்கின்றது என்பதில் ஐயமில்லை.

என். சுப்பிரமணியன் தொகுத்த முன் பல்லவர் தமிழ்ச் சொல்லடைவு 1966-இல் வெளியானது. இச்சொல்லடைவில் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு, சிலப்பதிகாரம், மணிமேகலை, திருக்குறள், தகடூர் யாத்திரை, நாலடியார் போன்ற 44 நூல்களிலிருந்து சொற்கள் திரட்டப் பெற்று வரலாற்றுக் குறிப்புக்களோடு கொடுக்கப்பட்டுள்ளன. சொல், பொருள் விளக்கமுறையில் அமைந்த சொல்லடைவு போன்ற வரலாற்றுக் குறிப்போடு அமைந்த தொகுப்பாக இஃது அமைகின்றது.

புதுவை இந்தியாவியல் பிரெஞ்சு ஆய்வு நிறுவனம் தொகுத்தளித்த 'இந்தியா மோட்ஸ்லா லிட்ரேச்சர் முழு ஆன்சியன்னா' எனும் பழந்தமிழ் இலக்கியங்களின் சொல்லடைவு மூன்று ஆண்டுகளில் மூன்று தொகுதிகளாக வெளிவந்தது. 'அ' முதல் 'ஔ' வரையிலான சொற்கள் முதல் தொகுதியிலும் (1961), க முதல் தௌ வரையிலான சொற்கள் இரண்டாம் தொகுதியிலும் 'ந' முதல் 'ன' வரையிலான சொற்கள் மூன்றாம் தொகுதியிலும் (1970) இடம் பெற்றுள்ளன. இச்சொல்லடைவில் தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ள சொற்களும், சங்க இலக்கியச் சொற்களும் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. சொற்களுக்குப் பொருளோ, இலக்கணக் குறிப்போ தரப்படவில்லை. சொற்களின் வருகை இடம் மட்டுமே தரப்பட்டுள்ளது. பெயர்ச் சொற்களும் வினைச் சொற்

களும் ஒன்றாகத் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. அடி, அணி என்ட இதற்கு எடுத்துக்காட்டுக்கள் ஆகும். இதனால் ஒருசொல் பெயர் சொல்லா, வினைச்சொல்லா என்றுகூட அறிய இயலாத நிலை உள்ளது. முன்னுரை பிரெஞ்சு மொழியில் அமைந்துள்ளதால் சங்க இலக்கிய நூற்களின் எந்தப் பதிப்புப் பின்பற்றப்பட்டுள்ளது என்பதும், சொற்கள் தொகுக்கப்பட்ட நெறிமுறை, வரையறை போன்றவற்றையும் தெளிவாக விளங்கிக் கொள்ள இயல வில்லை. சொற்கள் மட்டுமன்றிச் சொற்றொடர்களும் தலைச் சொல்லாக இடம்பெற்றுள்ளன.

கோடு உயர் பிறங்கு மலை	- புறம்.382.8
சேண் விளங்கு தொடு பொறி	- புறம்.58

சொற்களைத் தொகுத்துத் தரும் பணியை மட்டும் இச் சொல்லடைவு செய்துள்ளதே தவிர மற்ற எந்த மொழிக் கூறுகளும் இதில் இடம்பெறவில்லை.

புதுவைச் சொல்லடைவிற்கு அடுத்தபடியாகச் செர்மனி யைச் சார்ந்த தாமஸ் லெமென், தாமஸ் மால்டன் ஆகிய இருவரும் 1992இல் ஒரு சொல்லடைவினை வெளியிட்டனர். 1981-இல் வெளி யான மர்ரே எஸ்.ராஜம் அவர்களின் சங்க இலக்கியப் பாட்டும் தொகையும் நூலின் இரண்டாம் பதிப்பை மூலமாகக் கொண்டு இச் சொல்லடைவு அமைந்துள்ளது. 1993இல் ஆசிய நிறுவனம் இச் சொல்லடைவின் இந்தியப்பதிப்பு ஒன்றினை வெளியிட்டுள்ளது. இச்சொல்லடைவில் சொற்கள் எந்த நெறிமுறையில் கொடுக்கப் பட்டுள்ளன என்று முன்னுரையில் விரிவாக விளக்கப்பட்டு இருப்பதால் சொற்பொருளைத் தெளிவாகப் புரிந்துகொள்ளும் நிலை உள்ளது. இச்சொல்லடைவில் சொல் பயின்று வரும் வருகை இடங்கள் மட்டுமே தரப்பட்டுள்ளன.

கிழவர்	கலி. 21.10, பரி. 11.120, புறம். 65.1
கிழாஅர்	மதுரைக். 93
நெடியன்	திரு. 211

இந்தச் சொல்லடைவினைத் தொடர்ந்து தமிழ்ப் பல் கலைக்கழக அகராதியியல் துறையும், கணிப்பொறி மையமும்

இணைந்து தொகுத்து வரும் சங்க இலக்கியச் சொல்லடைவு முடி வடையும் நிலையில் உள்ளது. சங்க இலக்கியச் சொற்கள் அனைத் தும் இடம்பெற்ற விரிவான சிறப்பான சொல்லடைவாக இது திகழ் கின்றது. சொற்களின் வருகையிடங்கள் மட்டுமன்றிச் சொற்கள் வருகின்ற முழுச்சூழலும் கொடுக்கப்பட்டிருப்பது இதன் மற்றொரு சிறப்பாகும்.

அரிஞர் (2) அகம்.84.12, புறம். 348
அரிஞர் யாத்த அலங்குதலைப் பெரும் சூடு அகம். 84.12
வெண்ணெல் அரிஞர் தண்ணும் வெரீஇ புறம். 348.1

சங்க இலக்கியம் முழுவதற்குமென வெளிவந்த சொல் லடைவுகள் எல்லாம் தமிழில் மட்டுமே அமைந்துள்ளன. சொல் லடைவுகள் ஒவ்வொன்றிலும் படிப்படியான வளர்ச்சி நிலையைக் காணமுடிகின்றது. தொடக்க காலச் சொல்லடைவுகளில் சொற் களின் தொகுப்பை மட்டுமே காணமுடிந்தது. பின்னர் வந்த சொல் லடைவுகளில் வருகை இடங்கள், இலக்கணக்குறிப்பு ஆகியவை இடம்பெற்றுள்ளன. இறுதியாக அமைந்த தமிழ்ப் பல்கலைக் கழகச் சொல்லடைவில் சொற்கள் வருகின்ற சூழலும் கூடுதலாகக் கொடுக்கப்பட்டிருப்பது வளர்ச்சியின் படிநிலையாகும்.

2. தனிச்சொல்லடைவு

சங்க இலக்கியம் முழுமைக்கும் சொல்லடைவுகள் தொகுக்கப்பட்டு வரும் நிலை ஒரு புறம் இருக்க, சங்க நூல்கள் ஒவ் வொன்றிற்கும் தனித்தனியாகச் சொல்லடைவுகள் தொகுக்கப் பட்டன. புறநானூறு, அகநானூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு போன்ற நூல்களுக்குத் தனித்தனியாகச் சொல்லடைவுகள் வெளிவந்துள் ளன. முன்னர்க்கூறியதுபோல இச்சொல்லடைவுகள் முனைவர் பட்ட ஆய்வுகளுக்காக எடுத்துக் கொள்ளப்பட்டவை.எனவே, இலக்கணத்திற்கும், மொழியியலுக்கும் முதலிடம் கொடுக்கப் பட்டுள்ளது. ஒவ்வொரு சொல்லடைவின் அமைப்பிலும் பல மாறுதல்கள் காணப்படுகின்றன.

1962-இல் வ.அய். சுப்பிரமணியம் அவர்களால் புறநானூறு சொல்லடைவு வெளியிடப்பட்டது. இச்சொல்லடைவில் சொல்

லடைவுப் பகுதி மட்டும் இடம் பெற்றுள்ளது. சொல்லடைவுப் பகுதி சொற்கள் வருகையிடங்களுடன் அமைந்துள்ளது. தமிழில் சொல் எது என்று வரையறுக்க முற்பட்டிருப்பதாகவும், இதுவரை வெளியான அகராதிகளோ, சொல்லடைவுகளோ இம்மாதிரி முயற்சியில் ஈடுபடவில்லை என்றும் ஆசியவியல் நிறுவனத்தால் வெளியிடப்பட்ட சங்க இலக்கியச் சொல்லடைவு முன்னுரைப் பகுதியில் பேராசிரியர் முத்து சண்முகம்பிள்ளை அவர்கள் கூறு கின்றார். மேற்கூறிய அமைப்பில் மாறுபாடின்றி அகநானூறு, பரிபாடல், பத்துப்பாட்டு,நற்றிணை போன்ற சொல்லடைவுகள் வெளிவந்தன. சொல்லடைவுகள் ஆங்கில மொழியில் தமிழ் ஒலி பெயர்ப்பில் அமைந்துள்ளன. மேற்படி சொல்லடைவுகளில் இலக் கணப்பகுதி சிறப்பான முறையில் அமைந்துள்ளது. சொல் லடைவுப் பகுதியில் சொல், அதன் பொருள், அச்சொல் வருமிடங் கள் போன்றன தொகுத்துத் தரப்பட்டிருக்கும்.

inam	-	group 9.1
natpu	-	friendship 2.3
maalai	-	garland 198.5

சங்க இலக்கியத் தனி நூலுக்கென வெளிவந்த சொல் லடைவுகளில் வளர்ச்சி அடைந்த நிலையில் வெளியானது 1974, 1975 ஆம் ஆண்டுகளில் வெளிவந்த குறுந்தொகை, ஐங்குறுநூறு சொல்லடைவுகளாகும். இவ்விரு சொல்லடைவுகளும் ஆங்கிலம் மற்றும் தமிழில் அமைந்துள்ளன. இச்சொல்லடைவுகளில் இலக் கணம் மற்றும் சொல்லடைவு ஆகிய இரண்டு பிரிவுகள் காணப்படு கின்றன. இலக்கணத்திற்கும் சொல்லடைவிற்கும் ஒரேமாதிரி யான முன்னுரிமை தரப்பட்டுள்ளது.

இலக்கணப்பகுதியில் முன்னர்க் கூறியபடி ஒலியனியல் உருபனியல், தொடரியல் என்னும் மூன்று பிரிவுகள் காணப்படு கின்றன. இவற்றில் பெயர், வினை, பண்பு போன்றவை எடுத்துக் காட்டுகளுடன் விளக்கம் செய்யப்படுகின்றன. தன்வினை, பிற வினை, எச்சங்கள், அடைகள், பால், இடம், ஒருமை, பன்மை, உருபுகள், விகுதிகள், தனி, கலவை, தொடர் வாக்கியங்கள் ஆகி யவை தெளிவாகவும் விரிவாகவும் விளக்கப்பட்டுள்ளன.

Feminine markers
caayalal (255) she with beauty
kaatali (71) lady love

Verbal noun markers
oogkal (231) rising
aakutal (36) the act of becoming

Agent markers
kuzavi (92) child
mullai (21) thorny plant

First person singular
nookkinan
vantanen

Adjectives
irum, oru, aim

ஐங்குறுநூற்றுச் சொல்லடைவின் இலக்கணப் பகுதியில் சொற்களின் இலக்கணப் பொருள் மட்டுமன்றி அவை வருமிடங் களும் தரப்பட்டுள்ளன. மாறாகக் குறுந்தொகை இலக்கணப் பகுதியில் சில சொற்களுக்கு வருமிடங்கள் குறிப்பிடப் பெறும். சில சொற்கள் வருமிடம் குறிப்பிடப்படாமலும் அமைந்துள்ளன.

சொல்லடைவுப் பகுதியில் சொல்லின் ஆங்கில ஒலி பெயர்ப்பு, பொருள் மற்றும் ஆங்கில வருகையிடங்கள், இலக் கணக் குறிப்பு ஆகியவை தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் தரப் பட்டுள்ளன.

akat. Otu belly c.c. (case compound)
அகட்டு வயிறு வே.தொ. 81.1
kallaa which has not learned R.P.
கல்வி பயிலாத பெ.அ. 272.1, 294.1, 297.2
304.1, 429.4 (ஐங்)

ஒரே சொல் இரண்டு இலக்கணக் குறிப்புகளில் வெவ் வேறு மொழிச் சூழலில் வந்தால் சொல்லடைவில் அடுத்தடுத்துத் தரப்படும்.

1. aampal water lily - case base
   ஆம்பல் ஆம்பல் மலர் வே.அ. 21.2.38, 2.72.1, 96.1
2. s. subject
   எழுவாய் 43.2, 68.1, 93.2, 96.2
3. c.c. case compound
   வே.தொ. 40.8, 87.2 (ஐங்.)

மேற்கூறப்பட்ட எடுத்துக்காட்டின் மூலம் ஆம்பல் எழு வாயாகவும், வேற்றுமை அடியாகவும் வேற்றுமைத் தொகையாக வும் ஒரே நூலில் வேறுபட்ட சூழலில் பயன்படுத்தப்பட்டிருப் பதை அறிய முடியும்.

இதைப்போன்று ஒருசொல் பல பொருள்களில் வரும் பொழுது அகராதியில் காணப்படுவது போன்று பொருள் எண் ணிட்டுத் தரப்படும்.

keel relation C.B.

கேள் *1. உறவு, வே.அ. 2.5, 9.5, 111.3, 153.1, 419.1*

2. Wife C.B.
   மனைவி வே.அ. 21.1., 122.1, 123.1, 124.1

3. hearing C.B.
   கேட்டல் வே.அ. 107.3

கேள் என்னும் சொல் உறவு, மனைவி, கேட்டல் என்று மூன்று பொருள்களில் ஒரே இலக்கணக்குறிப்பின்கீழ் வந்துள்ளது.

சங்க இலக்கியத்தில் தனித்தனியாக வெளிவந்த சொல் லடைவுகள் பெரும்பான்மையும் ஆங்கில மொழியிலேயே அமைந்துள்ளன. சொற்கள் தொகுக்கப்பெற்று அவற்றின் வருகை இடங்கள் மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளன. பின்னர் வெளிவந்த ஐங்குறுநூறு, குறுந்தொகைச் சொல்லடைவுகளில் இலக்கணப் பகுதி, சொல்லடைவுப் பகுதி ஆகிய இரண்டும் சிறப்பான நிலை

யில் அமைந்துள்ளன. சொல், அதன் (ஆங்கில ஒலிபெயர்ப்பு) பொருள், வருகையிடம், இலக்கணக்குறிப்பு ஆகிய அனைத்தும் ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் கொடுக்கப்பட்டுள்ளன.

சொல்லடைவு என்பது ஆரம்ப காலத்தில் சொற்களின் தொகுப்பாகவே இருந்துள்ளது. ஒவ்வொரு நூலின் இறுதியிலும் இடம்பெற்ற அருஞ்சொற்கள் கொடுக்கப்படும் முறையே சொல்லடைவு தோன்ற அடிப்படையாக அமைந்தது எனலாம். அகராதியில் வளர்ச்சிநிலை ஏற்பட்டது போன்று சொல்லடைவிலும் படிப்படியான வளர்ச்சி நிலையினைக் காண முடிகின்றது. இப்போது பெரும்பான்மையான நூல்களுக்கும் சொல்லடைவுகள் வெளிவந்துள்ளன. முன்னைய சொல்லடைவுகளில் சொல் மற்றும் வருகையிடங்கள் மட்டுமே அமைந்திருந்த நிலை மாறிப் படிப்படியாக வளர்ச்சி நிலை அடைந்து இப்போது வெளியான சொல்லடைவுகள் சொல், பொருள், இலக்கணக்குறிப்பு வருகையிடங்கள் தவிர இன்னும் சிறப்பாகச் சொற்கள் வருகின்ற முழுச்சூழலும் இடம்பெற்ற சொல்லடைவுகளும் வெளிவந்துள்ளன.

சொல்லடைவு
1. அமைப்பு

1. இலக்கணப் பகுதி
2. சொற்புலப் பகுதி
3. சொல்லடைவுப் பகுதி

இலக்கணப்பகுதி

1. ஒலியனியல்
2. உருபனியல்
3. தொடரியல்

3. சொல்லடைவுப் பகுதி

1. பொருள்
2. இலக்கணக்குறிப்பு
3. வருகையிடம்

2. வகை

1. தரவு
2. மொழி
3. தகவல்

தரவு

1. தனி இலக்கிய நூல்
2. ஒரு ஆசிரியரின் ஒருநூல்
3. பலநூல் தொகுப்பு
4. ஒரு ஆசிரியரின் பலநூல்

2. மொழி

ஒரு மொழி

இருமொழி

3. தகவல்

முழுத் தகவல்

பகுதித்தகவல்

தமிழ்ச் சொற்களஞ்சியம்

ஒருமொழியின் வளர்ச்சியினையும் அதன் தனித்தன்மை யையும் தெரிவிக்கும் கருவி நூலாக அமைவது சொற்களஞ்சியம் (சொற்றொகை)ஆகும். சொற்கள் குறித்த ஆய்வுகள் இலக்கண உருவாக்கக் காலத்திலிருந்தே தொடங்கப்பட்டுள்ளன. தமிழ் முதல் இலக்கண நூலான தொல்காப்பியத்தில் சொற்களின் பாகு பாடு இடம்பெற்றது. மேலும் ஒவ்வொரு சொற்கள் குறித்தும் பெயரியல், வினையியல், இடையியலில் 44 இடைச்சொற்கள், உரியியலில் செய்யுளுக்கே உரித்தான 120 உரிச்சொற்கள் ஆகியன தொகுத்துத்தரப்பட்டுள்ளன. மேலும், அவற்றின் பொருளும் தரப் பெற்றுள்ளன. அப்பொருள்கள் மூன்று நிலையில் அமைந்தன.

உரிச்சொல் → பொருள்

1. ஒருசொல் ஒருபொருள்
2. ஒருசொல் பலபொருள்
3. ஒருபொருள் பலசொல்

இவ்வாறு சொற்பொருள் கூறும் தன்மை இலக்கணத்தின் ஒரு பகுதியாக இடம்பெற்றது. பின்னர்த் தனிநூலின் தேவை உணர்ந்து நிகண்டுகள் உருவாக்கப்பட்டன.

முதன் முதலில் நிகண்டு என்னும் சொல் வடமொழியில் வேதத்தின் அங்கமாய், வைதீகச் சொற்களின் பொருளை உணர்த் தும் கருவி நூலுக்கு மட்டுமே சிறப்பாக வழங்கப்பட்டது. பின்னர் நாளடைவில் சொற்பொருள் உணர்த்தும் நூலுக்கும் இப்பெயர்

வழங்கப்பட்டது. நிகண்டுகளில் முதன் முதலில் வந்த நிகண்டு திவாகர நிகண்டு. அதன்பின்னர் ஏராளமான நிகண்டுகள் தோற்றம் பெற்றன. நிகண்டுகளில் சொற்றொகை பாகுபாடு (தொகுதி, வகை) எனும் பல நிலைகளில் அமைந்திருந்தாலும் கீழ்க்காணும் மூன்று பிரிவுகளுக்குள்ளேயே அவை அடக்கப்பட்டன.

1. ஒருசொல் பலபொருள்
2. ஒருபொருள் பலசொல்
3. தொகைச்சொல்

இந்நிகண்டுகளே சொற்களஞ்சியம் உருவாக முன்னோடி களாக அமைந்தன.

தோன்ற காரணம்

நிகண்டுகள் பல நிலைகளில் தொகுதிகளாக வெளிவந் தாலும் அவற்றில் சொல்லுக்குப் பொருள் காண்பது எளிதான முறையில் இல்லை. எனவே, எளிமையான நோக்கு நூலின் தேவை ஏற்பட்டது.

நிகண்டுகள் மனனம் செய்யும் வகையில் சூத்திரங்களாக எழுதப்பட்டன.

தலைச்சொல் ஒருபொருட் பன்மொழி அமைப்பில் அமைந்திருந்தது.

வழக்கிலுள்ள எல்லாச் சொற்களும் நிகண்டுகளில் தரப் படவில்லை.

தற்காலத் தமிழுக்குத் தேவையான பல சொற்கள் நிகண்டு களில் தரப்படவில்லை.

நிகண்டுகளில் இடம்பெற்றுள்ள பல்சொற்கள் தற்காலத் தமிழில் வழக்கிழந்துள்ளன.

வடமொழிச்சொற்கள் அதிகம் இடம்பெற்றுள்ளன.

சொல் வழு,பொருள் வழு அதிகமாகக் காணப்படுகின்றன.

எதுகை,மோனைகளுக்குக் கொடுத்த இன்றியமையாமை பொருளுக்குத் தரப்படவில்லை.

இதனைப்போன்று ஏராளமான குறைபாடுகள் நிகண்டுகளில் காணப்பட்டன. நிகண்டு போல மனனக்கருவியாக அமையாமல் நோக்கீட்டு நூலாக அமைய சொற்களஞ்சியம் ஒன்று உருவாக்கும் அவசியம் ஏற்பட்டது.

சொற்களஞ்சியம்

சொற்களஞ்சியம் என்பது சொற்களின் தொகுப்பு. இது அகராதியிலிருந்து முற்றிலும் மாறுபட்டது.அகராதியில் சொல்லுக்கான பொருள் தரப்பட்டிருக்கும். சொற்களஞ்சியம் மூன்று பொருள்களை உள்ளடக்கியது.

1. கருத்து
2. தலைப்பு
3. பிரிவு

சொற்களஞ்சியத்தில் ஒருபொருட் பன்மொழிகள் இருக்க வேண்டிய கட்டாயம் இல்லை.மேலும், ஒருபொருட்பன்மொழி அகராதி ஒரு சொற்களஞ்சியம் ஆகாது. சொற்களஞ்சியத்தில் அகரவரிசை அட்டவணை மிக இன்றியமையாததாகும். இது சொற்களஞ்சியத்தின் இறுதியில் இடம் பெறும். சொற்களஞ்சியத்தில் கூறப்பட்ட எல்லா சொற்களும் அகரவரிசைப்படுத்தப்பட்டுப் பக்க எண்கள் நோக்கீட்டுக் குறிப்புகளாகத் தரப்பெறும். இதனால் ஒருசொல்லை வைத்துக்கொண்டு அது தொடர்பான சொற்களை அறிய இயலும். ஒரு சொல்லைப் பல இடங்களில் தருவதைச் சொற்களஞ்சியத்தில் தவிர்க்க வேண்டும். சொற்களஞ்சியம் தமிழ்ச் சொல்லிலக்கணம் நன்றாக அறிந்தவர்க்கு மட்டுமல்லாமல் அனைவருக்கும் பயன்படும் வகையில் அமையவேண்டும்.

சொற்களஞ்சிய முன்னோடிகள்

ஆங்கிலத்தில் ராஜெட் என்பவரால் எழுதப்பட்ட Thesurus என்பது தான் முதன்முதலில் உருவாக்கப்பட்து. இதில் சொற்கள் சொல்லுறவு அடிப்படையில் அமைந்தது. சொற்களைச் சொற்களங்கள் மற்றும் சொற்குவியல்களாகப் பிரித்து இச்சொற் கள்ஞ்சியம் அமைக்கப்பட்டுள்ளது. அடுத்து, பேராசிரியர் சு.ராசேந்திரன் எழுதிய தற்காலத் தமிழ்ச் சொற்களஞ்சியம் என்ற நூல். இதில் ஒரு சொற்களஞ்சியம் எவ்வாறு உருவாக்க வேண்டும், சொற்களஞ்சியத்தின் சொற்றொகை பாகுபாட்டின் பின்னணியில் அமையும் பொருண்மைக் கோட்பாடு, சொற்றொகையைப் பகுப் பதில் ஏற்படும் சிக்கல்கள், சொல் தேர்வு, முன்னிலைப்படுத் துகை, சொற்களஞ்சியத்தின் பயன் ஆகியன முதல் பகுதியிலும், இரண்டாம் பகுதியில் சொற்களஞ்சியமும் மூன்றாம் பகுதியில் அகரவரிசை அட்டவணை நோக்கீட்டுப் பக்க எண்ணுடனும் கொடுக்கப்பட்டுள்ளது.

சொல் தேர்வு

சொற்களஞ்சியத்தில் எந்த வகையான சொற்கள் இடம்பெற வேண்டும் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

- அகராதியினைப் போன்றே சொற்களஞ்சியமும் உயர் வழக்கு, நிலைபேறு பெற்ற தாழ்வழக்கு என்ற இரண்டு வழக்குகளையும் எடுத்துக்கொள்ள வேண்டும். (உயர் வழக்கு மாதம், நிலைபெறு தாழ்வழக்கு - மாசம்)

- தற்காலத்தமிழ் ஆங்கிலத்திலிருந்து பல சொற்களைக் கடன் வாங்கியுள்ளது. ஆங்கிலக் கடன் சொற்களைச் சொற்களஞ் சியத்தில் சேர்ப்பது அந்தந்தப் பதிப்பாசிரியர் முடிவே ஆகும்.

- பரவலாக்கப்பட்ட தாவரம் மற்றும் விலங்குப்பெயர்கள் சொற்களஞ்சியத்தில் இடம்பெறலாம்.

- கூட்டுச்சொற்களையும், தொடர்களையும் சொற்களஞ்சியத்தில் தருவதைப் பற்றிச் சொற்களஞ்சியத்தை உருவாக்குபவரே தீர்மானம் செய்ய வேண்டும்.

- சொற்களஞ்சியம் உருவாக்குகையில் சிக்கனம் கருதி எந்த எந்தச் சொற்களைச் சொற்களஞ்சியத்தில் சேர்க்காமல் விட்டுவிட வேண்டும் என்பதைத் திட்டவட்டமாய்த் தீர்மானித்துக் கொள்ளவேண்டும்.

- வழக்கிழந்த சொற்களைத் தற்காலத் தமிழுகென்று எழுதப்பட்ட சொற்களஞ்சியத்தில் சேர்ப்பது நல்லதல்ல.

பயன்

சொற்கள் எத்தனைப் பொருள்களைக் கொண்டுள்ளன. அவற்றின் இடையே உள்ள தொடர்பு ஆகியவை சொற்களஞ்சியம் வெளிப்படுத்தும் ஒரே கருத்தைத் தருகின்ற சொற்கள் எத்தனை உள்ளன என்பதையும், ஒரு சொல்லுக்குப் பதிலாக மற்றொன்றைத் தேர்ந்தெடுக்கும் அவசியமும் தெளிவாக்கும்.

துணைநூற்பட்டியல்

1. சண்முகம் பிள்ளை,மு., நிகண்டு சொற்பொருட்கோவை தெய்வப்பெயர் - மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.

2. சற்குணம்,மா., 2002, தமிழ் நிகண்டுகள் ஆய்வு, இளவழகன் பதிப்பகம், சென்னை.

3. சித்திரபுத்திரன், எச்., 2002, தமிழ் அகராதியியல், அனன்யா, தஞ்சாவூர்.

4. சுந்தர சண்முகனார்,1968, தமிழ் அகராதிக்கலை, பைந்தமிழ்ப் பதிப்பகம், புதுவை.

5. மாதையன், பெ., 1997, அகராதியியல், தமிழ்ப் பல்கலைக் கழகம்,தஞ்சாவூர்.

6. மூர்த்தி, து., 1983, கலைக்களஞ்சிய உருவாக்கம் சில அடிப் படைக்குறிப்புகள் மொழியியல் 6, அனைத்திந்திய மொழி யியற் கழகம், அண்ணாமலை நகர்.

7. ராசேந்திரன், ச., 2002, தமிழ்ச் சொற்களஞ்சியம், தமிழ்ப் பல்கலைக்கழகம்,தஞ்சாவூர்.

8. வீராசாமி, தா.வே., 1989, அகராதிக்கலை, தமிழ்ப் புத்தகா லயம், சென்னை.

9. ஜெயதேவன், வ., *1977*, தமிழ் அகராதியியல், அன்பு நூலகம், சென்னை.

10. ஜெயதேவன், வ., *1985*, தமிழ் அகராதியியல் வளர்ச்சி வரலாறு, ஐந்திணைப் பதிப்பகம், சென்னை.

11. முத்துத்தம்பிப் பிள்ளை, ஏ., *1985*, அபிதான கோசம், ஏசியன் எஜுகேஷனல் சர்வீஸ், (மறுபதிப்பு), புதுதில்லி.

12. சிங்காரவேலு முதலியார், ஆ., *1985*, அபிதான கோசம், ஏசியன் எஜுகேஷனல் சர்வீசஸ், (மறுபதிப்பு), புதுதில்லி.

13. சாமி, பி.எல்., (மு.ப), *1991*, அறிவியல் களஞ்சியம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

14. பெரியசாமி தூரன், மா.ப., (ப.ஆ), *1954*, கலைக்களஞ்சியம், தொகுதி ஒன்று, தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை.

15. பாலுசாமி, நா., (ப.ஆ.) *1991*, வாழ்வியற் களஞ்சியம், தொகுதி-*1*, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

கலைச்சொற்கள்

Antonym	-	எதிர்ச்சொல்
Bibliography	-	நூலடைவு
Canonical form	-	அடிப்படை வடிவம்
Compendium	-	பொருள் அமைவு
Concept	-	மூலக்கருத்து
Concordance	-	தொடர் அடைவு
Connotation	-	குறிப்புப் பொருள்
Designation	-	கருத்துப் பொருள்
Diagrams	-	படங்கள்
Dictionary	-	அகராதி
Dravidian Encyclopaedia	-	திராவிட மொழிக் கலைக்களஞ்சியம்
Encyclopaedia	-	கலைக்களஞ்சியம்
Encyclopaedia of Humanities	-	வாழ்வியல் களஞ்சியம்
Encyclopaedia of Science	-	அறிவியல் களஞ்சியம்
Encyclopaedia Dictionary	-	கலைக்களஞ்சிய அகராதி
General Encyclopaedia	-	பொதுக் கலைக்களஞ்சியம்
Glossary	-	சொற்பட்டியல்
Grammatical meaning	-	இலக்கணப்பொருள்
Hyperonym	-	மீச்சொல்
Hyponym	-	கீழ்ச்சொல்
Illustrative Pictures	-	விளக்கப்படங்கள்
Index	-	சொல்லடைவு

Lexical meaning - சொற்பொருள்
Lexicon - சொற்றொகுதி
Maps - படங்கள்
Morphology - உருபனியல்
Multicolour offset - பலவண்ண மாற்று அச்சடிப்பு
Multilingual Dictionary - பன்மொழி அகராதி
Paradigms - சொல்விரிவுகள்
Phonology - ஒலியனியல்
Polysemy - ஒருசொல் பலபொருள்
Pronunciation - ஒலிப்பு முறை
Quadra lingual Dictionary - நான்மொழி அகராதி
Range of Application - பயன்பாட்டு எல்லை
Reference book - நோக்குநூல்
Situation - மேற்கோள்
Source language - மூலமொழி
Special Encyclopaedia - சிறப்புக் கலைக்களஞ்சியம்
Structure - அமைப்பு
Subject - கருத்து
Synonym - ஒருபொருட் பலசொல்
Syntax - தொடரியல்
Target language - இலக்கு மொழி
Topics - தலைப்பு
Trilingual Dictionary - மும்மொழி அகராதி
Utility - பயன்பாடு